உ
சிவமயம்.

சுகுமாரன்.

ஓர் இனிய
செந்தமிழ் நாவல்.

மதுரை
தளவாய் அக்கிரஹாரம்.
போட்டோ கிராப்பர் R. S. சர்மா
எழுதியது.

தூத்துக்குடி,
அய்யனார் பிரஸில்,
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்தர் செய்தது.
1934.
விலை அணா 8.

உ

ஓம்.

சுகுமாரன்

ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

மதுரை

தளவாய் அக்கிரகாரம்

போட்டோ கிராப்பர் R. S. சர்மா

எழுதியது.

தூத்துக்குடி,

அய்யனார் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்தர் செய்தது. 1934. விலை அணா 8.

கிடைக்குமிடம்:-

அய்யனார் பிரஸ், தூத்துக்குடி.

முகவுரை.

வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழ்;
வாழிய பாரத மணித்திரு நாடு;

புதுவது புனைதலாகிய நவீனங்கள் பலவற்றைப் பேரறிஞர் பலர் எழுதித் தமிழணங்கை அலங்கரிக்கின்றனர். அத்துறையிலே "சுகுமாரன்" என்னும் இச்சிறிய நூலும் தமிழன்னையின் திருவடிகளில் தூவும் ஒரு சிறு மலரென்க.

இதன்கண் பழந்தமிழ்நாட்டின் மணமுறையும், தற்காலத் தமிழ்நாட்டின் சீர்கேடான ஆசாரங்களும் நன்கெடுத்துக் காட்டப்பட்டுள்ளன. உயர்ந்த நீதிகளும் ஆங்காங்கு வற்புறுத்தப் பெற்றிருக்கின்றன.

வாசகர்க்குப் படிக்கப்படிக்க இனிமையும், உயர்ந்த நோக்கங்களும், பரந்த சிந்தையும், விரிந்த அறிவும், சிறந்த பாஷாபிமானமும், அளிக்கும்வண்ணம் இந்நூல் மிகவும் கவனித்து எழுதப்பட்டிருக்கிறது.

ஆதலால் தமிழுலகம் இந்நூலைப்பெரிதும் ஆதரித்துப் போற்றுமென்று எதிர்பார்க்கின்றேன்.

இங்ஙனம்,
நூலாசிரியன்.

தைச் சுட்டிக் காண்பித்து) இத்தாமரை மலரைக்கண்டே நகைத்தேன். இதோ பார்! சூரியன் உதயமாவது தாமரைகளுக்கு எத்தகைய சந்தோஷத்தை விளைவிக்கின்றது! சூரியன் வரவர தாமரையின் இதழ்கள் மகிழ்வெய்தினபோல் மலர்கின்றன. ஆஹா! நண்பா! இதைப்போலத் தானே நாம் விரும்பியவற்றை அடையும்பொழுதெல்லாம் நம் மனத்தாமரையும் மகிழ்வடைகின்றது? என்று ஆலோசித்தேன். வேறொன்றுமில்லை. இது சகஜந்தானே?

சத்: ஆம் அரசே! அப்படித்தான் கவலை இருளை ஒத்தது. சந்தோஷம் ஒளியை ஒத்தது. சந்தோஷம் உண்டாவது மனப் பூரிப்பினாலன்றோ? அதுபோலவே அத்தாமரையின் விஷயமாகும்.

சுகு: ஆனால் இன்று நான் எழுந்ததுமுதல் இதுவரை ஒன்றும் விசேஷ சம்பவங்கள் நிகழாவிடினும், எதையோ ஒன்றை அடைந்ததுபோல என் மனம் என் சந்தோஷமடைகின்றது? இதன் கருத்தென்ன? (நிதானித்து) தவிர இதோ பார்! (தனது வலது தோளைக் காண்பித்து) எனது வலது தோளும் துடிக்கின்றது.

சத்: இது வரப்போகும் ஒரு சுப காரியத்தின் அறிகுறியாகும்.

சுகு: அப்படியானால் இன்று ஏதாவது சுபகாரியம் நடக்குமென்பதே உனது நோக்கமா?

சத்: ஆம் அரசே! அதன் கருத்தும் அப்படியே.

[உள்ளிருந்து கவிராயர் அவசரப்படேலெனக் கூறுகின்றர்].

பார்த்தீர்களா! நான் சொல்லியது இப்பொழுதே பலித்து விட்டது. நமக்கும் அவரில்லாமல் பொழுதுபோகிறதில்லை. இன்று அவர் வந்துவிட்டதும் ஒரு சுபகாரியத்தின் அறி குறியேயாகும்.

சுகு: சரிதான்! சத்தியசீலா! நீ சொல்லுவதெல் லாம் அநேகமாகச் சரியாகத்தான் நடக்கிறது நமக்கும் அந் தவைய கவிராயரில்லாமல் பொழுதுபோகிறதில்லை என்பது உண்மைதான். வரட்டும் அவர் போனகாரியத்தைப்பற்றி விசாரிப்போம்.

[கவிராயர் பிரவேசித்தல்].

சுகு: கவிராயரே! ஏது! தாங்கள் அளவுக்கு மேலா கச் சில தினங்கள் தாமதித்துவிட்டீர்கள்?............இருக் கட்டும்!............போனகாரியம் என்னவாயிற்று?

கவி: அவசரப்படேல்! (ஆசனத்தமருதல்).

சுகு: ஓ! மறந்தேன்! உண்மைதான்! தாங்கள் எப்பொழுதும் அவசரப்படாதவர் என்பதை மறந்தேன்.

கவி: ஆம்! முதலிற்சென்றேன்................

சுகு: எங்கு சென்றீர்கள் முதலில்?...........

கவி: அவசரப்படேல்! சென்றபிறகு...........

சுகு: (தனக்குள்) இதென்ன பெரிய சங்கடமாக இருக்கின்றது? குறுக்கே பேசினல் மீண்டும் அவசரப்படே

லென்றே கூறுவார். சும்மாவிருக்க முயன்றாலும் சமாசாரம் சீக்கிரம் வராது. என்ன செய்கிறது? பார்ப்போம்....... (வெளிப்படையாய்) கவிராயரே! பாக்கியையும் சொல்லுங்கள்.

கவி: அவசரப்படேல்!........அந்த......உனது...... மைத்துனனைக் கண்டேன்.

சுகு: யார்! எனது மைத்துனனையா? மணமுடியாத எனக்கு மைத்துனனேது. மாமன் மகனென்று சொல்லுங்கள்.

கவி: அவசரப்படேல்! எப்பொழுது மாமன் மகளை மணக்கக் கருதினையோ, அப்பொழுதே உனக்கு மாமன் மகன் மைத்துனனே என்பது நினைவில்லையா?.............. கண்டேனா?...........கண்டபிறகு உனது அபிப்பிராயத்தைக் கூறினேன்.

சுகு: (ஆத்திரத்துடன்) கூறினீரா? என்ன சொன்னார் பதிலாக?

கவி: அவசரப்படேல்!...........

சுகு: கவிராயரே! மறந்துபோய்விட்டது. இனி அவசரப்படாமல் கேட்பேன்.

கவி: உமது மைத்துனர் நன்றாக ஆலோசித்து.......

சுகு: உம்!...............

[கவிராயர் சுகுமாரர் முகத்தை நோக்கல்].

கவி: ஒருவாறு திருப்தியடைந்ததுபோலத் தங்கள் படத்தைத் தனது சகோதரிக்குக் காண்பிக்க எண்ணங் கொண்டு, என்னிடம் கேட்டார்.

சுகு: தாங்கள் என்ன செய்தீர்கள் படத்திற்கு?........

கவி: அவசரப்படேல்!............நான் முன்னதாகவே இம்மாதிரி விஷயங்களில் ஜாக்கிரதையுடனிருப்பதற்குப் பழக்கமுள்ளவனானபடியால் உம்முடைய உத்திரவின்றியே படமொன்றை என்னுடன் எடுத்துச் சென்றிருந்தேன். அதையே அந்தப்புரத்திற்கனுப்பினார்கள். சிறிதுநேரத்திற்கெல்லாம் தங்கள் மனைவி அதாவது தங்கள் மைத்துனரின் தங்கையின் படம் ஒன்று கிடைத்தது.

சுகு: மாமன் மகள் என்பதற்கா இவ்வளவு? எங்கே! கொடும் அதை................

கவி: அவசரப்படேல்!............மாமன் மகள் என்பதும் மனைவியைத்தானே குறிக்கும். அவர்களுக்கும் தங்கள் சம்மந்தம் சம்மதம் என்று தெரிந்துகொண்டேன்.

[படத்தைச் சுகுமாரன் கையிற் கொடுத்தல்].

சுகு: (தனக்குள்) ஆஹா! என்ன அழகு! தேவ கன்னிகையைப்போலன்றோ இருக்கின்றாள். என் மாமன் மகளை சிறு வயது முதல் நான் அந்த அதிகமாகப் போக்குவரத்தில்லாததால் தெரிந்துகொள்ளவில்லை. இவள் இவ்வளவு லக்ஷணமுடையவளென்று கேள்விப்பட்டதுகூடக் கிடையாதே. ஆஹா! சத்தியவல்லி!

[படத்தை முத்தமிடச் செல்லல்].

கவி: அவசரப்படேல்!...............

[சுகுமாரன் கவிராயரை நோக்கித் தனக்குள் நகைத்து].

சுகு: (தனக்குள்) ஆ! மறந்தோம். நம் கவிராயர் மிகவும் நல்லவர்தான். அவர் பைத்தியக் காரனைப்போல

"அவசரப்படேலலை" அடிக்கடி கூறிக்கொண்டிருப்பினும், அதுவும் அவசியமான சமயங்களில் உதவுகின்றது. தவிரவும் அவர் அதை எப்பொழுதும் வீணாக உபயோகிப்பதும் கிடையாது. பலர் முன்னிலையில் நான் என்னை மறந்து இப்படத்திற்கு முத்தமிடும் தவறுதலையும், பின் வரப்போவது இன்னது என்பதை நான் ஆராயாது செய்யப்போகும் காரியமும் தவறானது என்பதையும் தந்திரமாகத் தமது வசனத்தினால் தெரிவித்துவிட்டார் போலும். நாம் செய்யவிருந்ததும் தவறுதான். (நிதானித்து) ஆம்! ஒருவரின் உருவப் படத்தைக் கண்டதும் அன்னவர் குண தோஷங்கள் இன்னவை எனக் கண்டுகொள்ளும் நண்பன் சத்தியசீலனை இவ்விஷயத்தில் கேட்காதசெய்ய எத்தனித்தது எனது தவறுதான். முதலில் சத்தியசீலனிடம் அதையறிந்துகொள்ளுவோம்.

சுகு: சத்தியசீலா! இதோ இந்தப் படத்தைப்பார். உனது சாமர்த்தியத்தினால் இம்மங்கையின் குணதோஷங்களையறிந்து சொல் பார்ப்போம்.

[படத்தைச் சத்தியசீலனிடம் கொடுத்தல். சத்தியசீலன் சிறிது நேரம் உற்றுப்பார்த்து பயமும் ஆச்சரியமுமாக நடித்து]

சத்: அரசே! என்னென்று கூறுவேன்? அதிருஷ்டம் ஒரு புறமும் விதி ஒரு புறமுமன்றோ இருக்கின்றது.

சுகு: சத்தியசீலா! எப்படி? என்ன கூறுகின்றாய்? என்றால் காதலிக்கப்பட்ட அம்மங்கை குற்றமுடையவளென்று கூறுகின்றாயா?..........எனக்கு அவள் பாத்திரமானவளல்லவா? சற்று விளக்கச்சொல்............

கவி: அவசரப்படேல்!............

சுகு: (தனக்குள்) ஆம் மறந்தேன் கவிராயரை. அவசரம் கூடாதுதான்.

சத்: அரசே! இதற்குக் கவிராயர் கூறியதே மறுமொழியாகும். (தலை குனிதல்) ஆனால்............

[வருத்தம் நடித்தல்].

சுகு: ஆனாலென்ன?............ஏன் கவலைப்படுகிறாய்?

சத்: இல்லை............கவலையொன்றுமில்லை............இம் மங்கை தனது அழகுக்கேற்ப மிகவும் நற்குணமுடையவளும் தங்களுக்கேற்றவளுந் தான் என்றாலும்............

சுகு: உம்!............

சத்: இவளை மணப்பவருக்கு மாதம் மூன்றிற்குள்....

சுகு: எப்படி?............மாதம் மூன்றிற்குள்.

கவி: அவசரப்படேல்!............

சுகு: (தனக்குள்) ஆம் உண்மையே.

சத்: அபவாதமாக ஒரு குற்றமுமியற்றாதிருந்தும் மரணத்துக்கொப்பாகிய தண்டனையடைவார், என்பதையே நிச்சயமாகக் காண்பிக்கின்றது.

சுகு: (ஆலோசித்து) அப்படியானால்............சத்தியசீலா!............நான் இப்பொழுது அவளை மணக்க மறுத்தால்!............எப்படி நீர் சொல்லும் அத்துன்பத்திற்குள்ளாவேன்? சொல் பார்ப்போம்.

சத்: ஆம்! உண்மைதான்............மறந்தால்!............ விதியும் அப்படியிருந்தால் தாங்கள் நினைப்பதே சரியான தாகவிருக்கும். ஆனால் விதி அப்படி இருப்பதாகத் தெரிய வில்லையே............

சுகு: உண்மையாகவா கூறுகின்றாய்?......விதி அப் படி இல்லையா?

சத்: ஆம் அரசே! விதி அப்படித்தானிருக்கிறது. அதாவது இம்மங்கையின் படத்தைக் காணும்பொழுது இவளது நெருங்கிய உறவினரே இவளுக்குக் கணவராவா ரென்று தெரிவிக்கின்றது. தங்களைக்காட்டிலும் அப்படிப் பட்ட நெருங்கிய உறவினர் வேறொருவருமில்லை யாதலால் அது தங்களையே என்று குறிக்கவில்லையா?

சுகு: ஆம் உண்மைதான். இப்பொழுது நீ கூறு வது சரியானதாகத் தோன்றுவதுபோலிருக்கிறது. ஆனால் நான் இதை உண்மையாகக் கொள்ளுவதாகவிருந்தால், நீ சிறிது நேரத்திற்குமுன் எனது வலதுபுயம் துடித்தபொழுது கூறிய, "சுபகாரியமேற்படுமே" என்பதற்கு நேர்விரோத மாகின்றதல்லவா?............இதற்கென்ன சொல்லுகின்றாய்?

சத்: ஆம் அரசே! அதுவும் உண்மைதான். நான் கூறியது வீணாகாமல் அப்பொழுது பலன் "நற்செய்தி கிடைக்குமென" கூறிய உடன் படமும், சவிராயரும், சம்மதத்தின் தகவலும் கிடைத்ததன் மூலம் சரியாகிவிட்ட தல்லவா? இப்பொழுது இதைக் கூறுகின்றேன். நானாகச் சொல்லுவது ஒன்றுமில்லையே. விதியின் வலிமை அப்படிப் பட்டது என்று கூறினேன்.

சுகு: அப்படியானால் சத்தியசீலா! நான் எனது மாமன்மகளை மணந்து மாதம் மூன்றிற்குள் மரணத்திற்குச் சமானமான கஷ்டமடையவேண்டுமென்பது உண்மையென்று கூறுகின்றாய்?

கவி: அவசரப்படேல்!...........

சத்: (நகைத்து கவிராயரைப்பார்த்து) உண்மைதான் (சுகுமாரனை நோக்கி) அரசே! தாங்கள் முன்கூறிய மணத்தை எதிர் பார்ப்பினும் பின்கூறிய மரணத்தை எதிர்பார்க்கவேண்டாம். எதுவும் கடவுள் செயலெனினும், உலகில் நாம் நல்லதையே கருதவேண்டும். கூடியவரை கெட்டவை யணுகாவண்ணம் காணும்பொருட்டு நாம் கடவுளைத் தோத்தரிக்கவேண்டும்.

சுகு: (தனக்குள்) ஆ! ஈசனே! அந்தோ! மகிழ்தருமென மணத்தை விரும்பினேன். என்மாமன் மகளைக் கொள்ளவெண்ணினேன். ஆனால் நீயோ வினைதரும் மரணத்தால் என்னை எமன் கொள்ள எண்ணினாய். அந்தோ! நான் மரணத்திற்காகத் துக்கிக்காவிடினும்..................வலுவில் வினைதேடிக் கொள்பவனைப்போல எனக்கு நிகழவிருக்கும் கேட்டிற்கே துக்கமடைகின்றேன். இதற்கென்னசெய்வேன்? மணமுடித்துக்கொள்ள எனக்கு மனமில்லையென நான் மறுப்பினும், விதி என்னை மணமுடித்துக்கொள்ளச்-செய்யுமெனக் கூறுகின்றான் சத்தியசீலன்...........விதியை நம்மால் விலக்கமுடியாதென்பது உண்மையே. ஆயினும் கூடியவரை முயற்சி செய்தால், அவ்வளவு சிரமமின்றியேனு மிருக்குமென வெண்ணுகிறேன். இதற்குத் தகுந்த யோசனையைச் சத்தியசீலனிடமே நான் ஆலோசிப்பது

நலம். (வெளிப்படையாய்) சத்தியசீலா! என்ன செய்வேன்? நாம் கூடியவரை இச்சஞ்சலத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் உபாயம் ஏதாவது உனக்குத் தெரிந்தால் சொல்?

சத்: அரசே! அதெப்படி முடியும்? கடவுளறியாத ஓர் யோசனையையா நாம் செய்யப் போகின்றோம்............ தங்கள் மாமனுக்குப்பிறகு தங்கள் மைத்துனரே! இவ்வுலகில் சக்கிரவர்த்தியாக விளங்குகின்றார். அவரோ தனது சகோதரிக்குத் தங்கள் படத்தைக் காண்பித்துச் சம்மதம் பெற்றிருக்க, இனித் தாங்கள் மணம் செய்துகொள்ள முடியாதென்று கூறினுல், நமக்கு யுத்தமூலம் மரணமோ, தோல்வியோ, சம்பவிக்கும். அவர் மனம் கோணவண்ணம் மணம் முடித்துக்கொண்டாலும், ஒரு வேளை விதேனும் ஏற்படினும் கடவுள் கிருபையினுல் பலமும் செல்வாக்கும் பொருந்திய சக்கிரவர்த்தியாகிய தங்கள் மைத்துனர், தனது தங்கை புருஷன் என்பதனுலாவது உபகாரம் செய்யலாமன்றோ தங்களுக்கு!

சுகு: ஆம் உண்மைதான். ஆனுல் நீ சொரியபடி நாம் அந்தக் குறிப்பிட்ட மூன்றுமாத காலத்தையும் எனது மாமன் மகன் வீட்டிலேயே கழிப்பதாக இருந்தால் நாம் தப்பித்துக்கொள்ளக் கூடியவரை சௌகரியமாக விருக்குமல்லவா?

சத்: அரசே! நாம் எண்ணும் எல்லா எண்ணங்களும் சரியானதாகவே முடியுமென்று கூறிவிட முடியுமா? நாம் கூடியவரை முயலவேண்டியதுதான். பிறகு அவன் விதியின் வலி! எப்படியோ அப்படி நடக்கட்டும்.

[சேவகன் கடிதத்துடன் பிரவேசிக்கிறான்].

சே: அரசே! இக்கடிதம் தங்கள் மாமன் மகனார் சந்திரகிரி அரசர் வீரவர்மச் சக்கிரவர்த்தி யாரிடமிருந்து வந்திருக்கிறது.

சுகு: (அவசரத்துடன்) அப்படியா! (வாங்கிப் படித்து) சத்தியசீலா! நாம் யோசித்ததற்கு அனுகூலமாக வே கடிதமும் வந்திருக்கிறது. அவரும் இதில் "எனதன் பன் சுகுமாரருக்கு, கவிராயர் மூலம் கொடுத்தனுப்பிய கடிதப்படி எனக்கும், தங்கள் திருவுருவப் படத்தின்மூலம் எனது சகோதரிக்கும் சம்மதமே. வருகிற 12-வ யன்றே முகூர்த்தத்தை நடத்தலாமெனக் கருதுகின்றேன். முன்ன தாகவே வந்திருந்து தாங்களும் சிறிதுகாலம் இங்கே தங்கி, என்னையும் மகிழ்வித்துச் செல்வீரெனக் கருதுகின்றேன்.

இப்படிக்கு தங்கள்,

வீரவர்மன்.

என்று எழுதியிருக்கிறது. நல்ல வேளையாக நாம் எண்ணிய வண்ணமே முடிந்தது எனினும், அவர் நிர்பந்தத்திற்காகவும் அவர்களுக்கு அத்தைமகன் என்னும் முறையாலும் தங்கு வதுபோலவிருந்து, நீ கூறிய அந்தக்கஷ்டகாலம் தீர்ந்ததும் திருப்புவோம்.

சத்: ஆம், அதுவும் சரியான யோசனைதான். இங்கு தங்கள் தந்தை காலமுதல் உள்ள முதன் மந்திரியாரைப் பிரதிநிதியாக நியமித்து நம் விஷயத்தைக் கூறிவிட்டு, அங்கு அந்த மூன்றுமாத காலத்தையும், மூன்று நிமிடங்க ளாக கழித்துவிட்டுத் திரும்புவோம்.

சுகு: ஆம் சத்தியவல்லீ! கவிராயரே! தாங்களும் எங்களுடனே சந்திரகிரிக்கு வரவேண்டும். இன்றே நாம் பரிவாரம் சூழப் புறப்படுவோம்.

கவி: நாணில்லாமலா! பருப்பில்லாமற் கலியாணமா?

(எல்லோரும் செல்லல்)

2-வது சீன்.

காலம்:—மாலை.

இடம். சந்திரகிரியில் ஓர் நந்தவனம்.

[சத்தியவல்லி, சுகுமாரன் படத்தைப் பார்த்துக்கொண்டிருத்தல்].

சத்: (தனக்குள்) ஆஹா! என்ன அழகு! மன்மதனை யொத்த கணவர். நானே இவ்வுலகிற் பாக்கியசாலி. நான் எண்ணியவண்ணமே எனது அத்தை மகனையே மணந்தேன்.

[படத்தைப் பார்த்தவண்ணமிருக்க காமவல்லி மறைவாக வருதல்].

காம: (தனக்குள் பெருமூச்செறிந்து) சத்தியவல்லியின் அதிருஷ்டமே அதிருஷ்டம். நல்ல அழகிய கணவனை யடைந்தாள். பாக்கியசாலி! ஆனால் நானோ துர்ப்பாக்கியசாலி. எனக்கும் அப்படி அழகிலும் குணத்திலுமமைந்த கணவன் கிடையாமற்போய்விட்டது. (நிதானித்து) ஐயோ! எனது புருஷனின் தங்கை சத்தியவல்லி என்றும்பாராது, அவளுக்கு நல்ல கணவன் கிடைத்திருப்பதற்கு நான் ஏன் பொறாமைகொள்ளவேண்டும்? உலகில் நாத்தியும், மதனியும் ஒத்திருக்கமாட்டார்களென்னும் வசனம் உண்மையாயிற்றே என் விஷயத்தில். ஆ! என்னசெய்வேன். அவன்

மீது பொருமைமாத்திரம் ஏற்பட்டாலும் பாதகமில்லே. (நெடுமூச்செறிந்து) அடாத செய்கை............எனக்கு மண முடிந்து சண்ணெனிருக்க, எனது நாத்தியின் கணவனிடமே என் நாட்டமும் செல்வதா? என்னசெய்வேன்? ஈசனே! ஆ! எப்படியாவது அந்தப்படத்தை அவளிடமிருந்து களவாடிச்செல்ல என் மனம் தூண்டுகின்றது. எனது பொருமையே இதற்குக் காரணம்போலும். சுகுமாரரோ! பகல் முழுவதும் தனது நண்பர்களுடன் சென்று பொழுதைப் போக்கி இரவே இவளிடம் வருவார். அதுவரை அவரை இவள் பாராமலிருக்கப் பொருமலன்றோ எப்பொழுதும் படத்தைப் பார்த்தவண்ணமிருக்கிறுள்...........இவள் படத்தைப் பார்த்தேனும் சுகிப்பது நியாயமேயென்றாலும் அது வனே எனக்குச் சகிக்கவில்லே. நான் இவளுக்கு மணக்க முடியுமுன்வரை இவளிடம் அதிகப் பிரியம்காட்டி வந்திருப்பினும், இப்பொழுதேனே, மணமுடிந்தபின் ஒரு மாத காலமாக இம்மாதிரி தோற்றுகின்றது. நான் இக் குற்றமுள்ள துராலோசனையை நிறுத்திக்கொள்ள வெண்ணினுலும் என் மனம் இடங்கொடுக்கவில்லே. ஆசையால் எப்படியாவது இந்தப் படத்தை இவளிடமிருந்து அபகரித்து வருந்தச் செய்யவேண்டும். (மறைதல்).

சத்: என்ன ரூபம்! என்ன அழகு! அழகுக்கேற்ற பெயர். அவர் பெயரை உச்சரிப்பதற்குள் எனக்கு என்ன ஆனந்தம். ஆஹா! சுகுமாரர்! இதன் பொருள் நல்ல பிள்ளே. உண்மையில் அவர் எல்லா விஷயத்திலும் நல்ல பிள்ளேதான். அழகிலும் குணத்திலும் சரீரவன்மையிலும் அவர்தான் உயர்ந்தவர். இப்பெரும் பேற்றைப் பதியாகப் பெற்ற எனது பாக்கியமே பாக்கியம்.

[காமவல்லி அழுகிறள்].

சத்: (படத்தை மறைத்துக்கொண்டு) ஆ! அதுயார்! ———......மதனி யாரோ! அப்படி யிருக்குமாயின் ஒருவேளை என்னைக் கோபிப்பார்கள். என்மீது இத்தனை நாட்களாகப் பிரியமாக விருந்தவர்கள், எனக்கு மணமுடிந்தபின் இவ்வொருமாத காலமாகவே என்னைப் புதுமாதிரியாக நடத்துகின்றார்கள். காரணம் என்னவென்றும் தெரியவில்லை. என்ன செய்கிறது.

[கவிராயர் மறைவாக வந்து கவனித்தல், மறுபடியும் காமவல்லி அழுவது சத்தம்கேட்டு சத்தியவல்லி திடுக்கிட்டுப் படத்தைக் கீழே வைத்துவிட்டு எழுந்து நாற்புறமும் திரும்பிப்பார்க்கிறள்].

ஆ! அதுயார்! மறுபடியும் இருமுவதுபோலச் சத்தங்கேட்கின்றது ஒருவேளை நம் கணவர்தானே? நம்மை வனனம் செய்வதற்காக இவ்வாறு அபிநயிக்கின்றாரோ. பிராணநாதா! பிராணநாதா!!

[தேடிச்செல்ல காமவல்லி பிரவேசித்தல்]

காம: பிராணநாதா!.......எங்கே பிராணநாதன்?... (படத்தைப்பார்த்து நெடுமூச்செறிந்து) சத்தியவல்லீ! எனோ நீ இப்பகாருபாயனைக் கணவனுயடைந்தது முதல் உன்மீது எனக்குப் பொருமை மூண்டுவிட்டது. அது என் மீது குற்றமில்லை. அது உன் தலைவிதி.

[காமவல்லி படத்தைப் பார்த்தவண்ணமிருக்கிறள்]

கவி: (தனக்குள்) ஆ! அதுயார் காமவல்லியம்மாளன்றோ; சத்தியவல்லியைத் தந்திரமாக அப்புறப்படுத்தி

விட்டு, இளவரசர் படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிருளே. பரபுருஷர் படத்தைப் பதிவிரதையர் இப்படி நோக்காரே. இன்னும் பார்ப்போம்.

காம: (தனக்குள்) சத்தியவல்லி! நான் இதோ உன் அழகிய பிராணநாதனை எடுத்துச்செல்லுகிறேன். பின்னர் நீ படத்தைக்காணுது வருந்துவாய். எனக்கு அப்பொழுது எவ்வளவு திருப்தியாக விருக்கும். (படத்தைக் குனிந்து எடுத்தல், கவிராயர் செடிகளினிடையிலிருந்தவண்ணம்.)

கவி: அவசரப்படேல்!...........

காம: ஆ! அதுயார்? (திகைத்து நாற்புறமும் திரும்பிப்பார்த்து) கவிராயரா! எங்குபோனாலும் இதொன்று வைத்தியக்காரனைப்போல அபிநயம் செய்துகொண்டு அரசனுக்கு உளவுகூறும் உத்தியோகத்தை வகிக்கின்றார்போலிருக்கிறது. எப்படியிருந்தாலென்ன நம் காரியத்தை நாம் பார்க்கவேண்டியதுதான். சக்கிரவர்த்தினியாகிய என்னை எவர் என்னசெய்ய முடியும். நான் இனி இங்கு அதிகநேரம் தாமதிக்கக்கூடாது. நான் சென்றபின் சத்தியவல்லி இங்கு வந்து என்னசெய்கிருளென்பதை மறைந்திருந்து பார்த்துவிட்டு பின்பு செல்லுகின்றேன்.

[மறைதல் சத்தியவல்லி பிரவேசித்தல்]

சத்: ஒருவரையும் காணுமே. (படத்தைக்காணுது திடுக்கிட்டு) ஆ! அந்தோ எனது அழகிய பிராணநாதரின் திருவுருவப் படத்தையும் பறிகொடுத்தேன்...........இந்த வேலையை யார் செய்திருப்பார்கள்? ஒருவேளை என் மதனியாரே செய்திருப்பார்களோ?....................அந்தோ! நான்

சந்தோஷிப்பதைக் கண்டு அப்படிப் பொருமை கொள்பவ ரொருவரும் இவ் வரண்மனையில் இருப்பதாகத் தெரிய வில்லையே. அப்படிச் செய்வதாக இருப்பினும், அதற்குக் காரணமாக ஒரு தவறுதலும் நான் எவருக்கு மியற்ற வில்லையே. என்னசெய்வேன்..............ஆ! என் பதியின் படம்! அந்தோ எனக்கு எப்படிப் பொழுதுபோகப்போகிறது. என் மதனியார் என்ன நினைத்தாலும் சரி! ஒரு வேளை அவரே அதை என்னை ஏளனஞ்செய்யக் கருதி யேனும் எடுத்துவைத்திருக்கிறாரா என்பதையறியவேண்டும்.

[செல்லுகிறாள் காமவல்லி பிரவேசித்தல்]

கா.ம: (தனக்குள்) என் யோஜனை பலித்தது. நான் தான் படத்தை எடுத்துக்கொண்டேனென்றெண்ணி என் னிடம் வருவாள். நான் இல்லையென் றே சாதிப்பேன். அதனால் படத்திற்காக அவள் வருந்துவதைக்காண எனக்கு எவ்வளவு சந்தோஷமாகவிருக்கும்? (படத்தைப்பார்த்து) ஆ! பாக்கியவதி சத்தியவல்லியே!..........இப்படிப்பட்ட சுந்தர புருஷனை யடையாத ஜன்மமென்ன ஜன்மம்?....... ஐயோ சத்தியவல்லீ! நீ பாக்கியசாலிதான்!.......ஆனால்! உனக்கு இவர் கணவராகக் கிடைத்தவரைதான் நீ பாக்கிய சாலி. இனிமேல் அப்படியில்லை. சத்தியவல்லீ! உன் வாழ்வைக் கெடுத்துவிடவேண்டுமென வன்றோ என் மனம் தூண்டு கின்றது. (சுகுமாரன் படத்தைப்பார்த்து) ஆ! (தன் மார்போடணைத்துக்கொண்டு) சுகுமாரரே! ஐயோ! சத்திய வல்லிக்குத் தகுந்த அழகர் நீரே! ஆனால்!..........நானும் மைக்காளாயிருந்தால், சத்தியவல்லியும் வேறுவீட்டுப் பெண் ணாயிருந்தால் அது சரிதான். எனக்கு நாத்தியாக சத்திய

வல்லி இருக்கின்றபடியால், அவள் உம்முடன் வாழ்வதைக் காணச் சகிக்கவில்லை. அதனுலேயே நான் உங்கள் இருவருக்குமிடையில் சதிசெய்யத் துணிந்தேன். (நிதானித்து) ஐயோ! சத்தியவல்லீ!............சீ!...........என்னயோசனை செய்தேன். சத்தியவல்லியின் வாழ்வைக் கெடுப்பானேன். அவள் அதிருஷ்ட வசத்தால் சுகித்திருந்தால் நமக்கென்ன? நிதானித்து) ஆனால் ஏனோ என் மனம் இடங்கொடுக்கவில்லை...........ஒன்று செய்தாலென்ன? எப்படியும் சுகுமாரரை மறக்க என் மனம் துணியாதிருக்கின்றமையால் எப்படியாவது அவரை என் வசப்படுத்திக்கொண்டால் நானும் சுகித்துக்கொள்ளலாம். ஏன்? சத்தியவல்லியும் சுகித்திருக்கட்டுமே...........ஆம்! யோசனைமாத்திரத்தில் இது மிகவும் நல்லதுதான். ஆனால் உலக விஷயத்தில் இது மிகவும் கெட்டதே. எப்படியிருந்தாலும் குருடன் விரும்புவது கண்ணைபோல, என் மனம் விரும்புவது சுகுமாரரையே. (நிதானித்து) நான் இங்கே நின்றுகொண்டிருந்தால் என்னைப் பின்புறத்திலிருந்து சுகுமாரர் பார்க்கும்படி நேரிட்டால் சத்தியவல்லியைப்போலத் தோன்றி, அவர் தனது திருக்கரங்களால், தன் காதலியை ஆலிங்கனம் செய்துகொள்ளுவதுபோலத் தொடலாமல்லவா? அப்படி ஏற்பட்டால் அதனாலாவது நான் சிறிது ஸ்பரிச சுகத்தையேனும் அடையமாட்டேனு? பின்னர் பலித்தமட்டில் பார்க்கிறது. இல்லாவிட்டால் தந்திரமாக அவர் தொட்டதையே காரணமாகப் பலவிதத்தும் நயமாக ஏமாற்றிச் சம்மதிக்கச்செய்தால், சத்தியவல்லியின் யோகத்துக்கும் என்னுடைய தாபத்திற்கும் பாதகமில்லாதவாறு நான் சுகத்தையடையலாம். இனி இன்றும் ஒரு சிறிதும் தவறிவிடப் போவதில்லை. (கவ

னித்து) ஆ! அதென்ன? இவர்கள் அசைவும் ஜனி! சத்திய வல்லியோ?.......... இல்லை! நாம் எண்ணியபடியே அதோ சுகுமாரரே! வருகிறார். அதற்குள் நாம் சத்தியவல்லியைப் போலவே நிற்கவேண்டும். எதற்கும் அவர் என்னைத் தீண்டிய உடன் திடுக்கிட்டவள்போல அபிநயித்து ஒன்றும் பேசாது அரண்மனை சென்றுவிடுவேன். மற்றவைகளைப் பின்பு நன்கு யோசித்து எப்படியும் சுகுமாரரைச் சம்மதிக்கச்செய்யும் வழியும் அதுதான்.

[உடையைச் சரிபடுத்திக்கொண்டு சத்தியவல்லியைப்போல ஒரு புறமாகத் திரும்பி நிற்றல். சுகுமாரன் பிரவேசித்தல்].

சுகு: (தனக்குள்) எனது ஆனந்தமே ஆனந்தம்! சத்தியவல்லிக்கு என்மீது எவ்வளவு பிரேமை? நான் வந்ததையுங்கூடக் கவனியாது, என் படத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். நான் இவளறியாமல் பின்புறமாகச் சென்று இவளது கண்களை எனது கரங்களால் மூடுகிறேன்.

[காமவல்லியின் கண்களைத் தனது இரு கரங்களால் மூடி முத்தமிடல். காமவல்லி திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தல்]

காம: ஆ! அதுயார்! (பயம் நடித்து ஏற இறங்க ஒருமுறை பார்த்துச் செல்லல்).

சுகு: (தனக்குள்) ஆ! என்ன பிழை செய்துவிட்டோம். ஐயோ! (தியானித்து) ஆம்! உண்மைதான். நான் சத்தியவல்லியை மணந்து பாதம் பூண்டிற்குள், அபவாதமாகப் பெருங் குற்றத்திற்குள்ளாகினேனே? சத்திய சீலன் கூறியதற்கு அநீதி இதுதான்போலும்! "அதிருஷ்

டத்திற்குப் புத்தி அநுசாரலை" என்னும் பெரியோர்களின் வாக்கு உண்மையாயிற்றே என் விஷயத்தில் எனக்கு வரவிருக்கும் விதிக்குத் தக்கவாறே இப்பொழுது மதியும் தோற்றியது. அடடா! மதிதான் குருடாயிற்று என் கண்களுமோ குருடுபட்டன? சத்தியவல்லி என்று எண்ணி இக்கண்கள் ஏன் அவளைக்கண்டு ஏமாறவேண்டும்? இதன்காரணந்தானென்ன?............ஆம் எனது உருவப்படம் அவள் கையிலிருப்பதை நான் தூரத்திலிருந்து வரும்பொழுதே கண்டதாலும், நான் அநுதினமும் சத்தியவல்லியைச் சந்திக்குமிடத்தில் காமவல்லியைக் கண்டதாலும்.........ஏன்? ....என்றுமில்லா வண்ணம் இன்று இக்காமவல்லி இவ்விடத்தில், அதுவும், என் உருவப் படத்துடன், சத்தியவல்லி நிற்குமிடத்தில் அவள் ஏன் தனித்து நிற்கவேண்டும். ஒன்றும் தோற்றவில்லையே. என்ன செய்வேன். நம் விதிவசத்தால் நேர்ந்தது நேர்ந்துவிட்டது. இவ்விஷயத்தைக் காமவல்லி எனது மைத்துனனிடம் தெரிவிப்பாளாயின் எனது கதி என்னவாகும்? எவ்விதியிலிருந்து, தப்பித்துக்கொள்ளச் சத்தியசீலனும் நானும் ஆலோசித்தோமோ, அவ்விதியிலேயே வலியத் தலையை நுழைத்துக்கொண்டேன். நான் செய்தது எப்படியும் தவறுதான். அதற்கு எத்தகைய தண்டனையை எவர் விதிப்பினும் நான் பெற்றுக்கொள்ள வேண்டியதே. ஆனால் உண்மையில் நான் கெட்ட எண்ணத்துடன் காமவல்லியம்மாளைத் தொட்டதாக அவர் நினைத்துக் கொள்ளாதிருக்கும் மார்க்கம் ஒன்றை மாத்திரம் செய்ய வேண்டும். நான் மரணதண்டனை யடைவதாயினும் பலாத்கார உணர்ச்சியுடன் அக்காரியம் செய்யவில்லையெனக் காமவல்லியம்மாளிடம் நேரில் கூறியபின்னரே செல்வேன்.

[சத்தியவல்லி பின்புறம் மெதுவாக வருதல்]

சத்: பிராணநாதா! (சுகுமாரன் திடுக்கிட்டு, சமாளித்துக்கொண்டு நகைக்குன்)

சுகு: எதற்கும் இவளிடம் நடந்தவற்றைக் கூறிவிடக் கூடாது (வெளிப்படையாய்) சத்தியவல்லி! இவ்வளவு நேரம் எங்கே சென்றிருந்தாய்? உனக்காக நான் எவ்வளவு நேரம் காத்திருப்பது?

சத்: பிராணநாதா! என்னை மன்னியும், நான் அவசரமாகச் சிறிதுநேரம் எதிர்பாராத விதமாகச் செல்ல வேண்டியிருந்தது. அதனால் தங்கள் மனத்திற்குச் சிறிது வருத்தம் கொடுக்க நேர்ந்தது.

சுகு: சத்தியவல்லி! நீ வராது சிறிது வருத்தத்தைத் தான் கொடுத்தாய். எல்லாம் விதியின் பயனென ஒன்றுண்டு. நாமாகச் செய்வது ஒன்றுமில்லை யல்லவா? அது போலச் சிறிது உனக்காக நான் தாமதித்ததும் அவ்விதியின் கூற்றெனவே நான் எண்ணுகிறேன்.

சத்: பிராணநாதா! என்ன கூறினீர்கள்? விதியா? ....விதியென்னும் வார்த்தையைக் கஷ்டமனுபவிப்பவரன்றி வேறொருவரும் ஒப்புக்கொள்ளுவதில்லை யல்லவா? விதியைப்பற்றித் தங்களுக்கென்ன கவலை ஏற்பட்டது. அல்லது இப்பொழுது மற்றவர்களைப் போல தாங்கள் விதியை நம்புவதற்குதகப்ப ஏதேனும் கஷ்டமடைந்தீரோ? உண்மையைக் கூறுங்கள். இதுவரை நினையாத விதியை இன்று நினைக்கக் காரணம்தானென்ன? தயவுசெய்து கூறுங்கள். நான் அவ்வளவுக்குப் பாத்திரமானவளல்லவா?

சுகு: (தனக்குள்) ஆ! மறந்தேன். இவளிடம் கூறக் கூடாதென எண்ணிய நானே இப்பொழுது அகப்பட்டுக் கொண்டேன். (யோசித்தல்)

சத்: பிராணநாதா! ஏன் ஒன்றும் பேசாதிருக்கின்றீர்கள்? நான் தாங்கள் வரும்பொழுது தங்கள் மனத்தை வழக்கம்போலச் சந்தோஷிப்பிக்க இங்கில்லாதது என்மீது குற்றந்தான். அதற்காகத் தாங்கள் என்மீது இவ்வளவு வருத்தங்கொண்டு, தாங்கமுடியாத கஷ்டமடைபவரே ஒப்புக்கொள்ளும்படியான விதியை என் அடிக்கடி கூறி என்னை வருத்துகின்றீர். நாதா! உண்மையை என்னிடம் கூறக்கூடாதா?

சுகு: (தனக்குள்) சரி! எப்படியும் நானிவளிட மிருந்து தப்பிக்கும் வழியைத்தான் ஆலோசிக்கவேண்டும். (வெளிப்படையாய்) சத்தியவல்லி! ஒன்றுமில்லை. விளையாட்டாக உன் மனத்தைப் பரிசோதிக்கவே அவ்வாறு கூறினேன். நான் உன்னை வருத்துவேனா? கண்மணி! அப்படியொன்றுமில்லை. மற்றவைகளைப் பின்பு பேசிக்கொள்ளுவோம். வா போவோம் வசந்தமண்டபத்திற்கு. (இருவரும் செல்லல் கவிராயர் வெளியே வந்து)

கவி: இதிலேதோ பெருத்த சூது நடக்கிறது. முதலில் காமவல்லியம்மாள், படத்தை, சத்தியவல்லிக்குத் தெரியாமல் களவாடி, அதைத் தேடுவதற்குத் தன்னிருக்கையை விட்டுச்செல்லத் தந்திரம் செய்து, அப்படத்தைக் காமவல்லி, தானே வைத்துக்கொண்டிருந்த சமயம் சுகுமாரர் காமவல்லியின் கண்களை மூடவும், உடனே ஒன்றும் பேசாது நிமிர்ந்துபார்த்துக் காமவல்லி சென்றதும், ஒன்றுக்

கொன்று சம்பந்தமற்ற விஷயங்களாகக் காணப்படுகின்றன. இளவரசரும் காமவல்லியும் ஒன்றுசேர்ந்து சாதிப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பார்கள், என்று எண்ணுவதாக விருந்தால் காமவல்லி "அது யார்" என்று கூறி மௌனம் சாதித்துச் செல்லவும் அரசர் பயந் தோற்றத்துடன் விழித்ததையும் காண அப்படி நினைத்துவிடுவதும் தவறெனத் தோற்றுகின்றது. ஒருவேளை..........நானிருந்ததைக் காமவல்லி அப்பொழுது அறிந்ததனால் இது நமக்கு முன் நடப்பது தவறு என அரசனுக்கு சூசகமாக அறிவிக்க அவ்வாறு செய்திருப்பாளோ? பின்னர் சத்தியவல்லி வந்ததும் சந்தோஷ முகத்துடன் வார்த்தையாடினார். இதெல்லாம் ஒன்றுக்கொன்று சம்மந்தமற்றவைகளாகக் காணப்படுகின்றதே. இப்பொழுது வந்த சத்தியவல்லி சிறிது முன் வந்திருந்தால் சிறிதாவது விஷயம் புலப்பட்டிருக்கும். எதற்கும் நாமாவது விசாரிப்போமென்றால், அதுவும் கூடாததாக விருக்கின்றது. சமயத்துடனே தெரிவித்தோமோ இருவரும் சந்திக்கநேர்ந்த தவறான காரியம். அப்படியிருக்க இதை முழுதும் நாமறிந்துகொண்டிருக்கிறோமென இளவரசராவது, காமவல்லியாவது அறிந்துகொண்டால், அரசர் வெட்கமும், அரசி கோபமும் அடைவர். மிகுந்த உண்மைகளையும் அறிந்துகொள்ள முடியாது. தவிர இளவரசி தனித்திருக்குமிடம் நாம் வந்ததும் தவறாகக் கருதப்படலாம். ....ஒருவேளை சத்தியசீலர் முன் கூறியபடி இளவரசருக்கு நேரக்கூடிய துன்பத்திற்கு ஆரம்பமோ என்னவோ? எதற்கும் இது சம்பந்தமே நமக்குத் தெரியாததுபோலவேயிருந்து அதன் உண்மையை அறிந்து நம்மால் முடிந்த உதவி செய்வதுதான் நமது கடமை..........மேல் நடப்ப தென்னவென்பதைக் கவனிப்போம். (செல்லல்)

(திரைவிழுக)

இடம். சந்திரகிரியில் சத்தியசீலனது அறை.

காலம். முன்னிரவு.

[சத்தியசீலன் தனதறையில் உட்கார்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறார்.]

சத்: ஆ! இதென்ன! என்று மில்லாது இன்று எனது இடக்கண் துடிக்கின்றது. இதனால் என்ன விளையுமோ? எனது நண்பராகிய அரசர் சுகுமாரருக்கு என்ன விளையுமோ. காலைமுதல் கவிராயரையும் காணேம். அவர் வந்தாலும் எனக்குச் சிறிது நிம்மதி யுண்டாகும். என்ன செய்வது? மனம் ஒரு நிலையி லில்லை. ஈசனே! எதுவாயினு மென்ன? விதியின் வலியை மாற்ற எவராலாகும்!........நேர மாகிவிட்டது. கடவுளைத் துதித்துப் படுக்கைக்குச் செல் வோம். கடவுள் கிருபையால் மாதம் இரண்டிற்குமேல் இடையூறின்றிக் கழிந்துவிட்டது. இன்னும் பதினைந்து நாட்களும் கழிந்துவிட்டால் சுகுமாரருக்குப் புனர் ஜன்மந் தான். எதற்கும் நாளைப்பொழுது நன்றாக விடிந்தால் கவிராயருடன் நன்கு ஆலோசித்துச் செய்வதைச் செய் வோம். (கடவுளைத் துதித்துப் படுக்கச் செல்லல்)

[கவிராயர் பிரவேசிக்கிறார்]

கவி: (தனக்குள்) எங்கே சத்தியசீலரைக்காணேமே. எப்படியாவது அவரைக் கண்டு இன்று நாம் கண்ட விஷயத் தைப்பற்றிச் சிறிதாவது, எவர்மூலமாகவாவது அறிந்திருக் கிறாரோவெனக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். (கத வைத் தொட்டுப்பார்த்து) கதவுகளெல்லாம் திறந்தபடியே தாளின்றி இருக்கின்றனவே. எங்கேனும் அவசரமாக

வெளியே சென்றிருக்கின்றாரு? (நாற்புறமும் திரும்பிப் பார்த்து) ஆ! அதோ சத்தியசீலர் படுத்துறங்கிவிட்டார் போலிருக்கிறது. அங்குமிங்கும் புரளுகின்றாரே! ஏதோ கனவு காண்கின்றாரோ!............ஆம்............உதடுகள் அசைகின்றன. (சத்தியசீலன் படுத்தபடியே)

சத்: ஆ!.......... சுகுமாரரே!...........வேண்டாம்.... தாங்கள் போகவேண்டாம்.........அது.......தங்களை விழுங்கி விடும்..........(புரண்டுவிழுதல்)

கவி: (தனக்குள்) விழுங்கிவிடுமா? இன்னும் பார்ப்போம்.

சத்: (எழுந்து உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டு) ஆ! இதென்ன புதுமை. நான் காண்பது கனவா நினைவா?..........நினைவுதான். அந்தோ சுகுமாரருக்கு நிச்சயமாக ஏதோ தீங்கு நேறுவது திண்ணம்தான். எதற்கும் நாமிப்பொழுதே, எந்நேரமாயிருந்தாலென்ன; அவரை இது முதல் கூடிய ஜாக்கிரதையாகக் கவனித்துவரவேண்டும். நான் இப்பொழுது கண்ட கனவானது, சுகுமாரருக்கு வரப்போகும் ஏதோ ஒரு கெட்ட காலத்தைக் காண்பிக்கின்றதெனக் கருதுகிறேன். ஐயோ! சுகுமாரரே!..........ஆம் நிச்சயம்தான். ....நான் காண்பது நடவாமல் நின்றுலன்றோ நலம்...........ஆ! நான் அன்று சத்தியவல்லியின் படத்தைக் கண்டதும் கூறிய பலன் நிறைவேறும் காலம் வந்துவிட்டது போலிருக்கின்றதே ....ஆ! ஈசனே! ஒரு குற்றமுமியற்றாத நற்குணமே உருவாயமைந்த, எனது உயிர்த் தோழராகிய சுகுமாரருக்கும் ஆபத்து நேரக்கூடிய சமயமும்

வந்துவிட்டதே. அது எத்தகையதாக விருக்கப்போகின்றதோ, என்று ஏற்படப்போகின்றதோ தெரியவில்லையே, எனக்கு உறக்கமும் வரவில்லையே; மனமும் நிம்மதியற்றிருக்கின்றது. என்ன செய்வேன். எதற்கும் நான் இப்பொழுதே சென்று சுகுமாரர் என்ன செய்கின்றார் எப்படியிருக்கின்றாரென்றாவது அறிந்து வருகின்றேன்.) எழுந்திருத்தல், கவிராயர் பிரவேசித்தல்.)

கவி: அவசரப்படேல்!............

சத்: யார்? கவிராயரா? ....கவிராயரே! இளவரசர் என்ன செய்துகொண்டிருக்கிறார்? எங்கிருக்கின்றார்?

கவி: உம்! சத்தியசீலரே! இளவரசரைப்பற்றிய விஷயம் நான் அதிகமாகக்கொண்டுவந்திருக்கிறேன். ஆயினும் முதலில் உமது வருத்தத்தின் காரணத்தைத் தெரிவியும். முதலில் உட்காரும். (இருவரும் உட்காருதல்)

சத்: தெரிவிக்கவும் வேண்டுமா? கனவு கண்டேன்! ஆம்............மிகவும் கெட்ட கனவே............சுகுமாரர் தனிச்சையாக விருக்கும் ஓரிடத்தில் சர்ப்பத்தைக் கண்டார் அதுவும் இவரையே வெகுநேரம் உற்றுநோக்கித் தன்னிடம் வரும்படி எப்படியோ இவரை அழைத்துக்கொண்டது. ஆனால் நான் தடுத்தேன். அருகிற் சென்றார். பாம்பின் வலைக்குட்பட்டுவிட்டார். பாம்பு தன் வாயைத் திறந்து இவரை விழுங்கும் நிலைமையிலிருந்தது. நான் உடனே பயத்தால் கதறிக்கொண்டு படுக்கையினின்றும் புரண்டு கீழே விழுந்தேன். மிகவும் கவலைக்கிடமான இக்கனவு என் மனதைப் புண்படுத்திவிட்டது. ஆகையால் நான் இப்

பொழுதே சுகுமாரனைக் காணக் கருதுகிறேன். இப்பொழுதே இவ்வளவு நேரம் சுகுமாரருக்கு அத்தகைய நிலை ஏதேனும் நேரிட்டிருக்கலாமென்றே கருதுகிறேன்.

கவி: சத்தியசீலரே! ஒருவகையில் கொஞ்சம் அது வும் உண்மைதான். நீர் சுகுமாரனைக் காணுமுன் அது சம்மந்தமாகச் சில விஷயங்களை என்னிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

சத்: எப்படி? நேர்ந்தேவிட்டதா? ஏதோ கூறும் விரைவில்.

கவி: அதுவா! அந்தோ! எல்லாம் மிகவும் மர்ம மானதாகவே இருக்கின்றது. அது சம்மந்தமாக நாம் எதையும் எந்த விதத்திலும் தீர்மானிக்க முடியாத சம்பவ மாகவே இருக்கிறது.

சத்: பாதகமில்லை. சொல்லும் சீக்கிரம். ஆனால் தாங்கள் சொல்லுவதிலிருந்தே அவ்வளவு தூரம் எளிதாக ஒருவர்மீதும், தவரான அபிப்பிராயம் கொள்ளமாட்டேன். நிர யோசித்த பின்னரே தீர்மானிப்பேன். தாம் கண்ட விஷயத்தை முதலிற் கூறும்.

கவி: நான் வழக்கம்போல நந்தவனத்தின் ஓரமாகச் சென்றுகொண்டிருந்தேன். (நெடுமூச்செறிதல்)

சத்: உம்............

கவி: அப்பொழுது காமவல்லியம்மாள் மறைவாக ஓர் மரத்தின் ஓரமாக நின்றுகொண்டிருந்தார்கள். அந்த

சமயம். சத்தியவல்லியம்மாளும் மற்றொரு புரத்தில் உட்கார்ந்துகொண்டு, சுகுமாரர் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். எனக்கும், அப்பொழுது பொழுதுபோகவில்லையாதலால், என்ன நடக்கிறதெனக் கவனிக்கக் கருதி நானும் ஓர் இடத்தில் மறைந்து நின்றுகொண்டிருந்தேன். அப்பொழுது காமவல்லியம்மாள் இருமவும், சத்தியவல்லி திடுக்கிட்டு "யார் அது" என்று கேட்டுக்கொண்டே படத்தைக் கீழே வைத்துவிட்டு, எழுந்து தேடச் சென்றுவிட்டார்கள். உடனே காமவல்லி அப்படத்தைத் தான் எடுத்துக்கொண்டாள்...........

சத்: கவிராயரே! ஏன் நிறுத்திவிட்டீர்கள்? படத்தை அவள் எடுத்துக்கொண்டதனாலென்ன? நாத்தியும் மதனியும் தானே. விளையாட்டுக்கு அவ்வாறு செய்திருக்கலாம். இதற்காகத் தாங்கள் ஏன் தயங்குகின்றீர்கள் மேலே சொல்லும்.

கவி: அவசரப்படேல்! ஆனால் நானும் இப்பொழுது நீர் நினைத்ததுபோலவே நினைத்தேன். அதன்பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் கண்ட காக்ஷியிலிருந்து நான் எதையும் தீர்மானிக்கக் கூடாதவனாகவிருக்கிறேன்.

சத்: எப்படி? தீர்மானிக்கக்கூடாத காக்ஷியா? மனித சக்திக்கும் மீறியதா? ஏன் இப்படி இடையிடையே நிறுத்தி விடுகிறீர்கள்.

கவி: அவசரப்படேல்!...........(நெடுமூச்செறிதல்)

சத்: (தனக்குள்) நல்ல சமயோசிதமான வார்த்தை.

உண்மைதான். சவிராயர் கூறுவது பொருத்தமானதே.

கவி : சிறிதுநேரம் சென்றதும் இளவரசர் சுகுமாரர் அந்தவந்து படத்துடன் நின்றுகொண்டிருந்த காமவல்லி யம்மாளை "கண்மணி" என்று கூறிக்கொண்டே ஆலிங்கனம் செய்துகொண்டார்.

சத் : எப்படி? ஆலிங்கனம் செய்துகொண்டாரா? இளவரசரா?

கவி : அவசரப்படேல்..........ஆனல் இதற்கிடையில் ஒன்று மாத்திரம் கவனிக்கத்தக்கது. ஆலிங்கனம் செய்ய யத்தனித்து தன் தேகத்தில் சுகுமாரர் கரம் பட்டபின், "ஆலிங்கனம் செய்து அநேகமாக முடிவுபெற்றதென்றே கூறலாம்," அதற்கிடையில் காமவல்லியம்மாளிடம் பரபரப் பொன்றுமில்லை. ஆனல் விஷயமுடிந்ததும் சுகுமாரரை ஒருமுறை தலைமுதல் கால்வரை பார்த்து நடக்க ஆரம் பித்தாள்.

சத் : ஆ! அந்தோ! அப்படியா நடந்தது?..........

கவி : ஆம்! சுகுமாரரும் பின்பு மெதுவாக ஏதோ சொல்லவாயெடுத்தார். காமவல்லியம்மாளும் அதை எதிர் பார்க்காமலில்லை. ஆனல் அவர் நா எழவில்லை. பின்னரே காமவல்லி விரைவாக அந்தப்புரமடைந்தாள். சுகுமாரரை நான் அப்பொழுது கவனித்தவளவில் மிகவும் துக்கக ரமானவர் போலக் காணப்பட்டாலும், அவ்வளவதிகமாகத் தோற்றவில்லை. அப்பொழுதே சத்தியவல்லி அங்கு வர, பழைய முகம் மாறிச் சந்தோஷமாகவே சம்பாஷித்துச் சென் றனர். ஆனல்!..........இதற்கிடையில் ஒன்று கூற மறந்து

விட்டேன். காமவல்லியம்மாள், படத்தைத் தன் கையில் எடுத்தவுடன் எதோ தீர்மானித்ததாக அவள் முகம் எனக்குக் கூறியது. நான் எனது வழக்கப்படியுள்ள மொழியாகிய அந்த "அவசரப்படேல்" என்பதை அப்பொழுதும் கூறு திருக்கவில்லை. நான் அப்படிக் கூறியதும் காமவல்லி களவிலகப்பட்ட திருடனேபோலத் திடுக்கிட்டு விழித்து என்னை வெறிக்க நோக்கித் தனக்குள் எதேதோ கூறிக்கொண்டாள். அதிலிருந்து அவள் விஷயத்தில் எதோ நான் சிறிது அறிந்திருப்பதாக அவள் எண்ணுவதுபோல எனக்குப் புலப்பட்டது. நான் இருக்கிறேனென்பதைக் காமவல்லி அப்பொழுதே அறிந்திருந்தும் முன் ஏற்பாட்டின்படியோ வேறெவ்விதமோ, சுகுமாரர் தன்னை ஆலிங்கனம் செய்யச் சம்மதித்திருந்ததிலிருந்து எனக்கு எதையும் தீர்மானிக்க முடியவில்லை. இதைத் தங்களிடம் கூறி இருவரும் ஆலோசித்தால் ஒருவேளை இதன் உண்மை விளங்குமெனக் கருதியே நானிங்கு வந்தேன்.

சத்: ஆம்! கவிராயரே! தாங்கள் கூறுவது உண்மைதான். இது விஷயத்தில் நாம் எதை எப்படித் தீர்மானிக்கிறது. இதை இளவரசரிடமே கேட்டுத் தெளியலாமென்றால் நமக்கு ஒளிக்கும் இரகசியம் இதுவரை அவர் வைத்துக் கொண்டதில்லையாதலால், இதுவும் ஒருவேளை அவர் சம்மதத்துடனே நடந்திருந்தால் வெட்கமும் கோபமுமடைவார். ஆசையால் இதுவிஷயத்தில் அதிகமாகக் காமவல்லி, சத்தியவல்லி, சுகுமாரர் ஆகிய மூவரின் விஷயங்களையும் அவரவரறியாவண்ணம் கூடியவரை அறிந்துவாரும்.

கவி: ஆம் சத்தியசீலரே! அதுதான் சரி! நான்

சென்று என்னுற் கூடியதை யறிந்து வருகிறேன். ஏதாவது நான் அறிந்துகொள்ளும்வரை நானுக உம்மிடம் வர மாட்டேன். அதுவரை என்னைத் தேடவேண்டாம். (செல்லல்)

சத்: பெரிய விடுகதையைப்போலிருக்கிறது. இதில் நாம் எவரைச் சந்தேகிப்பது? யாரைக் கேட்பது? விஷயமோ பெரியது. இதில் ஏதோ கொஞ்சம் எவர் சம்மதத்துடனே சூது நடக்கின்றது என்பது திண்ணம். ஆனல் இதுவிஷயத்தில் காமவல்லி வீரவர்ம மகாராஜாவிடம் மாத்திரம் ஒருவார்த்தை பிரஸ்தாபித்துச் சுகுமாரரை அவர் விசாரித்தால், கண்டிப்பாகச் சுகுமாரர், நியாயமான முறையிலோ, தவறுதலாகவோ காமவல்லியைச் சந்தித்த விஷயத்தை ஒப்புக்கொள்ளுவார். அப்பொழுது சுகுமாரனுக்கு என்ன நடக்கும்..........இதுவிஷயத்தில் நியாயமோ தவறோ சுகுமாரர் விஷயத்தில் காமவல்லி மௌனம் சாதித்தாளாயின் எவ்வித ஆபத்துமில்லை. இதற்கென்ன செய்வது? எவர் போய்க் காமவல்லியைக் காண்பது? என் போலியர் அதை நினைப்பதும் பெருந் தவறான காரியம். எதற்கும் கவிராயர் எங்கும் செல்லலாமாதலால் அவர் தன்னுலியன்றதை அறிந்து வரட்டும். பின் கடவுள் கிருபையும், சுகுமாரருக்கு ஆயுள்பலமுமிருந்தால் என்னுலியன்றதையும் நானும் செய்கிறேன். எதற்கும் இது சம்மந்தமாக நான் ஏதாவது தெரிந்துகொள்ள முடியுமாவென முயற்சிக்கிறேன்.

(செல்லல்)

3-வது சீன்.

இடம். சந்திரகிரியில் காமவல்லியின் அந்தப்புரத்தில் சயன அறை.

காலம். இரவு.

[சுதுமாரர் ஆலோசித்தவண்ணம் அந்தப்புரத்தை நோக்கி வருதல்.]

சுகு! (வெளியிலிருந்தவண்ணம் தனக்குள்) அனியாய மார்க விளையை விலக்கு வாங்குவதேபோல, மாமன் மகளை மணக்கும்பொழுதே தெரிந்திருந்தும் அகப்பட்டுக்கொண் டேன். இவ்வளவு நேரம் காமவல்லி என்ன செய்திருக்கின் றாளோ? ஒருவேளை வீரவர்மரிடம் இதைக் கூறி இருப்பா ளாயின் என்னைத் தேட ஆட்களும் அனுப்பப்பட்டிருப்பார் கள். நான் இதுவிஷயத்தைப்பற்றி ஒன்றும் சத்தியசீல னிடமும் கூறவில்லை. கூறவும் நான் அசக்தனாகவிருக்கி றேன். எனது உயிர்த்தோழனாகிய, அச் சத்தியசீலனும், "நான் ஒரு விழிகண் குருடனாயினேன்" என்றால் என்னை நம்பான், என்றும் என் மனச்சாட்சியே என்னைத் தடுத்து விட்டது. கடவுளளித்த கண்களிரண்டிருந்தும் காமவல்லி சத்தியவல்லியென வித்தியாசந் தெரியாத குருடன் நான் என்றால் வேறு எவர்தான் நம்புவார் என்னை. அந்தோ! வெட்கமும் குற்றமுமான விஷயம். நான் எவரிடம் சொல்லி என்ன? காமவல்லியின் நாவளவிலே இருக்கின்றது தென் னுயிர். எதோ என் உயிர்மீதிருக்கு மாசையால் ஒருவேளை இதுவரை அவள் அரசனிடம் கூறுதிருந்தால், எனது உண்மையைக் கூறி, நான் செய்த அக் குற்றத்தை மறந்து மன்னித்துவிடக் கேட்டுக்கொள்ளலாமென் றெண்ணியே

காளிக்கு இதுவரை வந்துவிட்டேன். ஆனால் அந்தப்புரத்தின் காவலரறியாமல் நான் எவ்வாறு உட்செல்வேனெனப் பயந்தேன். மற்றக் காவல்களைக் கடந்து நான் இதுவரை வந்ததே தவறு. ஏற்கனவே செய்த தவறுதலுக்கே மரண தண்டனையே கிடைக்குமென நினைக்கும் எனக்கு இதற்கும் மற்றொருமுறையாக இருமுறை மரணம் கிடையாதென்பதினாலேயே துணிந்து உட்புகுந்தேன். எது வரினும் வரட்டும். வீணில் கவலைப்பட்டுக்கொண்டே யிருப்பதைக்காட்டிலும் அகப்பட்டுக்கொண்டு இறந்துவிடுவதே நல்லதாகும். எதற்கும் இன்னும் சிறிது யோசித்துக்கொள்ளுகிறேன்.

[காமவல்லி தனது உள் அறையிலிருந்து கையில் சுகுமாரன் படத்துடன் மஞ்சத்தருகில் வந்து]

காம: (தனக்குள்) எனதெண்ணம் பாதியளவு முடிந்துவிட்டது. நான் நினைத்தபடி சுகுமாரர் என்னைச் சத்தியவல்லியென நினைந்து ஆலிங்கனம் செய்துகொண்டதும், நானென்று தெரிந்து பயங்கொண்டதும், நல்ல வேடிக்கையான சம்பவம். நான் நல்ல வேலை செய்துவிட்டேன். உடனே ஏறஇறங்கப் பார்த்துவிட்டுப் பதிலொன்றும் கூறாது வந்துவிட்டது சுகுமாரர் மனத்தை எவ்வாறு புண்படுத்திக்கொண்டிருக்கிறதோ பாவம். நான் செய்கிற ஏற்பாடெல்லாம் தவறாது இதுவரை நடந்துவருவதைப் போலவே, நான் சுகுமாரரும் வருவாரென எண்ணியிருப்பதுபோல வந்தால் என்ன செய்கிறதென்றே, இங்குள்ள ஏவலாளரை எல்லாம் தந்திரமாக அனுப்பிவிட்டேன். குற்றத்தைச் சுகுமாரர்மீதே சுமத்தி என்னைக் கொள்ளச் செய்ய வேண்டுமேயன்றி என்மீது குற்றம் வைத்துக்கொள்ளக்

கூடாது. பரபுருஷரைப் பார்ப்பதுவும் பாபமென இதுவரை விரதமனுஷ்டித்துவந்த நானே இவ்வாராமுறல் வேறெவர்தான் செடார். இதுவும் காலத்தின் கோலம் போலும்......... ஏனோ இன்று என் மனம் கலக்கமடைகின்றது. இப்பல கணியருகிலிருந்தாலும், ஒருவேளை காற்று வாடையினுல் தேகங் குளிறுவதுபோல என் மனமும் குளிராதா? (பல கணியருகிற்சென்று சுதுமாரரைக்கண்டு) ஆ! அதோ! சுகுமாரரும் நான் எண்ணியபடியே வந்துவிட்டார். அவர் இப்பொழுது இங்கு வந்துவிட்டால் நான் எப்படி நடந்து கொள்ளுவது?..........எதற்கும் நான் உரங்குவதுபோ லபிநயிக்கின்றேன். பிறகு அவர் போய்விடுவார்போலத் தோற்றினுல், கனவு காண்பதுபோலவோ, வேறெவ்விதமோ விழித்துக்கொள்ளுவதுபோலபிநயித்து இன்று எப்படியும் அவரை என் வலைக்குட் சிக்கச்செய்வேன்.

[படுத்துறங்துவதுபோலிநந்தல் சுதமர்ரன் பிரவேசித்தல்]

சுகு: (தனக்குள்) ஆ! இதென்ன? அந்தப்புரத்தில் காவலரெவரையும் காணேம். ஒருவேளை நான் செய்யும் இச்சத்தியமாகிய காரியத்திற்குக் கடவுளே இறங்கி அவர்க ளிங்கில்லாதிருக்கச் செய்திருக்கின்றுரோ? ஈசனே இது வரை இனிது முடிந்ததேபோல எல்லாவற்றையும் முடிப்பீ ராக. (கவனித்து) ஆ! அது யார்? காமவல்லியம்மா ளன்றோ? உரங்கிவிட்டார்கள் போலிருக்கிறது. நாமிங்கு வந்தும் பயனில்லாமற் போய்விட்டதே. எழுப்புவோ மென்றால், மாலை நடந்ததினும் அதிகக் குற்றம் படைத்த செய்கை இப்பொழுது எழுப்புவது. இதற்கென்ன செய் வது? சென்றுவிடலாமென்றாலோ, இரவு எவ்வாறு உரங்கு

வேன். கவலை என்னைக்கொன்றுவிடும்போலல்லவோ இருக்கின்றது. வேறொரு மார்க்கமுமில்லை, எனது தீவினையும் பாவமாகவிருந்து அதன் கூற்றைக் காமவல்லியும் குற்றத்தை வெளியிடாதிருந்தால் நான் காப்பாற்றப்படுவேனேயன்றி வேறு வழியில்லை. விதியின் கூற்றையறிந்தார் யார்? நான் வீணில் பகற்குருடனாகிப் பிறன் மனைவியைத் தொட்டது போதாதென, அந்தப்புரத்துள்ளும் நுழைந்ததும் சேர்த்து இரண்டு குற்றமெனக் கருதப்படுமுன் போய்விடுகிறேன்.... என் விதி வலிதாயிருந்தால் காமவல்லி கூறித்தீர்க்கட்டும். அவ்வளவுதான்.

[இரண்டடி நடக்கிறான் காமவல்லி படுக்கையிற் புரண்டுகொண்டே.]

காம: பிராணநாதா! பிராணநாதா!!

சுகு: (திடுக்கிட்டு, தனக்குள்) யார் அது? பிராணநாதனா ஒருவேளை வீரவர்ம மகாராஜனோ இன்று இங்கு வந்திருக்கிறாரோ? அப்படியிருக்குமாயின் என்பாடு ஆபத்துதான். பழைய குற்றத்தையவர் கருதாவிடினும் நாம் இங்கு வந்திருக்கும் குற்றத்திற்கே நம்மைத் தண்டிக்கலாம்.

காம: பிராணநாதா!...........

சுகு: (திடுக்கிட்டு, நாற்புறமும் திரும்பிப் பார்த்து) அந்தோ! ஒருவேளை காமவல்லியப்பாள், காமிக்கு வந்திருப்பதைக் கண்டே நான் ஒரு அயோக்கியனென்றெண்ணித் தன் பிராணபதியை உதவிக்குக் கூப்பிடுகின்றாளோ?......

காம: பிராணநாதா!

சுகு: (கவனித்து தனக்குள்) கனவு காண்கின்றாள் போலிருக்கிறது. உறங்கும் சமயத்தில் ஏற்படும் புலப்பத்தினால் சிலர் தன் மனத்துள் வைத்திருக்கும் பல இரகசியங்களையும் உளறுவது உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதுபோல இன்று நடந்த சம்பவத்தைப்பற்றி ஏதேனும் உளறிவிட்டால், அவள் மனத்தின் உண்மை வெளிப்படும். அதைத் தெரிந்துகொண்டேனும் செல்வோம்.

காம: பிராணநாதா! நான்தான் பொய்புரைத்தேன் அப்பொழுது. தாங்கள் என்னைக் கேட்டபொழுது ஒன்றுமில்லையென்றேன். உண்மைதான். சுகுமாரர்தான் அது. உண்மைதான் என்மீது குற்றமில்லை.

சுகு: (திடுக்கிட்டு) ஆ! நல்லவேளையாக நாமிங்கிருந்தோம். இன்னும் வீரவர்மரிடம் சொல்லவில்லையென்றே தெரிகிறது. இவள் விழித்தவுடன் கூறுதிருக்கும்படி நடந்த உண்மையையும், என்னுடைய தவறுதலையும் உரைத்துக் களிப்புடன் செல்வேன். அதோ காமவல்லியம்மாளும் கனவு நீங்கி விழித்துக்கொள்ளுகிறதாகத் தெரிகிறது. நாம் எதற்கும் சிறிது நேரம் தாமதிப்போம்.

[மெள்ளப்புரண்டு விழித்தல்]

காம: அதுயார்? பிராணநாதரா! பிராணநாதா! பிராணநாதா!

[ஓடிவந்து சுகுமாரனை ஆலிங்கனம் செய்துகொள்ளல்]

சுகு: (திடுக்கிட்டுத் திமிறிக்கொண்டு) அம்மணி!

காம: அம்மணி!............ (கவனித்து) சுகுமாரரா? ....இங்கும் வந்தீரா?

சுகு: அம்மணி! எவ்விதத்தும் தாங்கள் எண்ணுவது போல நான் குற்றவாளியல்லவென்று நிரூபிக்கவே இங்கு வந்தேன்.

காம: உம்!............நிரூபிக்கவா? சரிதான்!............ அதவும், இரவில் நல்ல நேரம்............ குற்றவாளியல்லவென்று தங்களை நிரூபித்துக்கொள்ள இந்தச் சாக்ஷியமே போதாதா?............ உம்!............ சரிதான் எதற்கும் உம்மைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்காக எவரும் வராவண்ணம் முதலிற் கதவைப் பூட்டிவிடும். எனது நாத்தியின் கணவனே என்ற ஒரு காரணத்திற்காக மாத்திரம் எனது அந்தப்புரத்திற்குள் நுழைந்த உம்மை இதுவரை சும்மா விட்டிருக்கிறேன். எவரும் நீர் இங்கிருப்பதைக் கண்டால் நம்மிருவருக்கும் வருவது இன்னது என்பதை நன்கறிவீர். முதலில் அந்த வேலையைச் செய்யும். (சுகுமாரன் கதவைப் பூட்டிவிடல்) இனி எவரும் வரார் இப்படி உட்காரும்.

சுகு: அம்மணி! மாலை நடந்ததே தவறானது அதனினும் தவறு நானிங்குட்புகுந்தது. அதனினும் தவறு, நான் இத்தனித்த அந்தப்புரத்திற்குள் உட்கார்ந்து பேசுதல்.

காம: சுகுமாரரே! நான் உம் வார்த்தைக்குச் செவி கொடுக்க வேண்டுமானால் உட்காரவேண்டியதே.

சுகு: (தனக்குள்) அந்தோ! நாமிங்கு வந்ததே பெருந் தவறு. (உட்காருதல்).

[காமவல்லி மற்றொரு நாற்காலியை அருகிலிட்டு அமர்தல் சுதுமாரன் தன் நாற்காலியைச் சிறிதுதூரம் இழுத்துச்செல்லல்.]

காம: அரசே! (நகைத்து) தவறாகவோ, நியாயமாகவோ தாங்கள் இங்குவந்தது வந்துவிட்டீர்கள். ஆனால்

தாங்கள் இங்கு செய்யப்போவது இன்னது என்பது மற்றவர்களுக்குத் தெரியாதென்பதும், தங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தும் இப்படிச் செய்வது அழகல்ல. தாங்கள் நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து, சரியான நியாயமான எண்ணத்துடன் இங்கு வந்தவராகத் தோற்றவில்லையே. நான் நாற்காலியை தமதருகிலிட்டுக்கொள்ளுவது எதற்காக? நாம் பேசுவது எவருக்கும் கேட்டுவிடக்கூடாதென்று எண்ணியேயன்றோ. தாங்கள் விலகிப்போவதைக் காண விகல்பமான எண்ணங்கொண்டவரைப்போலன்றோ தோன்றுகின்றது.

சுகு: (தனக்குள்) இதேது பெரிய சங்கடமாக முடிந்தது. நம் விஷயத்தை நாமிங்கு தாமதித்ததற்குள் பதின்முறை கூறியிருக்கலாம். இவள் கூறுகிறபடி இனியும் நாம் தாமதித்தால் எவரேனும் வந்துவிட்டால் நம்பாடு அதோ கதிதான். எதற்கும் சீக்கிரம் இவ்விடத்தைவிட்டுப் போய்விட வழிதேடவேண்டும்.

காம: சுகுமாரரே! ஏன் மௌனம் சாதிக்கின்றீர். ஏன்! (அருகில் நாற்காலியை இழுத்து உட்கார்ந்துகொண்டு) ஏதோ சொல்லவந்தேன் என்கிறீர்களே. எங்கே சற்று சொல்லுங்கள்.

சுகு: (நாணத்துடன்) மாலை நடந்த விஷயம் முழுவதும் என்மீது குற்றமில்லையென்று கூறிச் செல்லவே நானிங்கு வந்தேன்.

காம: சரிதான்! மாலை தாங்கள் நடந்துகொண்ட விதத்தைப்பற்றி இதுவரை நான் எவரிடமும் குறைகூற

விக்கிலையே. தங்களது கன்னிகையைக் கோருபவர்களாகிய என்னைப்போன்றவர்கள் அப்படிக் கருதுவதும் முறையல்லவல்லவா ?

சுகு : அம்மணி! நான் குற்றம் செய்தவனென்று தாங்கள் எண்ணியிருந்தாலென்ன செய்கிறது. என்ற என்னைத்துடரேனையே, தங்களிடம் அது அப்படியல்லவென உரைத்துச்செல்லவே வந்தேன். பலர் கப்புப்படியான வெட்கமும், கவலுதலுமான குற்றத்தை மறந்துவிட்ட தங்களிடம் நன்றியறிதலுடையவனாக இருக்கிறேன்.

காம : சரிதான்..........நானும் தங்கள் விஷயத்தில் மாலை நடந்தவற்றை ஆலோசித்த வகையில் தாங்கள் உண்மையானவர் என்பதற்காக நன்றியறிதலுடையவளாக இருக்கவேண்டியதே. தாங்கள் அதை எப்படிச் செய்திருப்பீர்களென்பதையுமறிந்துகொண்டேன். தங்களைப்போலுள்ளவர்கள் வேண்டுமென்றே சம்மதமின்றி அத்தகைய காரியங்களை இயற்றார்கள் என்பதையுமறிவேன்.

சுகு : அம்மணி! அம்மட்டும் நடந்தவற்றை வெளியே கூறாது என்மானத்தைக் காப்பாற்றியதற்காக நான் சந்தோஷிக்கிறேன். நான் வந்தவேலை முடிந்தது. சென்றுவருகிறேன். (எழுந்திருத்தல்).

காம : சுகுமாரரே ! சற்றுநில்லும். அதற்குள்ளாகவா தாங்கள் வந்தவேலை முடிந்துவிட்டது. இல்லை. இல்லை. நானன்றோ அப்படிக்கூறவேண்டும். நான் மாலை நடந்தவற்றை அரசர் முதலிய ஒருவரிடமும் தெரிவிக்காவிடினும் உம்மீது குற்றம் குற்றம்தானல்லவா ?

சுகு: அறிந்து செய்தாலன்றோ?

காம: உம். சரி! கொலைசெய்ய நினைப்பதே குற்றம். அதிலும் ஒருவனைக் கொலைசெய்துவிட்டு வேறொருவனை நினைத்து இவனை அறியாது கொன்றுவிட்டேனென்பது குற்றமா அல்லவா? தாங்களே சொல்லுங்கள். தாங்களும் ஒரு நீதி தெரிந்த அரசர்தானே.

சுகு: உண்மையில் அது குற்றம்தான். கொலை செய்ததாகக் கருதப்படும் மனிதனை கொலைசெய்யப்பட்டவனே மீண்டு, அவன் குற்றவாளியல்லவென நிரூபித்துவிட்டால். ....அது குற்றமாகாதல்லவா?

காம: அதைப்போல்!...........

சுகு: தாங்கள் இப்பொழுது குற்றமாகக் கருதும் அக்காரியத்தை நான் வேண்டுமென்று செய்திரேனென்று தாங்கள் ஒப்புக்கொண்டதுடன் நிவர்த்தியாகிவிட்டதல்லவா?

காம: (தனக்குள்) அப்படியா? பார்ப்போம். (வெளிப்படையாய்) சுகுமாரரே! என்ன சொன்னீர்கள். நிவர்த்தியாகிவிட்டதா? (நகைத்து) நன்றாகச் சொன்னீர்கள். தங்களைப்போலுள்ளவர்கள், அப்படிச்செய்ய மாட்டார்களென்றால் தாங்களும் அவர்களுள் ஒருவர் என்று நினைத்துக் கொண்டீர்களா? தவிர நான் நேர்முகமாக "அப்படித் தங்களை நான் நினைக்கவில்லை என்று கூறியதுண்டா? அதை யோசித்துப்பாரும்.

சுகு: (தனக்குள்) இதென்ன பெரிய சங்கடமாக முடிந்தது. இவள் கருத்துத்தானென்ன என்றும் தெரிய வில்லை. ஆனால் இவள் முதலில் என்னைக் குற்றவாளியல்ல வென்றும் கருத்துடன் பேசிவிட்டு, இப்பொழுது அதற்கு நேர் விரோதமாகத் திருப்பிக்கொண்டாள். என்ன செய் கிறது. எதற்கும் யோசிப்போம். (வெளிப்படையாய்) அம்மணி! தாங்கள் என்ன நினைத்துக்கொண்டு பேசுகின் றீர்கள் என்பதே எனக்கு விளங்கவில்லை. இப்பொழுது கடைசியாக நான் சொல்லுவதில் நம்பிக்கையின்றித் தாங்கள் என்னைக் குற்றவாளியென்றே தீர்மானித்துவிடுவதானால் ஒப்புக்கொள்ளவேண்டியதேயன்றி எதும் எதிர்த்துரையாட நியாயமில்லை. அது தங்கள் மனத்தைப் பொறுத்தது. ஒரு முறை என்னை அப்படி நினைக்கவில்லையென்று கூறி மறு முறை மறுக்கின்றீர். தங்கள் மன மாறுதலுக்கு நான் உத் தரவாதியல்ல. நான் மறுமுறையும், அக்குற்றத்தைச் வேண்டுமென்றியற்றவில்லையென்று தெரிவித்துக்கொள்ளு கிறேன். தாங்கள் அதை ஒப்புக்கொண்டு என்னைச் சீக்கிரம் செல்ல அனுமதி கொடுத்தாற் கொடுங்கள். இல்லையேல்!....

காம: சுகுமாரரே! வேண்டாம்! ஐந்து வந்தாலும் அவசரமாகாது பத்து வந்தாலும் பதட்டமாகாது என்பார் பெரியோர். நான் தங்களைக் குற்றம் செய்தவரென்றாவது, அல்லாதவரென்றாவது, முடிவாகக் கூறுததன் முன்பே ஏன் அவசரப்படுகின்றீர். நான் இன்னும் அரசனிடம் கூறு இருப்பதற்கே தாங்கள் நன்றியறிதலுடையவராக இருக்க வேண்டும்...........இன்னுந்தானென்ன...........என் நாவனி லே இருக்கின்றது உம் உயிரும், மானமும். ஆனால்........ என் மனம்போல.........ஆகையால் தாங்கள் செய்ததை நான்

பிறருக்குக் கூறிவிட்டாலும் அது குற்றமேயென்பதை ஒப்புக்கொள்ளுகின்றீரல்லவா? என்போல அதுவும் ஒரு சக்கிரவர்த்தினியிடம் தன் மனைவியைப்போலச் சம்மதமின்றி.... நடத்திக்கொண்டால்?...........அவர்கள் அதைக் குற்றமாகக் கருதினால்?...........தாங்கள் அதற்குக் கடமைப்பட்டவரல்லவா?

சுகு: (பெருமூச்சுவிட்டு) ஆம்! அதற்காகத் தாங்கள் என்னை என்னசெய்யவிருக்கின்றீர்கள். அதை நான் வேண்டுமென்றே செய்ததாகக் கருதப்பட்டால் அதற்கு மரண தண்டனையும் விதிக்கலாமென்பது எனக்குத்தெரியும்.

காம: அப்படி வாரும். அதைத்தான் கேட்டேன். சுகுமாரரே! தாங்கள் என்னை ஒரு பெண்பால், அதுவும் அந்தப்புரத்துள்ளவள்,........... பரபுருஷனுடன் இவ்வளவு தாராளமாக வார்த்தையாடுகின்றாளே என்றெண்ணவேண்டாம். செய்தது குற்றம் என்று நான் எண்ணும் நிலைமையில், கொடுக்கும் தண்டனையை ஆக்ஷேபணையின்றிப் பெற்றுக்கொள்ளவேண்டியதுதானே?...........அதுவும் அத்தண்டனையைப் பிராறியாவண்ணம் தங்களுக்குக் கொடுக்க நினைக்கும்பொழுது?...........

சுகு: (தனக்குள்) தண்டனை! உண்மைதான்! குற்றம்செய்தால்! (வெளிப்படையாய்) அம்மணி! வாஸ்தவம் தான் என் குற்றம் வெளிவாராதவிதத்தில் தாங்கள் கொடுக்கும் எத்தகைய தண்டனையையும் நான் பெற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

காம: சரி! நான் கொடுக்கும் தண்டனையை எவ்வித ஆக்ஷேபணையுமின்றி ஏற்றுக்கொள்ளுவீரல்லவா?

சுகு: ஆம் அம்மணி! ஏற்றுக்கொள்ளவேண்டியதே.

காம: நன்றாகக்கவனியும்............ நான் உமக்குக் கொடுக்கும் தண்டனையில் என் மனம் திருப்தியாகி நான் போகலாமென உமக்குக்கட்டளையிடும்வரை தாங்கள் எனக்குக்கட்டுப்பட்டவர்தானே? மறந்துவிடமாட்டீரே?

சுகு: ஆம் மறந்துவிடவில்லை............அதுவரை கட்டுப்படவேண்டியதுதான்.

காம: (எழுந்து) சரி! (அவர் கரத்தைப்பற்றி நாற்காலியருகிலழைத்து)இப்படி உட்காரும்.

சுகு: (கையைத்திமிறிக்கொண்டு) அம்மணி! பரபுருஷரைப் பதிவிருதையர் இப்படித்தொடலாகாதே?.......

காம: உண்மைதான். அது எனக்குத் தெரியும். ஆனால் தாங்கள் எனக்குக்கட்டுப்பட்டவர் என்பது ஞாபகமிருக்கட்டும். (சுகுமாரன் தலையிலணிந்திருக்கும் மணிமுடியைக் கழற்றிவைக்கின்றாள்.)

சுகு: (மையமர்த்தி) அம்மணி! இப்பொழுதுதானே கூறினேன்.

காம: ஆம்! எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. என் பதிவிருதைத்தன்மையை இன்று மாலையே தாங்கள் அபகரித்துக்கொண்டுவிட்டீர்கள். அக்குற்றத்திற்காகத் தானே தாங்கள் இப்பொழுது என்னிடம் கட்டுப்பட்டிருக்க நேர்ந்தது.

சுகு: சிவ! சிவ! (காதுகளைப் பொத்திக்கொண்டு)

அம்மணி! தாங்கள் என்னை அப்படி எண்ணவேண்டாம் என்று அப்பொழுதே கூறவில்லையா.

காம: (நகைத்து) இளவரசே! நன்றாகக் கூறினீர். விஷத்தை யொருவன் அறியாது உட்கொண்டாலும், அது தான் செய்யும் வேலையைச்செய்து தன் வேலையை முடித்து விடுவதேபோல, தாங்களும் வேண்டுமென்று செய்யவில் லையென்று வைத்துக் கொண்டாலும், நடந்த விஷயம் பதி விருதைத் தன்மையினின்றும் அப்பொழுதே என்னை நீக்கி விட்டது. (அவன் கழுத்தணியை அவிழ்க்கிறாள்.)

சுகு: (நகர்ந்துகொண்டு) அம்மணி! நானே அவைக ளைத்தங்களுக்கிரவுப்படி கழற்றிவைத்து விடுகிறேன் ஆனால் இப்பொழுது கூறியதை மறுபடியும் கூறவும், என்னைத்தொ டவும் மாத்திரம் வேண்டாம்.

காம: சரிதான்! நன்றாயிருக்கிறது. முன் ஜாக்கிர தையும் சம்மதமின்றியிருக்கும் ஒருவரை அவர்களறியாமலே மற்றொருவர் தன் மனைவியைப்போல நடத்தலாம். முன் ஜாக்கிரதையோடும், எதிரிலும், எனக்குக்கட்டுப்பட்ட ஒரு வரை நான்...........

சுகு: (திடுக்கிட்டு) அம்மணி! போதும்! ஏதோ எனக்கு கெட்டகாலமென்றே நினைக்கிறேன். தங்களபிப்பி ராயம்தான். எக்கருத்துடன் பேசுகின்றீர் தாங்கள்........... எனக்கு நேரமாகிறது. நான் செல்ல விடையளியும் தாங்கள் கொடுக்க விரும்பும் தண்டனையையும் விரைவிற்கூறும்.

காம: சுகுமாரனே! தாங்களோ வயதுவந்த ஆண்பிள்ளை. தங்களுக்குத் தெரியாததொன்றுமில்லை. அறிந்திருப்பீரென்றெண்ணியிருந்தேன். பாபம்............நீர்வெறும் வெள்ளை மனத்தினராதலின் அவ்வளவு சீக்கிரம் கண்டுகொள்ள முடியவில்லை. போகட்டும்........... தாங்கள் அவசரப்பட்டு வெளியேபோகாவிடில் அகப்பட்டுக்கொள்வீரெனக் கருதவேண்டாம். தாங்கள் இங்கு வருவீர்களென்று முன்னதாகவே அறிந்தே எவரும் இங்கில்லாதிருக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். நம்மிருவரைத் தவிர வேறொருவருமிங்கில்லையாதலாலும், தாங்கள் குற்றத்தை வெளியாக்காதிருப்பதற்காக நான் கொடுக்கும் தண்டனையாகிய............என்னைக் களிக்கச் செய்யும் தண்டனையை யேற்றுச்செய்யும்.

[வழிமறித்து நிற்றல்]

சுகு: அம்மணி! வெகுநன்று! எப்படி? முன் ஏற்பாட்டுடனிருக்கின்றீர்களா? தாங்கள் கூறுவதுஎவ்விதத்தும் பொருந்தாது. தாங்கள் இப்படிப்பட்டவர்களென்று தெரிந்திருந்தால் நான் இங்குவந்திருக்கவேமாட்டேன். தங்களுக்கு மிகவும் வந்தனம். சற்று வழிவிட்டு விலகிநில்லும்.

காம: ஆஹா! வெகு நன்று. எப்படி? இங்கு வந்திருக்கவேமாட்டீரா? ஏன்? என்போன்ற சக்கிரவர்த்திநிகள் வலியவந்து விட்டதாக நினைத்து அப்படிக் கூறுகின்றீரோ? அப்படி எண்ணிவிட வேண்டாம். தாங்கள் இப்பொழுதே வெளியே சென்றுவிட வேண்டுமானல் தங்களிடமிருந்து நான் பெற்றிருப்பதைதிரும்பப் பெற்றுச்செல்லும்.

சுகு: தாங்கள் எனக்கு எதைக்கொடுக்கப்போகின்றீர்

..........தண்டனைதானே. அதைப்பெற்றுச்செல்ல சித்தமா கவே இருக்கின்றேன்.

காம: நான் கொடுக்க வேண்டியதென்ன தெரியுமா தங்களுக்கு?.......... மாலை தாங்களென்ன கொடுத்தீர்....... அதையே.

சுகு: நான் எப்பொழுதும் தங்களுடன் பேசியது கூடக்கிடையாதே. நான் ஒன்றுங் கொடுக்கவுமில்லையே.

காம: ஒன்றும் கொடுக்கவில்லையா? மாலை நான் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பொழுது என்னகொடுத்தீர்?........ஞாபகமில்லையா? அதையே நான் திரும்பக்கொடுக்க வேண்டும்.

சுகு: அதுதானே என்மீது குற்றம். தாங்கள் கூறுவதழகல்ல நியாயமுமல்ல. தங்களுக்கு அதனால் பங்கமேற்பட்டுவிடும்.

காம: நன்று! நன்று!! பங்கமா? இனிமேலா ஏற்படப்போகிறது. எல்லாம் முன்பே முடிந்துவிட்டது. வாரும் (நெருங்குதல்).

சுகு: அம்மணி! தவருன காரியம் வேண்டாம். பிற மாதரெல்லாம் என்க்குத்தாய். அப்படியாயின் நான் உமக்கு மைந்தனுகவேண்டுமன்ருே?

காம: இதற்கெல்லாம் நான் ஏமாறியவளன்று. நான் சொல்லுவதைக் கேளும். மனிதனுக்கு உயிரினும் சிறந்தது வேறொன்றும் கிடையாது. நான் என் நாவளவில் வைத்

திருக்கும் உமது இரகசியம் வெளிப்பட்டால் என்னாகும் என்பதைச் சிந்தித்துப்பாரும். நான் உமது நன்மையைக் கருதுகிறேன். எனது இஷ்டத்தைப் பூர்த்திசெய்துவிடுவதால் நான் சுகத்தையும், உமது இரகசியத்தை நான் காப்பாற்றுவதால் நீர் உயிரையும் அடையலாம். வீணில் வார்த்தையாடிக் காலத்தைப் போக்கவேண்டாம். முள்ளைக்கொண்டே முள்ளைக்களைவதுபோலக் கெட்டதைக் கெட்டதைக்கொண்டே மறைக்கவேண்டும். இல்லையேல்............ பொய்முறைப்படி நடந்ததை நான், அரசரிடம் கூறவேண்டியதே............இப்பொழுது என்ன சொல்லுகிறீர்?

சுகு: அம்மணி! நான் என்ன சொல்லுவது? வேண்டாம்?........ஒருவனுக்குத் தெய்வீகமாக ஒரு கண் அம்மை வார்த்துப் பொட்டையானால், மற்றொரு கண்ணும் எதற்கென முழுவதையும் பொட்டையாக்குவாருண்டா? அதைப் போன்றே கூறும் தங்கள் வார்த்தையைச் சிறிதளவு யோசித்துப்பாரும்..........குற்றத்தை மன்னித்து என்னை விட்டுவிடும். இல்லையேல், நான் உயிரிழக்கவேணும் சித்தமாகவிருக்கிறேனேயன்றித் தங்கள் மனப்படி நடக்கமாட்டேன். எனக்கு விடையளியும். இதுவே எனது தீர்மானம்.

காம: எப்படி? உயிரிழக்கவாவது சித்தமாயிருக்கின்றீரா? ஏன்?............என்பொருட்டுத் தாங்கள் அவ்வாறு தங்கள் மனத்தைப் புண்படுத்திக்கொள்ளவேண்டாம். (தனக்குள்) இனி என்னசெய்வது?...........இன்று விட்டுவிட்டு மற்றொருமுறை இதைப்பற்றி முயற்சிப்போம். இதுதான் தகுந்த யோசனை. (வெளிப்படையாய்) அரசே! மாலை நடந்த விஷயம் எப்படி நடந்தது?..........என்பது

தங்கள் விஷயத்தில் இதுவரை சந்தேகமாகவே இருந்ததி னால், தங்களைப் பரிசோதிக்கவே இவ்வாறெல்லாம் செய் தேன். இப்பொழுது தாங்கள் நடந்துகொண்டமாதிரியி லிருந்து, நான் தங்களை உண்மையுள்ளவரென அறிந்து கொண்டேன். இனி நீர் போகலாம்.

சுகு: (மணிமுடி முதலியவற்றை எடுத்துக்கொண்டு) அம்மணி! தங்கள் பெருந்தன்மைக்கு நான் என்றும் நன்றி யறிதலுடையவனாகவிருப்பேன். சென்றுவருகிறேன். (செல்லும்பொழுது கைக்குட்டையைத் தவறவிட்டுச் செல் லுதல்).

4-வது சீன்.

இடம். சந்திரகிரியில் ஓர் நந்தவனம்.

காலம். காலை.

[சத்தியசீலனும் கவிராயரும் உட்கார்ந்து சம்பாஷித்துக்கொண் டிருத்தல்.]

கவி: சத்தியசீலரே! நான் எப்படி முயன்றும் கூடாததாகவே இருக்கின்றது. என்ன செய்வது? நாமே இனிச் சுகுமாரரை வலியக்கேட்டாலன்றி ஏதும் விளங்கா தென்றே தோற்றுகின்றது. அவர் செய்யும் காரியங்கள் மிகவும் ஆபத்தும் அதிசயமானதாகவுமிருக்கிறது.

சத்: கவிராயரே! உண்மைதான். விதியின் வயத் தளவே மனமும் செல்லுமென்பர் பெரியோர். அதைப்

போல ஒருவேளை சுகுமாரரின் கெடுமதியின் ஆரம்பமாகவு மிருக்கலாம். எதற்கும் தாங்கள் சொல்லுவதைப்போல அவர் நம்மைப் பகைத்துக்கொண்டாலும் பாதகமில்லை. உண்மையையறியவே முயலவேண்டும். (திரும்பிப்பார்த்து) அதோ சுகுமாரரும் வந்துவிட்டார். எதற்கும் நாம் மறைவி லிருந்து அவர் என்னசெய்கிறாரென்று கவனிப்போம். நாம் அவர் கண்ணிற்பட்டால் நம்மைச் சந்தேகிப்பார். தவிர நாமிங்கு, அதுவும் காமவல்லியம்மாளின் அந்தப்புரவெல்லைக் குள் வந்துவிட்டதே அவருக்கு நம்மீது பெருத்த சந்தேக மூட்டிவிடும். வாரும். (மறைதல்; சுகுமாரன் பிரவேசித்தல்)

சுகு : (தனக்குள்) பெரிய ஆச்சரியமாகவே இருக்கின் றது. ஒரு சக்கிரவர்த்தினி இவ்விதம் நடந்துகொள்ளுவா ளென நான் எண்ணவேயில்லை. அந்தோ! வெட்கம்!! இதை நான் எவரிடம் எப்படிக்கூறுவேன்: நடந்தவற்றை சத்திய சீலனிடமாவது கூறுவோமென்றால், அதற்கும் என் மனம் இடங்கொடுக்கவில்லை. அவனும் இதை நம்பான். என்ன செய்வது? ஆனால் அவன் நம்பாவிடினும் பாதகமில்லை. சொல்லத்தான் வேண்டுமென்றும் என் மனம் புறம் கூறு கின்றது. அந்தோ! எனது உயிரினுமினியதோழன் சத்திய சீலனுக்குமோ என் இரகசியங்களை மறைப்பது?.... ஆனால் என்மீது குற்றமோவென்னும் ஒரே சந்தேகத்தினாலேயே நானிதுவரை கூறாது மறைத்தேன். ஆஹா! உண்மையில் அவள் கெட்டவள்.........நான் இப்பொழுதே எப்படியாவது சத்தியசீலனைக்கண்டு, இரகசியங்களை அவசியம் வெளியிடு வேன். இனி அரைக்கணமும் தாமதியேன். அரைக்கண மும் பிறிந்திராத எனது நண்பனை நான் இன்று முழுவதும்

காணவில்லை. அதனால் என்னைப்பற்றி அவன் இதுவரை என்ன நினைத்திருக்கின்றானோ!...........நான் இப்பொழுதே அவனை காணவேண்டும். (இரண்டடி நடத்தல்)

கவி: (உள்ளிருந்தவண்ணம்) அவசரப்படேல்!.........

சுகு: (திடுக்கிட்டு) கவிராயரா? கவிராயரே! ஏன் மறைந்திருந்து கூறவேண்டும் வெளியேவாரும். சத்தியசீல னெங்கே?

கவி: அவசரப்படேல்! (வெளியே வருதல்.)

சுகு: கவிராயரே உண்மைதான். நான் ஒரு விஷயத்தில் அவசரப்படாது மறைத்து வைத்திருந்து அதை இப்பொழுது உம்மிடமும் சத்தியசீலனிடமும் கூறவந்தேன். சத்தியசீலனெங்கே?

சத்: (வெளியேவந்து) அரசே! (தலைவணங்கிநிற்றல்)

சுகு: சத்தியசீலா! ஏன் ஒருவாறு காணப்படுகிறாய். உன் முகம் ஏன் கவலையடைந்தவனைப்போலக் காணப்படுகிறது.

சத்: ஒன்றுமில்லையரசே! இன்று நான் விழித்த வேளையாயிருக்கலாம்.

சுகு: சத்தியசீலா! நீ ஒருநாளும் இவ்வாறு வார்த்தையாடியது கிடையாதே. நான் வருந்தினும் நீ என்னைச் சமாதானம் கூறிச்சந்தோஷிக்கச் செய்வாயே இப்பொழுது நீயே இப்படி இருப்பதைக்காண எனக்கு ஆச்சர்யமும் ஆலோசனையும் உண்டாகின்றது.

சத்: அரசே! அப்படியொன்றுமில்லையே. இருந்தாலும் அது மனித இயற்கைக்குச் சகஜந்தானே. பகலென்றால் இரவென்றும் வெயிலென்றால் நிழலென்பதும் ஒன்றைக் கொண்டு எப்படிமாறுபாடு உலகத்திலிருக்கிறதோ அதைப் போலச் சுகமென்றால் அதற்கு எதிரிடையாகக் கஷ்டமென்பது ஒன்றுண்டென்பது நாம் எதிர்பார்க்கவேண்டிய நியாயமல்லவா?

சுகு: சத்தியசீலா! இப்பொழுது அதைப்போல அப்படிப்பட்ட கஷ்டம் உனக்கென்ன நேரிட்டுவிட்டது ஏதேனும் அப்படியிருந்தால் என் மறைபொருளாகக் கூறவேண்டும்.

சத்: மறைபொருளொன்றுமில்லை. தாங்கள் பிறரை நம்பாதிருத்தலைப்போலத் தங்களிடமும் ஒருவர் அப்படி நடந்துகொண்டால் என்ன நினைப்பீர்கள்?

சுகு: சத்தியசீலா! அப்படி நான் இதுவரை ஒருவரையும் எப்பொழுதும் நம்பாதிருக்கவில்லையே.

சத்: அரசே! (நகைத்து) இதுதான் உலகவியற்கை. ஒருவன் பிறரை எவ்வளவுதூரம் எதிர்ப்பினும், இவன் எதிர்பார்க்குமளவுக்குக் குறைவாகவே தன்னிடம் அவர்கள் நடந்துகொண்டால்? அவன் மனம் எத்தகையதாக விருக்குமென்பது தங்களுக்குத் தெரியாததல்ல.

சுகு: சரிதான்! நீ பேசுவது இப்பொழுது எனக்கு ஒருவாறு புலப்படுகிறது. சத்தியசீலா! இதற்குத்தானா இவ்வளவுதூரம் பேசினாய். நான் உங்களை இவ்வந்தப்புரத்துட் கண்டபொழுதே தீர்மானித்திருக்க வேண்டியவன்.

இருந்தாலும் பாதகமில்லை. நானே அதைக்கூறுமுன் என் மீது குறைகூறுவானேன்.

சத்: நான் குறைகூறவில்லை. உண்மையில் மனித இயற்கை அப்படிப்பட்டது என்பதையே எடுத்துச் சொன்னேன். ஒருவன் தன்னினும் அதிகமாக மற்றொருவனை மதிப்பினும், தனக்கென ஒருபகுதி இரகசியம் காக்கப்படவேண்டியதே என்பது குற்றமாகுமா?

சுகு: சத்தியசீலா! வேண்டாம்! வேண்டாம்!! நானே அதை உன்னிடம் உரைக்கப்போகிறேன் என்றறிந்து கொண்ட பின்புமா ஒளிப்பவன்? சொல்லிவிடுகிறேன்.

சத்: எதைச்சொல்லிவிடப் போகின்றீர்கள்? இரகசியத்தையா?

சுகு: ஆம் இரகசியம்தான் ஆனால்!...........

சத்: ஆனாலென்ன? இங்கு நம்மைத்தவிர வேறெவருமில்லையே.

சுகு: உண்மைதான் வேறெவருமில்லை. ஆனால் நம் மனதுக்குள் முன்னிருந்த எண்ணங்களில்லையல்லவா?......... நான் நேற்று நடந்தவற்றைக் கூறினால் நீங்கள் என்னை நம்புவீர்களா? இதிற்சந்தேகமில்லையா? சந்தேகமே இல்லை.

சுகு: சந்தேகமே இல்லையா? சத்தியசீலா! எனக்கிப்பொழுது விளங்கிவிட்டது. என்னைப்பற்றி ஏதோ மாறுபாடான எண்ணம் கொண்டிருந்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது. ஆனால் உண்மையில் நீங்கள் நினைத்திருந்தவண்ணம் நான் குற்றவாளியல்லவென்றுமாத்திரம் கூறுவேன்.

சத்: அரசே! உண்மைதான். தாங்கள் சொல்வது போல நாங்கள் அவ்விஷயத்தை முன்பே அறிந்திருக்கிறோம். ஆனால் எப்பொழுதும் எல்லா விஷயங்களையும் என்னிடம் உரைக்கும் தாங்கள் இதை மறைத்து வைத்ததனாலும் அதுவும் சந்தேகத்திற்கிடமான சம்பவமாக விருப்பதாலும், அதை நாங்களறிந்து விட்டோமெனத் தங்களுக்குத் தெரிவிக்காமலிருந்து விட்டோம். ஆனால் இன்னும் ஒன்று மாத்திரம் எங்களுக்குப் புலப்படவில்லை.

சுகு: சத்தியசீலா! என் விஷயத்தில் மனமாரப்பாடுபடும் உனக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன். நடந்தவற்றை அறிந்தும், என்னை நம்புகிறாயே எனக்கு அதுவே போதுமானது. நான் ஒன்றுமாத்திரம் கூறுகின்றேன். அதாவது நீ சந்தேகித்தவண்ணம் நான் குற்றவாளியல்ல. நீங்கள் இப்பொழுது எண்ணியிருந்ததுபோல அவளும் என்னை எண்ணாதிருக்கக்கருதி, உண்மையை உரைக்க காமவல்லியின் அந்தப்புரம் சென்றேன். நான் சென்றதே தவறென நீ கூறலாம். ஆனால் சந்தர்ப்பம் அப்படியிருந்தது. நீ முன்கூறிய நிகழ்கால வினையை ஒத்ததாக அது எனக்குத் தோற்றியதாலும், ஒருகுற்றத்திற்கு ஒருவனுக்கு எவ்வளவு அதிகமான தண்டனை கொடுக்கலாமோ, அதற்கதிகமில்லாத அத்தகைய குற்றத்தை நான் செய்துவிட்டபடியால் அதினினும் அதிகமான தண்டனை கிடையாதாகையாலும், நான் அந்தப்புரம் செல்லத் துணிந்தேன். ஆனால்............ சத்தியசீலா! நடந்தவற்றைச் சொல்லவும் என்நாவு எழவில்லை. நானே ஏமார்ந்தேன்.

சத்: என்! அப்படிப்பட்ட சம்பவமா நேர்ந்தது?

சுகு: ஆம்!............ அந்தோ! ஒரு சக்கிரவர்த்தினி, கேவலம்......... ஒருவேவைசயினும் கடையளேபோல நடந்து கொண்டாள். நான் அப்பொழுதே மாலை அவளது முன்வற் பாட்டின்படியே வமார்ந்ததை அறிந்து, என் உயிரையும் இலக்ஷியம் செய்யாது பேசியபின்பே வெளியேவர அனும திக்கப்பட்டேன். நண்பா! சத்தியசீலரே! எப்படி நடந்தது என்பதை விவரித்துக்கூற இப்பொழுது என்னால் முடியாது.

சத்: சுகுமாரரே! வேண்டாம். எங்களுக்குவற்கனவே சிறிதளவு தெரியும். மற்றவைகளைப்பின்பு சொல்லலாம். எதற் கும் தாங்கள் அங்கு சென்றது தவறுதான். இதைப்பற்றி மேல் நடக்க வேண்டியவற்றை சாவகாசமாக ஆலோசிப் போம்...............இன்று வேட்டையாடும் தினமல்லவா? வழக்கப்படி வீரவர்ம மகாராஜரும் வந்துவிடுவார். நாமும் அதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டாமா? வாரும் முதலில் அதைக்கவனிப்போம். (செல்லல்.)

5-வது சீன்.

இடம்: காமவல்லியின் அந்தப்புரத்திலோர் அறை.

காலம்: பிற்பகல்.

காம: நெடுமூச்செறிந்து (தனக்குள்) அந்தோ! என்னா லியன்றவரை முயன்றும் கூடாமற்போய்விட்டதே, என்ன செய்வேன். ஆனால் இவ்விஷயம் வெளிவராதென்பது மாத் திரம் திண்ணம். சுகுமாரர் இங்கு வந்திருந்ததை வெளியிடு வாராயின் மாலை நடந்தவற்றை நானும் கூறவேண்டியதாக

ஏற்படும்; அப்படி ஏற்பட்டால் தன்னுயிருக்கும் கஷ்டம் விளைவிக்குமே என்பதைச் சுகுமாரர் அறிவாராகையால், அவர் ஊமையன் கனுவென ஒருவரிடமும் கூருது இவ்விஷயத்தில் மௌனம் சாதித்துவிடுவார். நானும் இப்பொழுது இல்லாவிட்டாலும் மற்ரெரு முறையேனும் சமயம் கிடைக்கும்பொழுது முயற்சிக்கலாம். (வீரவர்மன் சேவகனுடன் பிரவேசித்தல்.)

வீர: காமவல்லி !...............

காம: (திடுக்கிட்டு) வாரும் பிராணநாதா! (எழுந்து அழைத்தல்.)

வீர: உன் முகம் ஏன் ஒருவாறு காணப்படுகிறது? ஏதேனும் நடந்ததோ?

காம: ஒன்றுமில்லையே சிறிது தலைநோவாயிருந்தது. வேறொன்றுமில்லை. இங்குதான் இருந்தாள் தாதி............ யார் அங்கே (கையைத் தட்டுதல்) அரசர் வந்திருக்கிறார், சிறிது சிற்றுண்டி எடுத்துவைக்கச்சொல்.(தாதிபிரவேசித்தல்)

தாதி: இதோ ஆகட்டுமம்மணி! (செல்லுதல்).

காம: பிராணநாதா! சென்ற முறை தாங்கள் வேட்டையிலிருந்து கொணர்ந்த மான்குட்டி தப்பியோடிவிட்டது. இம்முறை எனக்கு வேறொன்று கொண்டுவந்து கொடுக்கின்றீர்களா?

வீர: காமவல்லி உண்மைதான் நல்ல சமயத்தில் ஞாபகமூட்டினுய். வேட்டைக்குச் செல்லும் தினம் இன்றுதான், நான் உன்னிடம்கூற மறந்தேன். நல்ல நிலவுகால

மல்லவா? நான் இன்றே சுகுமாரன் முதலியவர்களுடன் சென்று வேட்டையாடப்போகிறேன். நல்லதாக ஒன்று கொண்டுவருகிறேன். (தாதி பிரவேசித்தல்).

காம: வாரும் நாதா! இதோ தாதியும் வந்து விட்டாள். முதலிற் சிறிது சிற்றுண்டியருந்துவோம். (இருவரும் செல்ல தாதியும் பின் செல்லல்.)

[சேவகன் நளினன் பிரவேசித்தல்.]

நளி: (தனக்குள்) எங்கே எனது பிரியமுள்ள சாந்தாவைக்காணோம்? ஒருவேளை வேலையினின்றும் நீக்கப்பட்டு விட்டாளோ என்னவோ?............எதற்கும் அரசர் வரும் வரை வெளியே நிற்கிறேன். (செல்லல் தாதி சாந்தா மெதுவாக அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே பிரவேசித்தல்.)

சாந்! எங்கே? அரசருடன் எப்பொழுதும் வரும் எனது காதலன் நளினனைக் காணோம்.

நளி: (திரும்பி) ஏன்? இதோ வந்திருக்கிறேனே.

சாந்: வந்துவிட்டீர்களா?

நளி: சரிதான்! இதற்குத்தானா என்னை எங்கே யென்று பாசாங்காகக் கூறிக்கொண்டாயோ! ஏன்? நான் வந்து விட்டது உனக்குக் கஷ்டமாகவிருக்கின்றதோ?

சாந்: அப்படியொன்றுமில்லை. தாங்கள் வரவில்லை யென்று நான் முதலில் எண்ணிக் கொண்டிருந்தபடியால் விசாரித்தேன்.

நளி: நன்றாய் விசாரித்தாய். நீ விசாரிக்கும் பொழுதே எங்காவது ஓடிவிடலாமென்று நினைத்தேன்.

சாங்: உம்!......... அப்படியா?

[காமவல்லி மறைவாக வருதல்.]

காம: (தனக்குள்) இவர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

சாங்: என்னைப்பார்த்தால் தங்களுக்கு அப்படித் தோற்றுகின்றதோ? சரிதான் ஓடிப்போய்விட்டால் எனக்குத்தான் நஷ்டம் போலிருக்கிறது. அப்படித்தானே?

நளி: சாந்தா! அப்படி நினைக்காதே. விளையாட்டாகப்பேசக்கூடாதா? என்ன நீ இப்படி ஆரம்பித்துவிட்டாய் நீ இதையெல்லாம் குற்றமாகக் கருதுபவளல்லவென்று எனக்குத்தெரியாதா? போகட்டும்..........நான் சொல்லுவது குற்றம் என்றே வைத்துக்கொள்ளுவோம். நீ செய்வது சரியா?

சாங்: அடடா! என்ன சாமர்த்தியம் இதற்காகத்தான் உமக்கு நளினர் என்று பெயர் வைத்தார்களோ? எனக்கும் பேசத்தெரியாதா? நான் என்ன செய்தேனிப்பொழுது?...........

நளி: இப்பொழுதா செய்தாயென்று கூறுகின்றேன். நெடுநாட்களாகத்தான் ஏன்?..............நான் சொன்னது உனக்கு ஞாபகமில்லையா?

சாங்: என்ன ஞாபகம்?.................என்ன சொன்னீர்கள்?...........

நளி : சாந்தா! நன்றாகச்சொன்னாய். பெண் பிள்ளைகள் மனத்தைக் கண்டறிவது அசாத்தியம் என்று கூறுவார்கள். நீ எவ்வளவு அடக்கமாகப் பேசுகிறாய்? இதற்காகத்தான் உனக்கும் சாந்தாவென்று பெயர் வைத்தார்களோ? ....நன்றாகச் சொன்னாய் "கல்யாணம்" ஞாபகம் இல்லையா?..........

சாந் : அதற்கென்ன?.......... நன்றாய் ஞாபகமிருக்கிறது. பேச்சுமாத்ரத்தில் அது சரிதான்.

நளி : சாந்தா! நீ கூறுவதொன்றும் எனக்குப் புலப்படவில்லை. கலியாணம் பேச்சு மாத்திரத்தில் எப்படிச்சரிப்படும்.

சாந் : ஆமாம்! கலியாணமென்றால் வாய்போசாது, நம் ஜாதிமுறைப்படி இல்லாது, அன்னியரைப்போல மோதிரம் மாத்திக்கொள்வதா? தவிர என்னை ரக்ஷிப்பதற்கும், எனது பிற்கால வாழ்க்கையை எண்ணியும் ஏதேனும், பொருளும் தம்மிடமிருந்தாலன்றோ தாங்கள் கூறுவதை நடக்கத் தகுந்ததாகக் கருதலாம். அரைக்காசேனும் கையிவில்லாத ஒருவரை எப்படி மணப்பது?

நளி : எப்படி?..........எப்படி மணப்பதா!........... பிற்கால வாழ்க்கையா!...........நன்றாயிருக்கிறது. எனக்குப் பிறகல்லவோ ஒருவேளை உனது பிற்கால வாழ்க்கை என்பது வரலாம். நான் உன்னை மணம் செய்துகொள்ளு முன்பே எனது வாழ்க்கையை உனக்கு முந்தியதாகச் செய்துவிட முன் எச்சரிக்கையோடிருப்பதாகக் கூறுகிறாயே. அப்படியானால் நான் நம்முடைய வாழ்க்கை எவ்வளவு நாள்

என்பதை இப்பொழுதே நிர்மானிக்கச்செய்கின்றீரே. சாந்தா உன்னை மணப்பது அந்தக் கதிக்குத்தான் வருமோ?

சாந்: இல்லை அப்படித் தவறாகக் கருதுவானேன். மனிதர் என்றால் தலைகால் வலியாதா? தவிர இன்று மணந் தால் நாளை நடத்துவது பிற்கால வாழ்க்கை என்பதுதான். அப்பொழுது நாம் பணமொத்துச் சுகமாக வாழவேண்டா மா? அதற்குச் சாதனமானதும் பொருள்தானே.

நளி: சரிதான்! அப்படியானால், நான் உன்னை மணப் பது சிரமம்தான் போலிருக்கிறது. உலகத்தில் "கைநிறைந்த பொருளினும் கண் நிறைந்த கணவனை வேண்டும்" என்று பெண்மக்கள் கூறுவார்கள் என்பதும் உன் விஷயத்தில் பொய்யாகவன்றோ முடிந்துவிடும்போலிருக்கிறது. ஏதோ என்னிடத்தில் உள்ளதைவைத்துக் காலந்தள்ளலாமென நினைத்தேன்.

சாந்: அப்படியல்ல தாங்கள் கூறுவது ஒருவகையில் உண்மைதான். தங்களுக்கென்ன குறை, "கண் நிறைந்த கணவர்" தாங்கள் என்பதை நான் தங்களை வரித்ததுமே தெரிந்துகொள்ளவில்லையா? ஆயினும் நம்போன்ற பெரிய இடங்களில் வசிப்பவர் பொருளையும் விரும்புவது சகஜம் தானே (திரும்பிப்பார்த்து) அதோ! மகாராஜா வந்துவிட் டார் இதைப்பற்றி மற்றொரு முறை பேசிக்கொள்வோம்.

நளி: ஆமாம்! உன் மனம்போலத்தானே இருக்கும் தெய்வ சம்மதமும், நீ கூறியபடி உனக்கும் எனக்கும் தினந் தோறும் பேச்சமாத்திரத்தில்தான் விவாகம் நடக்கிறது. நடக்கிறபடி நடக்கட்டும்.

[சேவகன் ஒரு புறமும் தாதி ஒரு புறமும் செல்லல். காமவல்லியும் வீரவர்மனும் பிரவேசித்தல்.]

வீர : காமவல்லி! நான் வந்து வெகுநேரமாகிவிட்டது. சென்றுவரட்டுமா? நாளை இரவு வந்துவிடுவேன். அப்பொழுது மறவாது உனக்கு மான்குட்டி கொண்டுவருவேன்.

காம : பிராணநாதா! போய்வாருங்கள். மறவாமல் மான் கொண்டுவாருங்கள்.

[வீரவர்மன் இரண்டடி நடந்து கீழே கிடக்கும் கைகுட்டையை எடுத்தல்].

வீர : (தனக்குள்) இது யாருடையது?........சுகுமாரனுடையதல்லவா?

காம : (விழித்து) சிறிது நேரத்திற்குமுன் சத்தியவல்லி இங்குவந்து சென்றாள். ஒரு வேளை அவள் அதைத் தவறவிட்டுச் சென்றிருக்கலாம்.

வீர : காமவல்லி! நீ கூறுவது உண்மைதானா! சத்தியவல்லி, சுகுமாரன் கைக்குட்டையை வைத்திருக்க நியாயமில்லையே. அப்படி வைத்திருந்தாலும் அதை இங்கு கொண்டுவரவும், கொண்டுவந்தாலும் மறைவாக வைத்திராது தவறவிட்டுச் செல்லவும் இடமில்லையே. நீ கூறுவது உண்மைதானா?

காம : பிராணநாதா! அப்படியாயின் தாங்கள் என் மீது சந்தேகிக்கின்றீர்களா! அல்லது தங்கள் கருத்துத்தானென்ன................நானும் சத்தியவல்லியைப்போல ஒரு

பைத்தியப்பிடித்த பெண்ணென்று எண்ணிக்கொண்டீர்கள் போலிருக்கிறது. அப்பைத்தியத்தாலேயே கணவனை மறக்கக்கூடாது. கைதட்டையையேனும் வைத்திருக்கவெண்ணித் தன்னுடன் கொண்டுவந்து இங்கு மறந்து தவர்விட்டுச் சென்றதனாலல்லவா?...............என்னைத் தாங்கள் அப்படி நினைக்க இடமுண்டாயிற்று. என்னுடன் வருடக் கணக்காய்ப் பழகிய தாங்களே என்மீது இப்படிச் சந்தேகம் கொண்டால், புதிதாகக் கணவனைக்கண்ட சத்தியவல்லியின் மீது எவ்வளவு சந்தேகம்கொள்ள இடமிருக்கலாம், என்பதைத் தாங்கள் கவனிக்கவில்லைபோலிருக்கிறது. ஏன்?....... அதுவும் நான் இன்று விழித்தவேளையாயிருக்கலாம். தாங்களே என்னை இப்படிச் சந்தேகித்துவிட்டால் பின் யார் தான் என்னை நம்பப்போகின்றார்கள்.

வீர : (யோசித்து) காமவல்லி! நீ கூறியபடி நடந்திருக்க இடமிருக்கிறதா என்பதை நானறிந்த பிறகுதான், நிம்மதியடைவேன். நான் சென்றுவருகிறேன்.

(செல்லுதல்).

காம : அந்தோ! நம் இரகசியம் வெளிப்பட்டுவிடும் போலல்லவோ இருக்கிறது. முதலில் இதிலிருந்து தப்பும் வழியையே நான் யோசிக்கவேண்டும். இதற்கு என்ன செய்வேன்............எனக்குக் கிட்டாதென நானறிந்திருந்தும், சீ! இந்தப்பழம் புளிக்கும் என்னும் நரிக்கதைபோல நான் அவரை மறந்துவிட நினைத்தாலும் பாபம் அவர் விதியன்றோ கெட்டதாக முடியும்போலிருக்கிறது. என்னவது? வருவது வந்துதான் தீரும்............வரும்விதி வழியில் தங்குமா? நான் இப்பொழுது என்னைத் தப்பித்துக்

சொல்ல வேண்டுமானால், சத்தியவல்லியை எனது பிராண நாதர் பார்க்கச் சந்தர்ப்பம் வாய்க்காமற் செய்யவேண்டு வதும் தவிர, அவள்மீதே சந்தேகம் கொள்ளும்படியும் செய்யவேண்டும். நான் அப்படிச்செய்தால்தான் என் கணவ ருக்கு என்மீது நம்பிக்கை ஏற்படும். அப்பொழுதாவது சுகுமாரர் என் மனப்படி திரும்பவும்கூடும். இல்லையேல் என்பாடு அதோகதிதான்...........ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்'' என்று ஒரு வசனம் சொல்லுவார்கள். என் விஷயத்திலோ, அது ஒரு குற்றத்தை மறைக்க ஒன் பது குற்றங்களென முடிந்தது. இதற்கென்ன செய்வது. (யோசித்து) ஆம்!...............எனது தாதியைக்கொண்டே இக்காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும். சாந்தா!

[சாந்தா பிரவேசித்தல்].

சாந்: இதோ வந்துவிட்டேனம்மணி!

காம: சாந்தா! நீ மிகவும் நல்லவள். எப்பொழுதும் மெய்யுரைப்பவள். உன்னை நான் ஒரு விஷயம் கேட்கவேண்டு மென்றெண்ணுகிறேன்...........என்னிடம் உண்மையைச் சொல்லுவாயல்லவா?

சாந்: அம்மணி! நான் தங்கள் வேலைக்காரியல்லவா? உங்களிடத்தில் பொய்யுரைப்பேனா?

காம: உண்மையாகவா?...............அப்படியானல் சிறிது நேரத்திற்குமுன் அரசரின் சேவகன் நளினனுடன் என்ன சம்பாஷித்துக்கொண்டிருந்தாய்?

சாந்: (நாணத்துடன்) ஒன்றுமில்லையம்மணி!

காம: ஒன்றுமில்லையா! சாந்தா! என்னிடத்துமா இரகசியம். நான் கேட்டுக்கொண்டிருந்தேன் நீ பேசியதை.

சாந்: தாங்கள் கேட்டுக்கொண்டிருந்தது உண்மையானால் ஒப்புக்கொள்ளுகிறேன்.

காம: எதை ஒப்புக்கொள்கிறாய்.

சாந்: தாங்கள் கேட்டுக்கொண்டிருந்ததை.

காம: நீ மிகவும் கெட்டிக்காரியாக விருக்கிறாயே. இதுதான் என்னிடத்தில் உண்மை உரைக்கின்றாய்போ லிருக்கிறது. நான் கேட்டுக்கொண்டிருந்தது மெய்யா பொய்யாவென ஆராய்பவள்போலப் பேசுகின்றாயே. எனக்குத் தெரியாமலா உன்னைக்கேட்டேன்.

சாந்: இல்லையம்மணி!...............எனக்கு வெட்கமா யிருக்கிறது.

காம: சரி! அதைப்பற்றிப் பாதகமில்லை. இம்முறை நீதான் சொல்லாது ஜெயித்துவிட்டாய். எனக்குத்தான் தெரியுமே, சாந்தா! நீ அவனை மணப்பதற்கு விரும்பிய பொருளை நான் தருகிறேன். நீ என்னிஷ்டப்போல அவனை மணப்பாயா?

சாந்: அம்மணி! தங்கள் உத்தரவைத் தடுத்துப் பேசுவேனா?

காம: சாந்தா! சரி! அப்படியாயின் நாளை இரவே உன் கலியாணத்திற்குத் தயாராயிரு. நான் சொல்லுமிடத்தில் என்னிஷ்டப்படி நடக்கவேண்டும். இதை உனது காதலன் நளினனுக்கும் கூறிவிடு.

சாந் : அப்படியே ஆகட்டுமம்மணி! (செல்லுதல்)

காம : (நெடுமூச்செறிந்து) அந்தோ! என்னென்ன கஷ்டங்கள். அபாண்டமான குற்றத்தைச் சத்தியவல்லியின்மீது சுமத்தவேண்டியிருக்கிறது. அந்தோ! சத்தியவல்லி! நான் வேண்டுமென்றியற்றவில்லை. சந்தர்ப்பம் அப்படிமுடிந்தது. உன் விதி வலிதாயிருந்தால், நீ பிழைப்பாய். அவ்வளவுதான்...........ஆம் நளினனை அவனுக்கு நாளை மணமெனக்கூறிச் சத்தியவல்லிக்குத் தெரியாது, அந்தப்புர மஞ்சத்தில் படுக்கவைத்துத் தாதியை அனுப்புகிறேனெனக்கூறி வந்துவிடுவேன். சத்தியவல்லிக்கு நளினன் தன்னை மறந்து உறங்கும் சமயத்தில், பொய்யாகச் சுகுமாரர் வந்துவிட்டாரெனத் தாதிமூலம் செய்தியனுப்புவேன். அவள் வருவாள். அந்தோ!...........அவள் மிகவும் நல்லவள், கள்ளம் கபடறியாதவள். மஞ்சத்தில் படுத்துறங்கும் நளினனே கணவனென நினைத்து, அவனை நித்திரைபங்கம் செய்யக்கூடாதெனவெண்ணி, அருகில் கண்ணயர்வாள். ஆனால், சுகுமாரர் முதலியோர் வேட்டையினின்றும் திரும்பியதும், சுகுமாரன் தனது அந்தப்புரம் செல்வான். இக்காட்சியைக் கண்டபின் என்ன நடக்குமோ அது கடவுளுக்குத்தான் தெரியும்........இவ்வாடாத செய்கையை நான் என்னைத் தப்பித்துக்கொள்ளும் சுயநலத்திற்காகவே செய்யவேண்டியிருக்கிறது. ஈசனே! அந்தோ! எனக்கு வேறு மார்க்கம் தெரியவில்லை. என்னசெய்வேன். அப்படித்தான் செய்யவேண்டியிருக்கிறது. (செல்லல்).

6-வது சீன்.

இடம்: சத்தியவல்லியின் அந்தப்புரத்தில் படுக்கையறை.

காலம்:—இரவு.

[காமவல்லி மெதுவாகப் பிரவேசித்தல்].

காம: (தனக்குள்) இதுவரையில் எல்லாம் நான் எண்ணியவண்ணமே குறைவின்றி நடந்துவருகின்றது. அந்தோ! நான் செய்வது மிகவும் தவறானதே............ஆயினும் என்னைத் தப்பித்துக்கொள்ளக் கருதியே நானிதைச் செய்கிறேன். அநியாயமாகச் சத்தியவல்லிக்குப் பெருங்கேடு செய்யப்போகிறேன். என்ன செய்வேன். நேரமாகிவிட்டது. நான் வந்தவேலையைச் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும். நளினனையும் ஒருவர் கண்ணிலும் படாமல் இதுவரை கூட்டிவந்துவிட்டேன். இனி நடக்கவேண்டுமென நான் எதிர்பார்ப்பதும், என் எண்ணப்படி முடிந்துவிட்டால் நான் பாக்கியசாலிதான். (வெளிப்படையாய்) நளினா! இங்குவா! (நளினன் பிரவேசித்தல்) இதோ பார் உனக்காகத் தயாரித்திருக்கும் இப்படுக்கையறையை. நீ இங்குதானே சிறிது நேரமிருப்பாயாயின் சாந்தாவை யனுப்புகிறேன்.

நளி: அம்மணி! மன்னிக்கவேண்டும். என்னிடம் யாதொன்றும் கூறாது அந்தப்புரத்துள்ளும் அழைத்து வந்துவிட்டு, சாந்தாவை அனுப்பும்வரை இருவென்று கூறுகின்றீர்கள் அதுவும் இங்குதானா? அம்மணி! எனக்குச் சாந்தாவை வேண்டுமானாலும் மணம்செய்து வைக்கவேண்டாம். என்னை விட்டுவிடுங்கள். நான் போய்விடுகிறேன்.

காம: (நகைத்து) நளினா! எப்படி! விட்டுவிடலாம்? நன்றாகச்சொன்னாய். நீ முன்பே என் வார்த்தைக்கெதிர்

வார்த்தை சொல்லவில்லையெனச் சாந்தாவிடம் கூறிவிட்டு இப்பொழுது மாறுகிறாய். ஜாக்கிரதை. நீ இங்கு வந்திருப்பதையே உன்மீது குற்றம் சுமத்தினால் உனக்கு என் கட்டளை மீறியதற்கு என்ன கிடைக்கும் தெரியுமா?

நளி: அம்மணி! தங்கள் கட்டளையைமீறினால் என்ன கிடைக்குமென்பது எனக்குத் தெரியும். ஆனால் நம்மைப் படைத்த கடவுளின் கட்டளையைமீறினால் என்ன கிடைக்கும் என்பதைச்சிறிது யோசித்துப்பாரும். தவிர இதுவோ இளவரசியின் அந்தப்புரம்.......நான் இங்கு வந்திருப்பதே முதற்கெடுதல். இரண்டாவது என்னை, அதுவும் இரவில் எவராவது கண்டால் என்னைப்பற்றியும் சத்தியவல்லியம்மாளைப்பற்றியும் என்ன நினைப்பார்கள்? அம்மணி!.......... வேண்டாம். நிறுத்துங்கள் இத்துடன். பிரமாதம் விளைந்தால் என்ன செய்வது?

காம: ஒன்றும் செய்யமுடியாது. எல்லாம் உன் நன்மைக்காகத்தான் நான் இவ்வளவும் செய்கிறேன். சுகுமாரரும் வேட்டைக்குச் சென்றிருக்கிறார். ஆகையால் இப்படுக்கையறைக்கு வேறொருவரும் வாரார். நீ இங்குதானிரு நான் சாந்தாவையனுப்பும் வரையில். (செல்லல்.)

நளி: (தனக்குள்) இதேது பெரிய சங்கடமாக முடிந்தது. என் கலியாணத்தைதானே முடித்துவைக்கிறேனென்றாளெனச் சந்தோஷித்தேன். ஆனால் இப்பொழுது நடப்பதைப் பார்த்தால் என்னை ஏதோ ஓர் பெருத்த சங்கடத்துக்குள் நுழைத்துவிட எண்ணியிருக்கிறாள்போலத் தோற்றுகிறது. நான் இங்கிருப்பதை எவர் அறிந்தபோதி

னும் எனக்குக்கிட்டுவது மரணம்தான். என்ன செய்வேன் ....நானே இவ்விடத்தைவிட்டு இப்பொழுதே போய் விடலாமென்றாலும், காமவல்லியம்மாளின் கோபத்துக்குப் பாத்திரமாகவேண்டும். சக்கிரவர்த்தினி என்னும் முறையில் அவள்சொல்லை எவரும் நம்புவார்களாகையால் அப்பொழுது எனக்கு ஆபத்துத்தான். "ஏழைசொல் அம்பலமேறாது" என்பது என் விஷயத்தில் உண்மையாயிற்று. விதியின் கூற்றுக்குமாறாக எதுவும் நடக்கப்போவதில்லை. அவர்கள் உப்பைத் தின்றதிற்காகவாவது, எனக்கு இருளிதத்தில் எப்படி மரணம் சித்தித்தாலும் சரி, நான் அவர்கள் இஷ்டப்படி நடந்து, அந்த ஒருகட்டளையேனும் கழித்து மணக் கோலம் கருதியநான் பிணக்கோலமேனும் அடைகிறேன். அவ்வளவுதான்............நடப்பதைப் பார்த்தால் பெரிய ஆடா யிருக்கிறது. எனக்குக்கொடுக்கப்பட்டிருக்கும் உடையோ, அரசருடைபோலிருக்கிறது............அந்தோ! தனக்கேதே னும் காரியமாக வேண்டியிருந்தால் என்போன்ற உலக ஆசைமிகுந்த, ஏழையின் உயிரினும், தலையிலுமாகவைக்க வேண்டும். ஈசனே! நான் ஒருபாபமுமறியாதவன். அரசி யோ சாந்தாவைத்தவிர வேறொருவரும் இங்கு அனுமதிக்கப் படப்போவதில்லையெனக் கூறியிருக்கிறாள். ஒருவேளை என் விதிவலியதாயிருந்து அவளும் வந்தால் என்னைவழுப்பட்டும், எனக்குப் பயமும், கவலையும் சிரமமும் அதிகமாகவிருக் கின்றன. நான் சிறிது படுத்துறங்குகிறேன். (படுக்கிறான் காமவல்லி பிரவேசித்தல்.)

காம: (தனக்குள்) நான் எண்ணியவண்ணமே எல் லாம் நடக்கின்றன, சத்தியவல்லியின் தாதிமூலம் வேட்டை யினின்றும் சுகுமாரர் வந்து உறங்கிக் கொண்டிருப்பதாகப்

பொய்ச்செய்தியனுப்புவோம். பின்நடப்பவற்றையும் மறைந்திருந்து பார்க்கிறேன். (செல்லல் சத்தியவல்லி பிரவேசித்தல்)

சத்: (தனக்குள்) ஆ! இதென்ன! இப்பொழுது தானே நமது தாதி எனது பிராணநாதர் வந்துவிட்டதாகக் கூறினாள். அதற்குள்ளாகவா உறங்கிவிட்டார் எனதுபிராணநாதர்? வேட்டையாடிய களைப்பால் உறங்கிவிட்டார்போலிருக்கிறது. உறங்குவரை எழுப்பக்கூடாது. அவருக்குச் சிரமம் கொடாது பக்கத்தில் படுத்துறங்குகிறேன். (படுத்துக்கொள்ளல். சாமவல்லி பிரவேசித்தல்.)

காம: (தனக்குள்) நான்செய்த யோசனை நன்றாகப் பலித்துவிட்டது. சுகுமாரர் முதலியோர் வேட்டைமுடிந்து இன்றிரவே வந்துவிடுவார்களென்பது எனக்குத் தெரியும். அப்படியே அவர்களும் கோட்டைவாயிலுக்குச் சமீபமாக வந்துகொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. சுகுமாரர் உடையைப்போன்றே அணிந்திருந்தும் இச்சேவகனையும் சத்தியவல்லியையும், ஓரேபடுக்கையில் சுகுமாரர் கண்டால் அவர்மனம் எப்படியிருக்கும்? அப்பொழுது என்ன விளையும்? அன்று எனது அறையில் அகப்பட்டசுகுமாரரின் கைக்குட்டையைப்பற்றி சத்தியவல்லியிடம் விசாரிக்கவேண்டுமெனக் கூறிய என்கணவர் மனம் எப்படியிருக்கும்? இனி சத்தியவல்லியைப்பற்றி என்ன நினைப்பார்? இனி எப்படி நடந்தாலும் நடக்கட்டும். நான் என்னளவில் தப்பித்துக்கொண்டேன். எதற்கும் நாமிங்கு இனி அதிகமாகத் தாமதிக்கக்கூடாது. சுகுமாரரும் வரும்வேளையாயிற்று. இவர் இக்காக்ஷியை, தானே கண்டுகளிக்கட்டும். (செல்லுதல் சுகுமாரன் பிரவேசித்தல்.)

சுகு: (தனக்குள்) இன்று வேட்டை முடிந்து திரும்
பும்வரை, வீரவர்ம மகாராஜர் வழக்கம்போல என்னுடன்
வார்த்தையாடாதது எனக்கு அதிக மனவருத்தத்தை உண்
டாக்கிவிட்டது. என்ன நடந்ததோ. என்னவோ? ஒரு
வேளை இந்தக் காமவல்லியே என்னைப்பற்றி அன்று நடந்த
தைப்பற்றி அரசனிடம் உரைத்துவிட்டாளோ என்னவோ.
ஒன்றும் தோற்றவில்லையே. எப்பொழுதும் என்னிடத்
தன்புகொண்டு என்னைச் சந்தோஷப்படுத்தும் எனது அரு
மைக்காதலியையாவது கண்டு என் மனப்புண்ணையாற்றிக்
கொள்ளலாமென அவளது அந்தப்புரம் சென்றேன். அவள்
என்னைத்தேடிச் சயன அறைக்குச் சென்றுவிட்டாளெனக்
கேள்வியுற்று இங்குவந்தேன்............ஒருவேளை நடந்த விஷ
யத்தை உணர்ந்து என்னைச் சமாதானப்படுத்தும்பொருட்டு,
இங்கு முன்னரே காத்திருப்பாளோ? அப்படியுமிருக்கலாம்.
அதுவும் எனது பாக்கியம்தான். அவள் பெயருக்கேற்ப
சத்தியமுள்ளவளாகவே இருக்கிருள். (திரும்பிப்பார்த்து)
அதோ! சத்தியவல்லியும் உறங்கிவிட்டாள்போலிருக்கிறது.
............அருகிற்சென்று எழுப்புவோம். சத்தியவல்லி!
பாவம்............அயர்ந்து உறங்கிவிட்டாள்போலன்றோ
தோற்றுகின்றது. (அருகிற்சென்று திடுக்கிட்டு) ஆ! அது
யார்! (கண்களைத் துடைத்துக்கொண்டு) நான் கனவு காண்
கின்றேனு!............விழிப்புடனே இருக்கின்றேன்............
விழிப்பிலும் கனவா!.........எனது படுக்கையறையில் அவள்
மற்றொரு ஆடவனுடன் படுத்திருப்பதைக் கண்டுபோ சந்தே
கம். இப்பாதகியை இப்பொழுதே என்னுடைவாளால் யம
னுலகனுப்பிவிடுகிறேன். (உடைவாளை உருவி இன்னும்
அருகிற்சென்று உற்று, நிதானித்து) ஆ! இப்பொழுதே அக்
கவிராயர் அவசரப்படேலெனக் கூறுவதுபோலத் தோற்று

கின்றது. நான் நேரில் கண்டபிறகுமா பொறுமை வகிக்க வேண்டும். என்னே மனித வாழ்க்கை! சில விநாடிகளுக்கு முன் சத்தியவல்லி எனப்புகழ்ந்த அவளை அசத்தியப் பேய் என இப்பொழுது கூறுகின்றது. உலகம் மாறுவதேபோல மானிடர் மனமும் மாறுபடுகின்றது. அந்தோ!............ அம்மாதம் மூன்றிற்குள் மரணத்திற்கொப்பான தண்டனை எனக்குக் கிடைக்குமெனச் சத்தியசீலன் கூறியதற்கிணங்க, நடக்கவிருந்த காரியம், கவிராயர் நன்மொழி கேட்ட என் மனத்தால் நிவர்த்தியடைந்தது. நான் என்கூடாரக் கண்டதற்காக என் மனைவியைக் கொன்றிருந்தால், அரசனுக்குத் தன் தங்கையென்னும் நிலைமையில் ஒன்றும் தோன்றாது. எனக்கே தண்டனை கொடுப்பார். காமவல்லியும் ஒருவேளை என்னைப்பற்றித் தவறாக அவரிடம் ஏதேனும் உரைத்திருந்தாலும், நான் நினைத்தபடி செய்திருந்தால் அதற்கு அதுவும் ஒரு அத்தாக்ஷியாக முடியும். இக்காக்ஷியை தானே நேராகக்கண்டு என்ன செய்யவேண்டுமோ, அதை அவரே செய்யட்டும்..........இவளை நான் ஒழித்தாலென்ன?............அல்லது இவள் சகோதரனே இவளை ஒழித்தாலென்ன?............ எப்படியும் அவள் ஒழிந்தபின்னரே என் காலத்தை இனி தாய்க்கழிப்பேன். முதலில் வீரவர்ம மகாராஜனையழைத்து வருதல். (செல்லுதல்)

வீரவர்மராஜனும், சேவகனும், முன்னும்
சுகுமாரன் பின்னுமாகப் பிரவேசித்தல்.]

வீர: ஆ! சண்டாளி! (தனது உடைவாளை உருவி) அந்தோ! (கண்களை மூடிக்கொண்டு) என்னுடன் பிறந்தவள் என்பதற்காகவேனும் அவளைக் கொல்ல என் கைகள் அஞ்சு

கின்றன. என்னசெய்வேன். ஆ! சுகுமாரரே!...........
எனது அருமை அத்தான்! இக்காக்ஷியைக் கண்கூடாகக் கண்டும் பொறுமையுடனிருந்த புனிதரே! உமது பொறுமை இவ்வுலகினும் பெரிது. இப்பேர்ப்பட்ட கொடுஞ்செய்கையையுடையவள் எனது தங்கையென்றும் பாராது, வெட்டி வீழ்த்திவிடாது, நானே அதைக்காணும்வரைச் சகித்திருந்தது மனிதசக்திக்கும் மீறிய பொறுமையேயாகும். சுகுமாரரே! இதுசம்மந்தமாகத் தாங்கள் என்னசெய்யத் துணிந்திருக்கிறீர்களென்றும் எதிர்பாராது, நான் செய்யப்போவது பிழையாயிருப்பினும் மன்னிப்பீராக. சேவகர்காள்!

[சேவகர்கள் பிரவேசித்தல்.
சத்தியவல்லியும், நளினனும் எழுந்திருந்தல்.]

இச்சத்தியவல்லியையும் அவளுடனிருக்கும் திருடனையும் பிடித்துக் கட்டுங்கள். நாளை காலை சூரிய உதயத்திற்குள் அவர்கள் சிரத்தைத் துண்டித்து நாய்நரிகளுக்கிடுங்கள்.

[சேவகர்களும், தாதிகளும், நளினனையும், சத்தியவல்லியையும்,
அழைத்துச் செல்லல். சத்தியசீலனும் கவிராயரும் வருதல்.]

வீர: சுகுமாரரே! நான் சந்தோஷத்துடனிருந்த உம்மை கொலைகாரியாகிய என் தங்கையை மணக்கச்செய்து மிகவும் துன்புறுத்திவிட்டேன். இன்றிரவு கழிவது உமக்கு மிகவும் கஷ்டமாகவே இருக்குமென்றெண்ணுகிறேன். எதற்கும் காலை நாம் சந்திப்போம். நான் சென்றுவருகிறேன். எனக்கு நிற்கவும் முடியாது. கவலையால் தேகம் தளர்வடைகின்றது. சென்று வருகிறேன். என்னை மன்னியும். (செல்லுதல்)

7-வது சீன்.

இடம். சந்திரகிரியில் சுகுமாரனது அறை.

காலம். மாலை.

[சுகுமாரன் ஆலோசித்தவண்ணம் உட்கார்ந்திருத்தல்.]

சுகு: (தனக்குள்) அந்தோ! அதிருஷ்டம் ஒருபுறமும், விதி ஒருபுறமுமன்றோ இருக்கின்றது என்விஷயத்தில். நான் தண்டனைக்குள்ளாவேனெனச் சத்தியசீலன் கூறியது, "மயிர் விலக மலை விலக" வென்னும் வசனத்தையொட்டி, நான் தப்பித்துக்கொண்டேன்............பாதகி!...........சூரிய உதயத்திற்குள் அவள் நமன்வாய்படப்போகிறாள். ஆயினும் எனக்கு அவமானம் அவமானமே. அந்தோ! ஈசனே! எவரையும் அவமானப்படுத்தியறியாத என்னையேன் அவமானப்படுத்துகின்றீர். பிறருக்கெனச்செய்யும் எக்காரியமும் தனக்குச் செய்துகொண்டதுபோலவேயாகுமெனக் கூறும்படி நோக்கினும் நானெவருக்கும் ஏதும் இத்தகையதாகிய ஒன்றை இயற்றவில்லையே. என் வாழ்நாளில் சுகுமாரனின் மனைவியின் நடத்தை இப்படிப்பட்டது என்று ஜனங்கள் கூறுவதைப் பொறுத்துக்கொண்டு எவ்வாறு உயிர்வாழ்வேன். அந்தோ! ஈசனே! ஐயோ! புருஷனின் பாதிபாகம் ஸ்திரீபாகமென்கின்றனரே! அதைப்போல் அவளுக்கேற்படும் இகழ்ச்சியின் பலனன்றோ பாதியை நான் அனுபவிக்கவேண்டியவனாயினேன். என்னசெய்வேன் ஈசனே! அந்தோ! (சத்தியசீலன் பிரவேசித்தல்).

சத்: அரசே! ஏன் வருந்துகின்றீர். வேண்டாம். விதியின்கூற்றுக்கு மாறாக ஏதும் நடவாதென்பதைத் தாங்களறியீரோ? எல்லாம் முன்பே நாம் எதிர்பார்த்தவை

தானே. மனிதன் தாழ்வதும் வாழ்வதும், நம்செயலிலில்லை யிருக்கின்றது. அம்மணியே! வீணில் வருந்துவானேன். துக்கம் சந்தோஷமென நமக்கென ஒரு பகுதியும் கிடையாது. அரசே! உலகில் எல்லா ஜீவனுக்குள்ளும், வசிப்பவரும் கடவுளே. அவனன்றி ஓரணுவும் அசையாதென்பது தாங்களறிந்தது தானே. எல்லாம் அவன்செயலே. நாம் அனுபவிக்கின்றோமென எண்ணுபவை எல்லாம் கடவுளே அனுபவிப்பவராவர். சந்தோஷப்படும்பொழுதும் அப்படியே. துக்கப்படும்பொழுதும் அப்படியே. அப்படியிருக்க நம் சரீரத்தில் கடவுள் சக்தியினாலேயே எல்லாம் ஏற்படுகிறதென நாமறிந்திருந்தும் ஏன் துக்கிக்கவேண்டும். நாம் என்பதேது. நாம் அப்படியென்னும்வரைதான், நாம் மாயை வயப்பட்டவரெனக் கருதப்படுகின்றோம். உண்மையை நோக்கினால், துக்கம் சந்தோஷம் என்பவை இவ்வாத்மாவுக்குக் கிடையாது. அவ்வாத்மாவே கடவுளாவர். கடவுளுக்குத் துக்கம் சந்தோஷம் முதலியதேது. இதுவே உலகியற்கை. அரசே! இதையெல்லாம் ஆலோசித்து வருந்துவதை ஒழித்துவிடுங்கள்.

சரு: சத்தியசீலா! உண்மைதான். நீ கூறுவதைக் கேட்க ஒருவகையில் எனக்கு இன்பமாகத்தானிருக்கிறது. ஆனால், மகனே! சத்தியசீலா! அறிந்திருந்தும் என் மனம் இப்பொழுது துக்கமனுபவிக்கின்றது. துக்கமென்பதே மனிதன் உண்டென்றெண்ணுவது தவறு, என்னும் கொள்கையை உடையவன் நான், என்பதை நீயுமறிவாய். ஆனால் மாயை ஒன்றுண்டு என்று நாமறிந்திருப்பினும் அதனின்றும் நாம் விடுபடவில்லையாதலால் நாம் அதைப் பிறர்மாட்டே விளக்கிக்காட்டத் தகுதியுடையவர்களாயிருக்கின

றேம். இதுவும் உலகவியற்கைதானே. சத்தியசீலா! பல பேசி என்ன? எனக்குத் தூக்கம் அதிகரிக்கின்றது. நீ கூறும் சமாதானங்களைக்காட்டினும் நான் அதிகம் அறிந்துதானிருக்கிறேன். ஆயினும் நீ என்னசெய்வாய். உனக்கு என்மீதிருக்கும் அன்பினால் என் மனத்தைத் திருப்பும் அவாவுடன் கூறுகின்றாய். என்மீது உனக்கிருக்கும் அன்புக்காக நான் எனது இத்துக்ககரமான நிலைமையிலும் சந்தோஷிக்க வேண்டியதைத்தவிர வேறென்ன செய்யவிருக்கின்றது. சத்தியசீலா! நான் எல்லாவற்றையும் மறந்துவிடச் சித்தமாயிருக்கிறேன். ஆனால்...........அந்தோ! ஒன்றுமாத்திரம் உன்னைக்கேட்க விரும்புகிறேன். அதற்காக என்னைக் குற்றமாகக் கருதாதே. முன், அப்பாதகியின் படத்தை உன்னிடம் காண்பித்தபொழுது எனக்கன்றோ தீங்கேற்படுமெனக் கூறினாய்!...........

சத்: ஆம் அரசே! நான் சொல்லுவது எப்பொழுதும் பொய்யாகாது. கூறியது உண்மையே.

சுகு: அப்படியானால் ஏன் இச்சதிகாரி இக்கெட்ட காரியத்தைச் செய்து எனக்கு அவமானம் உண்டாக்க வேண்டும்?...........இப்படி நடக்கப்போகிறது என்பதையும் ஏன் என்னிடம் முன்னர் கூறவில்லை? தவிற, நான்சொல்லுவது பொய்யாகாது, என்பது...........இன்னும் எனக்கு நேரவிருக்கிறது, என்பதே அதன்பொருளா? எனக்குச் சற்று விளங்கக் கூறு.

சத்: அரசே! ஆம் விதியின்கூற்றுக்கு மாறாக எதுவும்நடக்காது. இன்னும் சொல்லுகிறேன். சத்தியவல்லி ஒருவேளை குற்றமற்றவளாக விருக்கலாம்.

சுகு: எப்படி! சத்தியசீலா! அந்தோ!..........நன் கண்கூடாகக் கண்டபின்புமா இவ்வார்த்தையை என்முன் கூறுகின்றாய்.

சத்: அரசே! கோபம்வேண்டாம், சமயசந்தர்ப்பம் அப்படி நேர்ந்திருக்கலாம். அவளது உருவபடத்தை நான் நோக்கியபொழுது ஒரு சிறிதளவும் கற்பினின்றும் தவறாதவர்களென்று உணர்ந்தேன் ஆனால் அதற்கும் மீறியதாக ஒன்று இப்பொழுது நடந்துவிட்டதுபோல நாம் கண்டது எனக்கும் ஆச்சரியத்தையேவிளைவிக்கின்றது ஆனால், அரசே! அவள் நிரபராதியாய் இருக்கலாமென்பதை மாத்திரம் என் மனம் பறையறைகின்றது. ஆனால் தாங்கள் கண்கூடாகக் கண்டிருக்கிற ஒரு காரியத்தினால் மாத்திரம், அப்படி தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. எதற்கும் நான்மாத்திரம் அது எப்படி நடந்தது என்றறிந்தபிறகே நிம்மதியடைவேன். ஆனால் அரசே! இன்னும் சொல்லுகின்றேன். மேலும் வருந்த விடுவீர்களென்றே ஆலோசிக்கின்றேன்.

சுகு: சத்தியசீலா! எவ்வளவு வருத்தத்திற்குமேல் வருத்தமில்லையோ அவ்வளவு வருத்தத்தினுடனிருக்கும் எனக்கு இனி, இதைக்காட்டிலும், ஒருவருத்தம் உண்டோ? எதுவாயினும் கூறு. நானும் அனுபவிக்கச் சித்தமாகவே பிறந்திருக்கும்பொழுது எப்படித்தப்பமுடியும் சொல்.

சத்: அரசே! நான் கூறிய பலன் இன்னும் நடக்கவில்லை.

சுகு: இல்லையா?

சத்: ஆம் அரசே! நான் சொல்லுவது தங்களுக்கு ஆச்சரியமாகவிருக்கலாம். எல்லாம் போகப்போகத்தெரியும். நாம் காற்றுக்கூடப்புகாத ஒரு கட்டிடத்திற்குள் எமனுக்குப் பயந்து கதவடைத்துக்கொண்டாலும் நம்மைவிடான். அது போலவே விதியும் நம்மை விடாதெனினும், கூடிய முயற்சியையேனும் செய்யலாம். அரசே! இனியே தங்களுக்கு நெருங்கிய ஆபத்திருக்கிறதாக நான் கருதுகிறேன். எதற்கும் தாங்கள் மிகவும் கூடிய ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். ஆனல் தங்கள் உயிருக்குமாத்திரம் பயமில்லையென நான் ஒருவாறு நினைக்கிறேன். அதைக் கடவுளன்றோ அறிவர்.

கரு: சத்தியசீலா! நான் எப்படி ஜாக்கிரதையாகவிருப்பது? நான் எப்படி இதற்குமேல் வருந்துவது? இரண்டும் கூடாததே. பிறந்த ஒருவன் இறந்துவிடுவோனெனத் தெரிந்திருந்தும், அதை மனத்தில் நினைத்துக்கொண்டோ நினையாமலோ, தன் காலத்தைச் சந்தோஷம்போலக்கழிக்கும் மானிடரைப்போலவே, என்றைக்கும் மரணமுண்டு, என்னும் ஒரு தீர்மானத்தைமாத்திரம் எண்ணிக்கொண்டு பேசாதிருந்துவிடவேண்டியதுதான். சத்தியசீலா! நாம் உதாரணத்திற்கெங்கே போகவேண்டும்? நினைத்துப்பார்! நாம் வேட்டையாடும்பொழுது ஏற்படும் ஒலியினல் மானினங்களும், முயல்களும், தன்னைத்தப்பித்துக்கொள்ளுகிறோமெனக்கருதி இடந்தெரியாது விதியின்வயத்தால், நம்மவர் பக்கமே வெருண்டு ஓடிவந்து வேடர்கள் கையில் மாய்வதை நாம் கண்ணாரக்கண்டிருக்கிறோம். நாம் முயற்சித்தாலும் நமக்கு அப்படி விதித்திருந்தால், நாமும் அப்படித்தானே. முயற்சியின்றி இருந்தாலும் இக்கேட்டிற்கு நாமே காரண

பொன என்றுமலாவதிருக்கலாமேயென்று வருந்த இடமிராதல்லவா?......சத்தியசீலா! நடப்பது நடக்கட்டும். இனி எனக்கு இதைக்காட்டிலும் துக்கமும் வெறுப்பும் வேறெதுவும் கிடையாது.

சத்: அரசே! என்னை மன்னியும் நாம் சந்தோஷமாகவிருக்கும் ஒருகாலத்திலேனும் இவ்வுலகவியற்கையைப்பற்றி வார்த்தையாடலாம். இது தருணமல்ல. நான் சிறிது தங்கள் விஷயமாகவும், சத்தியவல்லியின் விஷயமாகவும் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. அதுவரை தாங்கள் கூறியபடியேனும் வலுவில் எதிலும் தலையிட்டுக்கொள்ளாதிரும். வந்துவிடுகிறேன். (செல்லல்.)

சுகு: (தனக்குள்) அவன் என்னசெய்வான். என் மீதிருக்கும் அன்பினால் தன் மனத்திலுள்ளதைக் கூறுகின்றான். அவன்தான் என்னசெய்யமுடியும், அல்லது நான் தான் என்னசெய்யமுடியும். மனிதன் தனக்கு அளவு கடந்த வருத்தமும் கஷ்டமும் ஏற்படும்பொழுது கடவுளை நினைக்கிறான்'' என்பதையொப்ப நான் இப்பொழுது நடப்பதைத்தவிர வேறு வழியில்லை. சிறிது கடவுளையேனும் தொழுதுவருகிறேன். (செல்லல்)

———

8-வது சீன்.

இடம். சிறைக்கூடம்.

காலம். இரவு.

[சத்தியவல்லி ஒரு சிறையிலும்,
நளினன் மற்றொரு சிறையிலுமிருக்கிறார்கள்.]

[சத்தியசீலன் பிரவேசித்தல்]

சத்: (தனக்குள்) அந்தோ! சுகுமாரர் வருந்துவதைக்காண எனக்கும் வருத்தமதிகரிக்கின்றது. என்ன செய்வேன். நடந்திருப்பதைக்காண எனக்கும் பெருத்த ஆச்சரியமாகவே இருக்கின்றது. இருக்கிறதைப்பார்த்தால் அன்று சுகுமாரர் கூறியவையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக எனது ஞாபகத்துக்குவருகிறது. எல்லாம் இவர் காமவல்லியம்மாளின் அந்தப்புரத்துள் நுழைந்ததன் பயனாகவிருக்கலாமோவென்றும் கருதுகிறேன். நான், இவர்கள் எப்படி ஒரு படுக்கையிற் படுக்கநேரிட்டது என்பதை அறியவே வந்திருக்கிறேன். "நுண்ணிய கருமமும் எண்ணித்துணி" என்பதைப்போல நான் இவர்களைக்கேட்டு ஏதேனும் ஒரு மறுமொழி கிடைத்து, அதுவும் நான் நினைப்பதுபோலவே காமவல்லியம்மாள் சம்மந்தமிருந்தால் நான் ஏதும் செய்ய அசக்தனாவேன். என்னசெய்வது? அவளோ சக்கிரவர்த்தினி! அவள்பார்த்து ஒரு காரியத்தைச்செய்யும்பொழுது, மெய்யோ, பொய்யோ அரசரிடம் கூறினால் அவர் நம்பவேண்டியதன்றி என்னசெய்வார்? இதிலிருந்து ஒன்றும் தீர்மானிக்க முடியவில்லை. சுகுமாரர் அன்று காமவல்லியின் அந்தப்புரத்தில் நடந்த விஷயத்தை என்னிடம் கூறியதை நினைக்க எனக்கு ஆச்சரியமும் பயமும் அதிகரிக்கின்றது.

ஆனால் அவன் ஒருவகையில் கொஞ்சம் கிராமபுத்தியுடைய வனாகக் காணப்படுகிறான். அன்று நடந்ததை மாற்றி, தனக்கு சுகுமாரன் உடன்படாததை வெறுத்து, அவர்மீதே குற்றமாக அரசரிடம் உரைத்துவிட்டிருக்கலாம். அதுவே பெண்களினியற்கை. அப்படிக் கூறியிருந்துவிட்டால், சுகுமாரர் உயிரோடிருந்தாலன்று ஏதாவது சமயமேற்பட் டால் அப்பொழுது கைகூடாதாவென நினைத்திருப்பவள் போலக்காணப்படுகிறாள். அம்மட்டும் விசேஷமே. எதற் கும் முதலில் நாமிவர்களை விசாரித்துப் பிறகு ஆகவேண்டிய தைக்கவனிப்போம். நல்லவேளையாக இங்கும் ஒருவரு மில்லை. (நளினனிடம் நெருங்கி) நளினா! நளினா!

நளி: அந்தோ! என்னை யாரழைக்கின்றார்கள்? பிறந் ததுமுதல் இதுவரை சுகமெப்படியிருக்குமென்றறியாத பாவிக்கு நளினனென எப்படிப்பெயரிட்டனரோ? காலையோ என்னுயிர் போய்விடப்போகின்றது. என்ன செய்வேன்.

சத்: நளினா! நளினா!

நளி: ஆ! அதுயார்? சத்தியசீலரா! சத்தியசீலரே! சத்தியசீலரே!! அந்தோ! நான் நிரபராதி! எனக்குத் தெரிந்த எவரிடமேனும் நானிவ்வார்த்தையை உரைத்தபின் னரே இறக்கவெண்ணினேன். இனி ஆனந்தமாய் இறக்கத் துணிவேன்.

சத்: நளினா! உரக்கப்பேசாதே. காவலர் விழித்துக் கொள்ளப்போகின்றனர். நானும் அதைத்தெரிந்துகொள் ளவே இங்கு வந்திருக்கிறேன். சற்று விளங்க உரை. எவ் வாறு நீ அந்தப்புரம் செல்லவும், அப்படுக்கையிற் படுக்கவும் நேரிட்டது.

நளி: சத்தியசீலரே! நீர் என்னை நம்புகிறீரா? நான் சொல்லப்போவது உண்மையாகவிருக்கலாமென்று நினைக்கிறீரா?

சத்: நளினு! உன்னை நம்புகிறேன். நீயுரைக்கும் மெய்யுரையிலேயே இருக்கின்றது நான் எதிர்பார்ப்பது. நடந்ததைக்கூறு.

நளி: சத்தியசீலரே! நான் நெடுநாட்களாகக் காமவல்லியம்பாளின் தாதி சாந்தாவின்மீது காதலுற்றிருந்தேன். அவளும் என்னிடம் அப்படியே இருந்தாள். ஆனால் இடையே பணசம்மந்தம் ஒன்றில்லாததினல் எங்களெண்ணம் முடிவடையாதிருந்தது. ஒருநாள் நான் வழக்கம்போல அரசருடன் காமவல்லியம்மாளின் அந்தப்புரம் சென்றேன். எனக்குச்சரியான சந்தர்ப்பம் ஏற்பட்டது. சாந்தாவும் நானும் வார்த்தையாடிக்கொண்டிருந்தோம். அதை எப்படியோ காமவல்லியம்மாள் மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்திருக்கிறாள். சாந்தா என்னை மணப்பதற்கு வேண்டிய பொருளுதவி தானே செய்வதாகவும், தன்னிஷ்டப்போல மணத்தை முடித்துவைக்கப்போவதாகவும் கூறினளாம். நானும் மிகுந்த சந்தோஷத்துடன்தாணிருந்தேன். இன்று அஸ்தமயமாகும் வேளையில் இன்றே எனது விவாகத்தை மகாராணியார் நடத்திவைக்கப்போவதாக சாந்தா என்னிடம் கூறினள். சிறிதுநேரத்திற்கெல்லாம் சுகுமாரர் உடைபோன்ற ஒன்றை எனக்கனுப்பப்பட்டு அணிவிக்கப்பட்டது. சாந்தாவே என்னைக்கூட்டிச்சென்றாள். காமவல்லியம்மாள்முன் என்னை அவள் விட்டுச்சென்ற சிறிதுநேரத்திற்கெல்லாம், என்னை சத்தியவல்லியம்மாளின் சயனக்கிர

றத்திற்கு அழைத்துச்சென்று, சாந்தா வரும்வரை என்னை அங்கு தாமதித்திருக்கச்சொன்னார்கள். நான் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு ஆக்ஷேபித்தேன். ஒன்றும் பயனில்லாது போயிற்று. நான் தங்கியிருக்க நேரிட்டது. எனக்கு பயத்தாலும், சோர்வினாலும், என்னையறியாது உறக்கம் வந்துவிட்டது. பல சொல்லியுமென்ன? அங்கு இடப்பட்டிருந்த ஒரு பஞ்சணையில் என்னைக் கட்டாயத்தின்பேரில் படுக்கச்செய்தாள். நான் என்னை மறந்து உறங்கிவிட்டேன். இதுதான் எனக்குத்தெரிந்தது.

சத்: நளினா! நடந்தது இவ்வளவுதானா?

நளி: ஆம்! சத்தியசீலரே! இதற்குமேல் ஒரு இம்மியும் நடக்கவில்லை.

சத்: நன்றாக ஆலோசித்துச்சொல். உன் பக்கத்தில் படுத்திருந்தது எவராயிருக்கலாம்?..........

நளி: என் பக்கத்திலா? ஒருவருமில்லையே. நான் உறங்கும்வரை ஒருவரும் அவ்வறைக்குள் வரவேயில்லை. உறங்கிய பின்னரே ஒருவேளை அரசி சொல்லியபடி நடந்திருந்தால் சாந்தாவாயிருக்கலாம். அப்படி அவள் வந்திருந்தாலும் என்னை அவசியம் எழுப்பியிருப்பாள். அதனாலேயே ஒருவரும் வரவில்லையென நிச்சயமாகக்கூறுகிறேன்.

சத்: நளினா! நான் உன்னை ஒருவகையில் நம்பவேண்டியதாகவே இருக்கின்றது. இருக்கட்டும். எதற்கும் சிறிது நேரம் கவலையற்று உறங்கு. நான் உன்னை நீ கூறியது உண்மையென அறிந்ததும் எப்படியும் காப்பாற்றுகிறேன்.

நளி: சத்தியசீலரே! என் வார்த்தையை நம்பிக் காக்கிறேனெனக் கூறியதற்காக நான் மனமாரச் சந்தோஷிக்கிறேன்.

[நளினன் உட்செல்ல, சத்தியசீலன் சத்தியவல்லியிடமணுகுதல்.]

சத்சீ: அம்மணி!

சத்: அம்மணி! யார் அது?

சத்சீ: அம்மணி! நான்தான் சத்தியசீலன்.

சத்: சத்தியசீலரே! எங்குவந்தீர்? இப்பாபியைக் காணவோ?

சத்சீ: அம்மணி! இன்னொருமுறை அப்படிக்கூற வேண்டாம். தாங்கள் பாக்கியசாலி.

சத்: பாக்கியசாலியா? என் காலையில் கதிரவன் உதயமாகுமுன் காலனை நாடுவதாலா?

சத்சீ: அம்மணி! தாங்கள் அதை எதிர்பார்க்கவேண்டாம். தங்களைத் தப்புவிக்கவே வந்திருக்கிறேன்.

சத்: தப்புவிக்கவா? சக்கிரவர்த்தியார் வாக்குக் கெதிர்வாக்குண்டோ?

சத்சீ: அம்மணி! எதற்காகத் தங்களைக் கொல்லப் போகின்றார்—என்பதாவது தங்களுக்குத் தெரியுமா?

சத்: அதுதான் எனக்கும் தெரியவில்லை. தெரிந்து கொள்வோமெனினும் நான் எவருடனும் பேசவும் அனு

மதிக்கப்படவில்லை. பதியுடன், சதி என்னும் நிலைமையில் நானும் உயிரிழக்கக் கடமைப்பட்டவள்தானே. நாங்களிருவரும் இறக்கத்தக்க எக்குற்றமியற்றினோமோ தெரியவில்லை. சத்தியசீலரே! என் நாதர் தங்களை அதிகமாக நேசித்து வந்தார். எவருடனும் நாங்கள் பேசக்கூடாதபடியோ காவலுக்கிரையாகவிருந்தோம். எக்குற்றத்திற்காக எங்களுக்கு இக்கதி வந்ததென்று தெரியாமலே நடக்கின்றது என்பதைத் தங்களிடமாவது அறிவித்துவிட்டதால் சிறிது திருப்தியடைந்தேன். எனது படத்தைத் தாங்கள் முதன் முதலாகப்பார்த்ததும், "இவளை மணப்பவர் மாதம் மூன்றிற்குள் பெருந்திங் கெய்துவர்" எனக் கூறினீர்களாம். அவ்வாறின்றி அவருடன் சேர்ந்து நானும் அனுபவிக்கப் போவதற்காகவே சந்தோஷிக்கின்றேன். ஆனால் அந்தோ! சத்தியசீலரே! என்னுடைய கெட்டகாலமன்றோ அவருக்கும் இடையூறு விளைவித்துவிட்டது? ஐயோ! அவர் என்ன நினைக்கின்றாரோ! என்னபாடு படுகின்றாரோ. துரதிருஷ்ட வசத்தாலேயே அவர் என்னை மணக்க நேர்ந்தது. சத்தியசீலரே நான் ஒருவேளை இறக்கும்வரை என் கணவரை பாராதிருக்க நேரிட்டாலும் நேரிடலாம். தாங்கள் என்னைக் கண்டதுபோல இச்சிறைக்கூடத்தில் காண நேரிட்டால், துர்ப்பாக்கியவதி சத்தியவல்லியை மறந்துவிடும்படிக்கும், என் துரதிருஷ்டத்தால் வந்த கஷ்டத்திற்காக என்னை மன்னித்துவிடும்படிக்கும் வேண்டிக்கொண்டதாக உரையும். நான் இந்நிலைமையில் அவருக்குக் கூறத்தகுந்ததாயில்லை. சத்தியசீலரே! ஒரு துரதிருஷ்டவதியால் நம் நண்பர் இறந்தாரென என்னை எண்ணவேண்டாம். என்னையும் அதற்காகத் தாங்கள் மறந்து மன்னித்துவிடும்.

சத்சீ: (தனக்குள்) எல்லாம் நாம் எண்ணியவண்ணம் தான் நடந்திருக்கிறது. எல்லாம் காமவல்லியின் சூதென நன்கு புலப்பட்டுவிட்டது. சத்தியவல்லியம்மாள் வழக்கம் போலத் தன் படுக்கையறைக்குச் சென்றபொழுது காமவல்லியம்மாள் ஏற்பாட்டின்படி படுத்திருக்கிற நளினனைக் கணவனெனவெண்ணிப் பக்கத்தில் படுத்தூங்கியிருக்கிறாள். ஆகவே நடந்திருக்கும் சூது சிறிதளவும் காமவல்லியம்மாளைத்தவிர வேறெவருக்கும் இதுவரை வெளிப்படாதிருந்திருக்கிறது. இதை இனி நானே பகிரங்கப்படுத்தினாலும் சமய சந்தர்ப்பங்களினால் அது அங்கீகரிக்கப்படப்போவதில்லை. எதற்கும் ஒரு தந்திரம் செய்கிறேன். சத்தியவல்லியம்மாள் எண்ணும் வண்ணம் நளினனே சுகுமாரன் என வைத்துப்பேசித் தந்திரமாக இங்கிருந்து இவ்விருவரும் ஒருவரையொருவ ரறிந்துகொள்ளாது அழைத்துச் சென்று, சமயம் வரும்வரை மறைத்துவைத்திருந்து சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதே வெளிப்படுத்தவேண்டும். எதற்கும் இதைச் சத்தியவல்லியம்மாளின் மனம்போலச் சிறிது பேசிச் சம்மதிக்கச்செய்யவேண்டும். (வெளிப்படையாய்) வேண்டாம்! அம்மணி! வீணில் துக்கிக்கவேண்டாம். நடப்பது நடந்துதானே தீரும். உங்களிருவரையும் தப்புவிக்கவே நானிங்கு வந்திருக்கிறேன். உண்மையில் தாங்களும், தங்கள் கணவரும் நிரபராதியே! ஆனால் ஒன்று கூறுகின்றேன்,....... நான் குறிப்பிடும் நாள்வரை வெளிவராது. உமது கணவருக்கும் அகப்படாது. ஒரு இடத்தில் மறைந்து வசிப்பதாயின் காப்பாற்றுவேன்.

சத்: அந்தோ! அதுமாத்திரம் என்னால்முடியாது.

சத்சீ: அம்மணி! அது தங்களால் முடியாதென்பதை நானறிவேன். ஆனால்............ஆலோசித்துப் பேசுங்கள். முழுமையும் நான் இப்பொழுது எனக்குத் தெரிந்திருக்கிற சில இரகசியங்களை வெளியிடக்கூடாது. குற்றஞ்செய்யாத தங்கள் மீதே இப்பொழுது அபாண்டமான பழியைச் சுமத்தியிருக்கிறார்கள். இதைப்பற்றி அரசருக்கு எவர் எவ்விதம் கூறியபோதிலும் அரசர் இந்நிலையில் கேட்கப்போவதில்லை. சந்தர்ப்பம் அப்படியிருக்கிறது. ஆனால் என் முயற்சியால் என்றேனும் ஒருநாள் நேருக்குநேராக அரசர்முன் எல்லாம் வெளிப்படப்போகின்றது. அப்பொழுதே, தங்களையும், தங்கள் கணவரையும் அரசர் நம்புவார். ஆனால் அதுவரை தாங்கள் நாளை சூரியோதய காலத்திற்குள் இறந்துவிட்டதாக அரசர் முதலியோர் நினைத்திருக்கவேண்டும். சமயம் நேரும்பொழுது தாங்கள் வெளிப்படவேண்டிய ஏற்பாட்டைச் செய்வேன். அதுவரை என்னை எதற்கும் காரணம் கேட்கக்கூடாது.

சந்: சத்தியசீலரே! நான் உம்மை நம்புகிறேன். தாங்கள் எனது கணவரின் உயிருக்குயிரான நண்பர் என்பதற்காக நான் உமது வார்த்தைக்குக் கட்டுப்படுகிறேன். நான் இறந்துவிட்டாலும் சரி! உமது நண்பரைக் காப்பாற்றும். அதுதான் நான் விரும்புவது.

சத்சீ: அம்மணி! சற்றிரும் அதற்குவேண்டிய ஏற்பாட்டைச் செய்துவிட்டுச் சீக்கிரம் திரும்புகிறேன் (நளினனிடம் சென்று) நளினா! (சிறைக்கதவைத் திறந்து) வெளியே வா சீக்கிரம்! சீக்கிரம் (நளினன் வெளியே வரல்) சிறிதும் தாமதிக்காதே! ஒன்றும் பேசாதே என்னுடன் நட (செல்லு

கின்றனர்) (திரும்பி சிறைக்கதவை முன்போலப் பூட்டிவிட்டுச் சத்தியவல்லியிடமணுகி) அம்மணி! வெளியேவாரும் விரைவில் நேரமாகிறது. சிறிதளவு சத்தம் கேட்கக்கூடாது. ஒன்றும் பேசவேண்டாம். (செல்லுகின்றனர்).

[திரும்பப் பிரவேசித்தல்].

அப்பா! பட்ட சிரமத்திற்கு பாதியளவு பலன் கிடைத்துவிட்டது. இனி நான் சிறைப்பட்டவரைப் பார்க்க வந்தவன்போ லபிநயித்துக் காவலரை ஏமாற்றி அரசனிடம் பொய்யுரைக்கச் செய்யவேண்டும். எதற்கும் நான் அதோ திறந்துவைத்திருக்கும் சிறையின் கதவை ஓசையிட்டுப் பூட்டிவிட்டு ஓடிவிடுகிறேன். காவலர்கள் விழித்துக்கொள்ளுவார்கள். பின்பு பார்த்துக்கொள்ளுவோம்.

[ஓசையிட்டுக் கதவைச் சாத்திவிட்டுச்செல்லல்.
காவலர் விளித்துக்கொண்டு வருதல்].

முதல் சேவகன்: ஐயையோ! அந்தப்பயல் நளினனையும், சத்தியவல்லியையும் காணோம்!........இதென்னடா அநியாயம். சிறையிட்ட பின்புமா சத்தியவல்லியம்மாள் நளினனையும் கூட்டிக்கொண்டு எங்கோ ஓடிவிட்டாள்போலிருக்கிறது. கதவுகளெல்லாம் பூட்டப்பட்டபடியே இருக்கின்றதே. சரிதான்! இது சத்தியவல்லியின் வேலையாகத் தானிருக்கும். நமக்குத் தெரியாமல் சிறைக்குள்ளெங்கேனும் சுரங்கமிருக்கும். அது வழியாகவே இருவரும் மனமொத்து ஓடியிருக்கின்றனர். இதை அரசரிடம் இவர்களைக் காணோமெனக் கூறச்சென்றால் நம்தலை போய்விடும். இதற்கென்ன செய்வது.

இ சே: என்ன செய்வது? ஒன்றும் செய்யமுடியாது. அந்த இரண்டு தலைகளுக்குப்பதிலாக வேண்டுமானால் நம்மிருவர் தலையையும் கொடுக்கலாம். அதுதான் நடக்கும். வேறென்னசெய்வது. இது வெளியே தெரியாமல் மறைக்கக்கூடிய சமாசாரமுமன்று நாம் சொன்னவிட்டோமெனப் பொய்கூறி அவ்விருவரும் அகப்பட்டுவிட்டாலோ, கேட்கவேண்டியதில்லை. என்னசெய்வது?....(திடுக்கிட்டு) ஆ! அதுயார் அரசர்போலன்றோ இருக்கிறது. இப்பொழுதே வந்துவிட்டது நமக்காபத்து.

[சத்தியசீலன் பிரவேசித்தல்.]

மு சே: சத்தியசீலரா! (மற்றொரு சேவகனைப்பார்த்து) அடே! என்னசெய்கிறது இப்பொழுது?

இ சே: ஆமாம் வேறென்ன செய்கிறது? ஊதுகிற சங்கை ஊதினால் விடிகிறபோது விடியட்டும் என்கிறமாதிரி நடந்ததைச்சொல்லி யோசனைகேள் முடியாவிட்டால் நடப்பது நடக்கட்டும்.

மு சே: ஐயா! சத்தியசீலரே! எங்கு வந்தீர்கள்?

சத்: இங்கு அடைப்பட்டிருக்கும் சத்தியவல்லியையும்............நளினனையும், இரண்டொரு விஷயம் கேட்டுப்போகலாமென வந்தேன். அவர்கள் எங்கு அடைக்கப்பட்டிருக்கின்றனர்?

மு சே: சத்தியசீலரே! நாங்களும் இப்பொழுது அவர்களை எங்கே என்றுதான் ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். கதவு பூட்டியபடியே இருக்கின்றது. ஆட்களைக்

காசென்றூர். இதற்கேதாவது தாங்கள்தான் ஒருவழிசொல்லி எங்களைக் காப்பாற்றவேண்டும். நாங்கள் பிள்ளைக்குட்டிக் காரர்கள் பொழுதுவிடிந்தால் எங்கள் தலை போய்விடும். சிறையிலிருந்துதான் தப்பிபோடியது ஒடினூர்கள். தான் மாத்திரம் பொனூலென்ன? நளினனையுமா இன்னும் கூட்டிக்கொண்டு போகவேண்டும்? நளினன்பாடு கொண்டாட்டம்தான், எங்கள் பாடோ திண்டாட்டந்தான். இந்த துரதிருஷ்டத்திற்கென்னசெய்வது?..........எங்களைத் தப்புவிக்க ஏதாவது உதவிசெய்யத் தங்களால் முடியுமா?

சத்சீ: (தனக்குள்) சரியான வேலைசெய்தேன். நாம் எண்ணியபடியே முடிந்தது. நம்யோசனையைச் சொல்வோம். (வெளிப்படையாய்) சேவகர்களே! இது உங்களுக்குத் தெரியாமலே நடந்திருந்தாலும் பெரிய குற்றந்தான். இதற்கு ஒரு யோசனை சொல்லுகிறேன். ஒருவேலை செய்யுங்கள். நானும் உங்கள் கக்ஷியில் சேர்ந்துகொள்ளுகிறேன். அவர்களைக் கொன்றதை நானும் பார்த்தேன் என்று வேண்டுமானூலும் அவசியம் நேர்ந்தால் சொல்லுகிறேன். அவர்கள் எப்பொழுதாவது எங்காவது அகப்பட்டாலும் கொண்டுவந்து ஒப்புவித்துவிடுகிறேன். ஆனூல் நான் உங்களை நம்பிப் பொய்சாக்ஷி சொல்லவேண்டியிருக்கிறதற்காக எனக்கொரு காரியம் செய்யவேண்டும்.

மு சே: சத்தியசீலரே! சத்தியவல்லிக்காகக் கொடுக்கவிருந்த உயிரை உம்மால் காக்கப்பட்டதால், அவசியம் நேர்ந்தால் உங்களுக்காகக் கொடுக்கவேண்டியிருந்தாலும் கொடுக்கிறேம்.

சத்: சேவகா! வேண்டாம்! எனக்கு எவ்விதத்தாம் உனது உயிர் வேண்டாம். ஏதாவதொரு சமயத்தில் நான் உங்கள் உதவியை நாடுவேன். அது எதுவாயினும் எனக்காகச் செய்யவேண்டும்.

மு சே: ஐயா! கண்டிப்பாக நாங்கள் தங்களுக்குச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சத்: சரி! ஏதாவதொன்றைக்கொன்று விடுத்ததும் அரசரிடம் காண்பித்து அதுவே சத்தியவல்லியும் நளினனு மெனக் கூறிவிடுங்கள். அவசியம் நேரும்பொழுது நான் வருகிறேன். உங்களுக்குக் கெடுதல் வாராவண்ணம் வேண்டிய ஏற்பாட்டைச் செய்கிறேன். ஆனால் எனக்கு நீங்கள் செய்யவேண்டியதென்ன தெரியுமா? எனது நண்பர் சுகுமாரர் ஒருக்கால், அரசனின் கோபத்துக்குப்பாத்திரமானால் அவர் உங்கள் பாதுகாப்பிலிருக்க நேரிட்டால், என்னைக் காணும்வரை, என்னுத்திரவின்றி அவருக்கு ஒரு கெடுதலும் வராமற் காக்கவேண்டும் அவ்வளவுதான் சென்றுவருகிறேன். (செல்லல்).

இ சே: அடே! உன்னை சத்தியசீலர் ஏமாற்றிவிட்டார். இந்த யோசனை நமக்குத் தெரியாதா?

மு சே: நமக்குத் தெரிந்திருந்தாலும் பிரயோஜனமில்லை. ஏழைசொல் அம்பலமேறுமெனக் கேட்டிருக்கிறாய் அல்லவா! ஒருபெரிய அரசரின் மந்திரிபோன்ற நண்பர் நான் பார்த்தேன் என்று சொல்லும்பொழுது, அகப்பட்டுக்கொண்டால் முதலில் அவர்தான் அகப்பட்டுக்கொள்ளுவார். அந்தமட்டில் நாம் குற்றமற்றவர்களல்லவா? இனி இது சம்பந்தமான பொறுப்பு அவருடையது.

இசே! சரி! எப்படியிருந்தாலென்ன? அவர்கள் முடியது முடிவிட்டார்கள். நாம் பொய்சொல்லத் துணிந்தது துணிந்துவிட்டோம். அதற்குப்பின் இனி நடப்பது நடக்கட்டும். வா போவோம். (செல்லல்)

9-வது சீன்.

இடம். சந்திரகிரியில் சுகுமாரனது அறை.

காலம். மாலை.

[சுகுமாரன் தனதறையில் உட்கார்ந்துகொண்டிருந்தல்.]

சுகு: அந்தோ! எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கின்றதே. ஈசனே! நான் என்ன செய்வேன். ஐயோ! எல்லாம் நான் அப்பெண்பேயை மணந்ததன் பலன் ஐயோ கடவுளே! எனக்கா இத்தீங்கை நீ இழைக்கவேண்டும்? நான் நாளையே என் நாடு திரும்பவேண்டும். அங்கு எனது பிற நண்பர்களும், பிரதானிகளும், மந்திரிகளும், உற்றாரும் உறவினரும் என்னை க்ஷேமம் விசாரிக்கும்பொழுது அவர்களுக்கு என்ன கூறுவேன். எதை உரைப்பேன். அந்தோ வெட்கம்! வெட்கம்!!

[கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுதல்.
காமவல்லி பிரவேசித்தல்].

சுகு: அம்மணி! தாங்களெங்குவந்தீர்கள்? மாலை நேரமாயிற்றே. தனிமையாகவா வந்திருக்கின்றீர்கள்?

காம: சுகுமாரரே! ஏன் அழுதுகொண்டிருக்கின்றீர். நான் தனித்துவரவில்லை என் சேடியர் வெளியே நிற்

கின்றனர். என் கணவனின் அத்தை மகன் என்னும் முறைமையில் உம்மைத் துக்கம் விசாரித்துச்செல்ல வந்தேன்.

சுகு: அம்மணி! ஆயிரமிருந்தாலும் என் மனைவி இறந்தபின் நான் முழுவதும் அன்னியனன்றோ. அப்படியிருந்தாலும் விசாரிக்கவேண்டியவன் நானன்றோ? தாங்களல்லவே.

காம: சரி! அதைப்பற்றியென்ன? நடந்தது நடந்துவிட்டது. இனி வருந்தி யென்ன பிரயோஜனம்?

சுகு: அம்மணி! அந்தோ! நான் அவள் இறந்து போய்விட்டதற்காக வருந்தவில்லை. நான் நாளை என் ஊர் செல்வதாக உத்தேசித்திருக்கிறேன்........சென்றால் என்னை க்ஷேமம் விசாரிப்பவருக்கு நான் என்ன கூறுவேன். தீராப் பழியைத் தேடிவைத்தாள் என் மாமன் மகள் என்று கூறவோ? அதற்கே வருந்துகிறேன்.

காம: அரசே. வேண்டாம். வீணில் அதற்காக வருந்துவானேன். மனிதர் என்னும் நிலைமையில் எவர்தான் சுத்தமான மனத்தினர். உலகமே அப்படித்தான். அவளிறந்துவிட்டால் வேறு பெண், மன்மதனையொத்த கீர்த்தி தங்களுக்குக் கிடைக்காதோ? ஏதோ கொஞ்சம் அழகி என்னும் சபலமின்றியா வருந்துகின்றீர். பெண்மக்களோ பிறன் வீட்டவர். மனைவி என்னும் நிலைமையில்தானே அவள் தங்களுக்குப் பாத்தியப்பட்டவள். அவளே இக்காரியம் செய்தால் அந்த அவமானம் அவளுக்கன்றித் தங்களுக்கேது? உலகில் பெண்மக்கள் பிறருடன் சம்மந்தம் வைத்துக்கொண்டால் விபசாரி என்று கேவலமாக அழைக்கப்

படுகின்றனரேயன்றி, அதுபோலப் புருஷன் பெண் மக்களிடம் நடந்துகொண்டால் அப்படிப் பாதிக்கப்படவில்லையல்லவா? யோசித்துப்பாரும்.

சுகு: அம்மணி! என் துக்கத்தை அதிகப்படுத்த வேண்டாம். என் நிலைமை வேறு, என்விதி வேறு. நான் துசகிக்கவேண்டியிருக்கிறது அது எனக்கல்லவோ தெரியும். சென்றுவாருங்கள். என்னிடம் இவ்வளவாவது அன்பு கொண்டு விசாரிக்க வந்ததைப்பற்றி நிரம்ப வந்தனம்!

காம: அரசே! உங்களது துக்ககரம் பொருந்திய இச்சமயத்தும் அன்பான குரலுடன் பேசுவது என்னைக் கட்டுப்படுத்திவிட்டது. இனிமேல் நடக்கப்போவதென்னவென்பதையும் என் மனம் அறிய ஆவலுடனிருக்கிறது.

சுகு: அம்மணி! வீண் வார்த்தையாடுவானேன். என்னை மன்னியும். மேல் நடக்கவேண்டியதென்னவென்பது எனக்குத் தெரியும். தாங்கள் சென்றுவாருங்கள்.

காம: (தனக்குள்) சும்மாவா சென்றுவிடப் போகின்றேன். (வெளிப்படையாய்) அரசே! தங்களைத் துக்கம் விசாரிக்கமாத்திரம் நான் வந்திருந்தால் அப்பொழுதே சென்றிருப்பேன். ஆனால்............

சுகு: ஆனால்!...........வேறென்ன விஷயம் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

காம: (தனக்குள்) நான் இப்பொழுது என்ன கூறுவது?...........ஆம் கைக்குட்டையை ஆதாரமாக வைத்துப் பேசுகிறேன். (வெளிப்படையாய்) அரசே! அதுவா?

ஐயோ! தாங்களாவது இறந்தவனுக்காக வருந்துகின்றீர். நானோ உயிருடனிருப்பவராகிய ஒருவருக்காகவும், எனக்காகவும் சேர்த்து வருந்தவேண்டியிருக்கிறது.

சுகு: யார் அது? அப்படிப்பட்டவர் யார்?

காம: அந்தோ! அது தாங்கள்தான்! நான்தான்!

சுகு: அம்மணி! தங்களுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்? என்ன கூறுகின்றீர்கள்?

காம: சம்மந்தமா! சம்பந்தமில்லாமலா பேசுகின்றேன். சத்தியவல்லியின்மீது ஏற்பட்டிருந்த அளவுகடந்த மையலினால் அப்படி மறந்துபோய்விட்டதுபோலிருக்கிறது. எனக்கும் தங்களுக்கும் உள்ள சம்பந்தம் என்னவிருக்குமென்று இன்னும் தாங்கள் தெரிந்துகொள்ளவில்லையா?

சுகு: அம்மணி! தங்களுக்கும் எனக்கும் ஒரு சம்மந்தமுமில்லையே. இவ்வார்த்தை தங்கள் சேடியர்காதில் விழுந்தாலும் நகைப்பாரே.

காம: சரிதான்! அது எனக்கல்லவோ தெரியவேண்டும்.

சுகு: அம்மணி! வேண்டாம்! ஏன் வீண்வார்த்தை சீக்கிரம் என்னைவிட்டுச் சென்றுவிடுங்கள். என்மனம் மிகவும் புண்ணாயிருக்கிறது.

காம: ஏன்? நான் இன்னும் உம்மை ஒன்றும் தொந்தரை செய்யவில்லையே. தவிர நான் தங்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறேனா விட்டுவிடுவதற்கு? என்மனம் எவ்வளவு புண்ணாயிருக்கிறது தங்களால்? அது தங்களுக்குத் தெரியுமா?

சுகு: அந்தோ! தங்கள் மனம் புண்பட நான் என்ன செய்தேன்.

காம: அரசே! நான் அதைச்சொல்ல ஆரம்பித்தால் இன்னும் எனக்கும் தங்களுக்கும் அதிக கஷ்டமே. நான் மாத்திரமல்ல. தாங்களும் இன்னும் ஆபத்திலேயே இருக்கின்றீர்கள். நான் மறைத்துப்பேசுவதில்தானென்ன பயன். தங்கள் மனப்புண் ஆறுவதற்கும் என் மனப்புண் ஆறுவதற்கும் ஒரே வழிதானிருக்கிறது.

சுகு: எனக்கொன்றும் விளங்கவில்லையே. ஒன்றும் வேண்டாம். சென்றுவிடுங்கள்.

காம: சுகுமாரரே! நான் சென்றால் உமக்கு இன்னும் கெடுதலே. சற்று கவனியும். உமது கைக்குட்டை என்னவாயிற்று என்பதைப்பற்றி இப்பொழுதாவது தங்களுக்கு ஞாபகம் வருகிறதா.

சுகு: இல்லையே.

காம: அதனலேயே இத்தகைய பிரமாதங்கள் விளைய நேரிட்டது. தாங்கள் அன்று எனது மாளிகைக்கு வந்திருந்தபொழுது, மறதியாக அந்தக் கைக்குட்டையை எனதறையில் விட்டுச்சென்றீர்கள், அது வீரவர்ம மகாராஜரிடமே கிடைத்துவிட்டது. அவர் அதைக் கண்டதும் என்மீது சந்தேகம்கொண்டுவிட்டார். அதனல் உமக்கும் எனக்கும் எத்தகைய ஆபத்து நேரவிருக்கிறது என்பதை இப்பொழுதாவது ஆலோசித்துப்பாரும். இடையே சத்தியவல்லியின் விஷயமொன்று நடந்துவிட்டபடியால் நம்மை விசாரிக்கத் தருணமில்லாதுபோயிற்று. ஆனல் தாங்கள்

ஊருக்குப்போவதும் அதனால் தடை ஏற்படக்கூடும் என்பதை நினைத்துப்பாரும். நானும் கெட்ட பெயரெடுத்தது எடுத்துவிட்டேன். எப்படியாவது முயன்று உம்மைத் தப்புவித்து உமது ஊருக்கு அனுப்புவேன். குற்றவாளியல்லவெனப் பாடுபட்டு உமது சார்பாக பேசுவேன் ஆனால் !..........

சுகு: ஆனாலென்ன ?

காம: அது தங்களைப் பொறுத்ததாக இருக்கிறது. தாங்கள் ஒரேயொரு காரியத்திற்கு மாத்திரம் சம்மதிக்க வேண்டும்.

சுகு: அப்படிப்பட்ட காரியம்தானென்ன ?

காம: அதுவா ! நான் முன்பே கூறியதுதான். என்னுடன் இணங்கிவிடவேண்டியதுதான்.

சுகு: போதும் நிறுத்துங்கள். அதற்கு ஏற்கனவே, முன்பே நானும் பதிற்கூறிவிட்டேன்.

காம: ஆனால்! அரசே! நான் முன்முறைபோல இப்பொழுது தங்களிடம் இதுவரை நடந்துகொள்ளவில்லை என்பது நினைவிருக்கட்டும். இம்முறை கூறுவதைச் சற்று நன்றாகக்கவனியும். என் வார்த்தைக்கிணங்கினால், உமக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் செய்து உம்மைப்பற்றி அரசரிடமும் பரிந்துபேசி, உம்மீது ஒருகுற்றமும் நிலைக்க இடமின்றிச் சமாதானத்துடனனுப்புவேன். நான் ஒரு சக்கிரவர்த்தினி என்றும் நினையாது உம்மைப் பணிந்து வேண்டிக்கொள்ளுகிறேன். தயை செய்யும். (பணிதல்)

சுகு: அந்தோ! அம்மணி! வேண்டாம். (தலை குனிதல்)

காம: (அருகிலணுகி) அரசே! சற்று நிமிர்ந்து என்னைப்பார்த்துப்பேசும். என்னைப் பார்க்கவும் உமக்கு வெட்கமாயிருக்கிறதோ? சற்றுப்பாரும். (கையைத்தொடல்)

சுகு: (திமிரிக்கொண்டு) அம்மணி! இது இரண்டா முறை. இதற்கு நான் முன்சொன்னதே பதில்.

காம: உம்! அரசே! முடிவாகச் சொல்லுகிறேன். என் வார்த்தைக்கிணங்கும். இல்லையேல் முன் தவறவிட்டுச் சென்றிருக்கிற தங்கள் கைக்குட்டை அரசரிடமே இருக்கின்றது. அவர் உம்மைச் சந்தேகிக்கிறார். நானும் உம்மீது அபாண்டமான பழியைச் சுமத்துவேன். பின்னர் வருந்திப் பயனில்லை. வேண்டாம்............இப்படியெல்லாம் வெறுப்புற்றவர்போல அதட்டிப்பேசி என்னைப்பரிசோதிக்க முயல வேண்டாம். உண்மையில் நான் உம்மைக் காதலிக்கிறேன். எனது அழகிய ஆசை நேயா............வீண் பிடிவாதம் செய்ய வேண்டாம். வாரும். (அருகில் நின்று அணைதல்)

[சுகுமாரன் திமிரித் தள்ளல் காமவல்லி கீழே விழுதல்.]

சுகு: சீ! பைத்தியம்பிடித்த பேயே! உன்னைப் படைத்த கடவுள் குருடனோ? அந்தோ! என்ன தைரியம். ஒரு வேசையும் இப்படி நடவாளெனக் கருதுகிறேன். சீ!.... வெளியே சென்றுவிடு. இல்லையேல் முதலில் உன்னைக் கொன்றுவிடுவேன். நானோ முன்பே இறக்கச் சித்தமாக இருக்கிறேன். உனக்கோ அதனால் பல ஆசை நாயகருடன் சுகிக்கும் எண்ணத்திற்குத்தான் நஷ்டம். எனக்கல்ல.

காம : ஆ! ஐயோ! சண்டாளன். பெரிய ஏகபத்தினி விரதமனுபவிப்பவனைப்போன்று பாசாங்கு செய்கிறான். (எழுந்து) என்னை மண்ணின்மீது உருட்டினாய்......குமாரா சொல்லுகின்றேன் இதற்கு வழி. உன் உயிருள்ளளவும் நீ இதைக்காட்டினும் என்னிடம் மிருகத்தனமாய் நடப்பினும், உன் முகவசீகரம் என் மனத்தைவிட்டு மாறுதிருக்கின்றமையால், நீ இசையும்வரை எவ்விதத்தும் துன்புறுத்துவேன். அத்தனையும் நீ பொறுத்து மீண்டும், இவ்வாறிருந்தால், அப்பொழுது உன் உயிருக்கும் நானே நமனுவேன். இது சத்தியம். (வெளியே செல்லல்)

சுகு : இதென்ன பெரிய சங்கடமாகவிருக்கிறது. துன்பத்திற்குமேல் துன்பமா? ஐயோ! ஈசனே! என்னை ஏன் படைத்தாய்? என் கைக்குட்டையையே ஆதாரமாகவைத்து எனக்குக் கெடுதி செய்யப்போகின்றாளாம். அந்தோ! ஒன்றன்பின்னொன்றாக எத்தனை துன்பங்கள் எனக்கு நேருகின்றன. என்ன செய்வேன். வானத்தின்கீழ் குடியிருக்கும் மனிதர் மழையிடிக்கஞ்சுவதே போன்று விதியின் அடிமையாகிய நான் வேறென்ன செய்யப்போகிறேன், என்னாலானது என் உயிருள்ளளவும், எனது விஷயங்களைச் சத்தியசீலனிடம் உரைத்துவிடவேண்டியதே. ஒருவேளை காமவல்லி கூறியபடியே செய்வதாயின் நான் சத்தியசீலனைச் சந்திக்க அவகாசமின்றிப்போனாலும் போய்விடும். நான் இப்பொழுதே சத்தியசீலனைத் தேடிச்செல்லுகிறேன்.

(செல்லல்)

10-வது சீன்.

இடம். காமவல்லியின் அந்தப்புரம்.

காலம். மாலை.

[காமவல்லி ஆலோசித்தவண்ணம் உலாவிக்கொண்டிருந்தல்.]

காம: (தனக்குள்) ஐயோ! நான் இவ்வளவு செய்தும் என்ன பயன்..........வேண்டாமென வெறுத்துவிட எண்ணினேன். சுகுமாரன் தவரவிட்டுச் சென்ற கைகுட்டையால், என்னைத் தப்பித்துக்கொள்ளச்செய்த தந்திரம் சத்தியவல்லியை நமனுலகனுப்பிவிட்டது. அது என்மீது அளவுகடந்த குற்றமே. நான் என்னசெய்வேன். ஆயிரமிருந்தாலும் அற்பக் குற்றமும் செய்யாத அழகி சத்தியவல்லியைக் குற்றவாளியாக்கிப் பாபத்தை தேடிக்கொண்டதெல்லாம் எதற்காக. அந்தோ! எனது காமமன்றோ அதற்குக்காரணம். இதை முன்னரேயறிந்தே, எனக்குக் காமவல்லியெனப் பெயரிட்டனரோ? ஈசனே! என்னசெய்வேன். இவ்வளவும் நான் எதற்காகச்செய்தேன்? அந்தச் சுகுமாரனை விரும்பியன்றோ? அந்தோ! நான் எப்படி அவனை மறந்துவிடமுடியும்? நான் எனது வெட்கம், மானம், அந்தஸ்து முதலியவற்றை விடுத்து, எப்படியோ அவனை மீண்டும் வற்புறுத்தினேன். அந்தோ! கொடுமை! என்னை சக்கிரவர்த்தினியாகிய என்னை! த்திமிறித் தள்ளினான் தரையில். ஐயோ! ஏனோ அப்படியிருந்தும் என் மனம் இன்னும் வெறுப்படையாது, அவன்மீதே செல்லுகின்றது. என்னசெய்வேன்? எட்டாப்பழமாக முடிந்துவிட்டதே. என்னால் முடிந்தவரை முயன்றும் பயனில்லாது போயிற்று. எனக்கு இணங்காத இச்சுகுமாரன் இனி இருந்தாலென்ன இறந்தாலென்ன? நான் அவன்மீது என்னைப் பலாத்காரம்

செய்ததாகப் பழிசுமத்தி, என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளுவேன்.........ஆனால் அந்தோ! பாவம் ஒருபாவமு மறியான். என்னசெய்வது? பின்னரேனும் சம்மதித்தால் உயிரையேனும் தப்புவிக்கலாம். ஆனால் ஐயோ! அவன் விதி அப்படி இல்லையென்றே கருதுகிறேன். அவனினி இறக்கவேண்டியதே. (துக்கித்தல்)

[வீரவர்மன் பிரவேசித்தல்.]

வீர: காமவல்லி!

காம: (தனக்குள்) ஐயோ! அரசரும் வந்துவிட்டார். நான் துக்கிப்பதையும் கண்டுவிட்டார். நான் அவரிடம் கூறாது விட்டுவிடலாமாவென்று ஆலோசிக்கவும் அவகாசமின்றி சேர்ந்துவிட்டதற்கு நான் என்னசெய்வேன். நான் இப்பொழுதும் என்னைத் தப்பித்துக்கொள்ளவேண்டுமானால் பாசாங்கு செய்யவேண்டியதே!...........

வீர: காமவல்லி!...........

காம: ஆ! அதுயார்? பிராணநாதா! பிராணநாதா!!

வீர: காமவல்லி! உனக்கென்ன நேரிட்டது. (அருகில் நெருங்கி அணைத்துக்கொண்டு) ஏன் வருந்துகின்றாய். சீக்கிரம் சொல்.

காம: பிராணநாதா! அந்தோ! என் நாவெழவில்லையே. நான் எவ்வாறு கூறுவேன். எப்படிச் சகிப்பேன். ஐயோ!...........

வீர: காமவல்லி! வருந்தாதே! நீ துக்கிப்பது எனக்கன்றோ கஷ்டமாக இருக்கின்றது? என்ன நடந்தது?

ஒன்றும் விளங்கவில்லையே. நடந்ததைச்சொல். அதற்கு வேண்டியதைச்செய்கிறேன்.

காம: பிராணநாதா! அந்தோ! வேண்டாம்! வேண்டாம்!! தாங்கள் அறிந்துகொள்ளவேண்டாம். நான், தாங்கள் அதற்குள் வந்துவிடமாட்டீரென நினைத்தேன்.

வீர: காமவல்லீ! நீ என்ன கூறுகின்றாய்? நான் வந்ததற்காகவே துக்கிக்கின்றாயா? ஏன் மறைக்கின்றாய். நடந்ததை உரைத்துவிட்டுப் பின்னர் வேண்டுமாயின் நீ துக்கித்துக்கொள். எனக்கு நீ வருந்துவதைக்காண ஆத்திரமும் கோபமும் அதிகமாகயிருக்கின்றது. விரைவிற்கூறு.

காம: "பிராணநாதா! அந்தோ! அதுதான் வேண்டாம். அரசே! அதற்காகவே தாங்கள் அதற்குள் வந்துவிடமாட்டீர்களென நினைத்தேன் எனக்கூறினேன். அது தங்களுக்குத் தெரியவேண்டாமென நினைத்தேன். வேண்டாம்.

வீர: ஏன் தெரிந்தால்?

காம: அந்தோ! என்னைக் கொலைகாரி என்றழைப்பார் உலகோர்.

வீர: ஏன்! உன்னைக் கொலைகாரி என்றழைப்பானேன்.

காம: அது எனக்கன்றோ தெரியும். இங்கு நடந்திருப்பதை எவர் கண்டார்கள். கூறினும் நம்புவார்களா?

வீர: காமவல்லீ! அப்படிக்கூறாதே! நான் நம்புகிறேன். உன் பிராணபதியல்லவா நான். அன்று சுகுமாரன்

கைக்குட்டையை இங்கு கண்டதும், உன்னைச் சந்தேகித்தேன் என்பதற்காகவோ இவ்வாறு கூறுகின்றாய். காமவல்லி! நான் உன்னை உண்மையில் நம்புகிறேன். உன்மீது நான் கெட்ட எண்ணங்கொள்ளுவேனெனச் சத்தியவல்லியே, சுகுமாரர் கைக்குட்டையை உனதறையில் தவறவிட்டுச் சென்றிருக்கலாமென்றெண்ணுகிறேன். காமவல்லி! சற்று என்னைப்பார். என்னையும் நீ வருத்தலாமா? நடந்ததை உரை. நீ வருந்தும்படி உனக்குக் கெடுதல் செய்தவர் எவராயினும்கூறு உடனே தண்டித்துவிடுகிறேன்,

காம: அரசே! அதுதான் முடியாதென்றேன். நான் என்னசெய்வேன். அந்தோ! தாங்கள் கொண்டவை முழுமையும் தவரான கருத்தே.

வீர: தவரானதா!

காம: ஆம். அன்று சுகுமாரர் கைக்குட்டையைச் சத்தியவல்லியே வைத்துச்சென்றாளென்று நான் கூறியது பொய்யே.

வீர: எப்படி? பொய்கூறினாயா?

காம: ஆம்! அதுவும் அவர் நன்மையைக் கருதியே கூறினேன். அன்று நடந்ததை, அவரைக் காப்பாற்றும் பொருட்டே தங்களிடம் கூறாது மறைத்தேன்.

வீர: (கோபத்துடன்) அவரைக் காப்பாற்றுவதற்காக, உண்மையை மறைத்தாயா?........நடந்த உண்மைதானென்ன?

காம: அரசே! அந்தோ! உண்மையை உரைத்தால், நாங்கள் செய்யப்போவது இன்னதென்பதை நானறிவேன். ஆனால், நான் கூறக்கூடியது ஒன்றுதான்..........நான் குற்றவாளியல்ல. ஐயோ! ஆனால்!..........அரசே!..........

வீர: காமவல்லி!..........நீ கூறுவதொன்றும் விளங்கவில்லையே. முதலில்,........நான் உன்னை அன்று சந்தேகித்தேன். நீ அப்பொழுதோ சத்தியவல்லியின்மீது சாக்குச் சொன்னாய். பின் நடந்தவற்றால் நான் அவற்றை நம்பினேன். ஆனால் இப்பொழுதோ அதுவுமில்லை..........சுகுமாரனைக் காப்பாற்ற அவ்வாறு கூறினேனென்கிறாய். தவிர அப்படி ஏதாவது நடந்திருப்பினும்,..........என்றோ போனதைப்பற்றி இன்று நீ வருந்துவானேன்.

காம: அரசே! அந்தோ! வெட்கம்! அதைக்கூறவும் எனக்குக் கஷ்டமாகவிருக்கின்றதே. அன்று நாததியின் கணவனென்பதற்காகப் பொறுத்தேன். ஆனால் இன்றோ அரசே! ஐயோ என்னால் கூறவு முடியவில்லை. (துக்கம்)

வீர: காமவல்லி! கண்ணே! அழாதே! ஏன் பதறுகிறாய்? நான்தான் உனதருகிலிருக்கின்றேனே. ஏன்? என்னசெய்தான் அன்று? இன்று என்னசெய்தான்.

காம: அரசே! அதையோ கேட்கின்றீர். பலாத்காரம்!..........ஐயோ!

வீர: பலாத்காரமா!..........

காம: ஆம்! அன்று, இங்கு சுகுமாரன், என்னைத் தனக்கு இணங்குமாறு கேட்டான்........நான் முடியாதென்று

பிடிவாதம் செய்தேன். எவ்வளவோ கூறினேன். இன்னும் சிறிதுநேரம் தாமதித்திருந்தால், இப்பாவி நான் தங்களைப் பார்த்திருக்கவுமாட்டேன். எனதருகில் நெருங்கிவிட்டான். ஆனால் தாங்கள் அப்பொழுது அந்தப்புரத்திற்கு வந்து கொண்டிருந்தது எப்படியோ அவனுக்குத் தெரிந்துவிட்டது போலிருக்கிறது. போகும் அவசரத்தில் கைக்குட்டையை விட்டு ஓடிவிட்டான். அதை நான் அப்பொழுதே கவனித்தேன். தாங்கள் உடனே உள்ளே நுழைந்துவிட்டீர்கள். இதற்கிடையில் நான் என்னசெய்வதென்று ஆலோசித்துக் கொண்டிருந்தேன். அன்று நடந்ததை மறைக்கவே பொய் புரைத்தேன். ஆனால்!.........

வீர: ஆனாலென்ன!....அப்படிப்பட்ட பாதகனுக்கா இரங்கினாய்?

காம: அரசே! ஆனால், இன்றே! அந்தோ! என்னைப் படாதபாடெல்லாம் படுத்திவிட்டான். என்னைப்பற்றித் தரையில் கீழே தள்ளிவிட்டான். நல்லவேளையாக என் சேடியர் வரவும் ஓடிவிட்டான். ஆனால், அரசே! அந்தோ! உலகம் நம்புமா?............

வீர: காமவல்லி! உலகம் நம்புமாவென்று கேட்கின்றாய்? உலகத்திற்கும் இதற்கும் என்ன சம்மந்தம்? உன் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை இல்லாவிடிலன்றோ உலகத்திற்கு நான் பயப்படவேண்டும். என் மனைவியை! பட்டமகிஷியை!! ஒரு சக்கிரவர்த்தினியை!!! பெண்டாள முயற்சித்த ஒரு பாதகனைத் தண்டிக்க, நான் உலகத்தை ஏன் எதிர்பார்க்கவேண்டும்.

காம: பிராணநாதா! வேண்டாம்! வேண்டாம்!! இதற்காகத்தான், நான் கூறவேண்டாமென நினைத்தேன். அந்தோ! உலகம் நம்மையே நிந்திக்கும். விட்டுவிடுங்கள்! விட்டுவிடுங்கள்!!

விர: காமவல்லி! வேண்டாம்! இவ்விஷயத்தில் நீ தலையிடாதே. அளவுகடந்த பொறுமை காட்டியிருக்கிறாய். அப்படியிருந்தும் உனக்கு இருமுறை கேடு நினைத்த பதரை யோ தண்டிக்காது விடுவேன்? குறுக்கே பேசவேண்டாம். சேவகர்காள்! (இருவர் பிரவேசித்தல்) உடனேசென்று சுகுமாரனைத் தேடிப்பிடித்து வாருங்கள். (சேவகர் செல்லல்) காமவல்லி! பொறுமை பூஷணமே! எனது தங்கை புருஷனென்பதற்காகவோ அவ்வளவு கஷ்டமனுபவித்தாய். கண்ணே! வருந்தாதே. தங்கையிறந்து அன்னியனானபின்னும் அச்சுகுமாரனை விட்டுவிடவேண்டுகின்றாய். காமவல்லி! துக்கிக்காதே. உன் துக்கத்தை மாற்றத்தகுந்த தண்டனை அவனுக்கு விதிக்கின்றேன்.

காம: அந்தோ! பிராணநாதா!

[சேவகர்கள் சுகுமாரனைக் கொண்டுவந்து நிறுத்தல்.
காமவல்லி எழுந்து உட்செல்லல்.]

விர: சுகுமாரா!............நீ எத்தகைய குற்றம் செய்திருக்கின்றாய். ஒரு அரசன்!...........பிறன் மனைவியைப் பெண்டாள நினைப்பது குற்றமென்பது உனக்குத் தெரியாதா?

சுகு: (தனக்குள்) அந்தோ! சமயம் பார்த்து அரசனிடம் அன்றுபாலை நடந்ததை உரைத்துவிட்டாள்போலத்

தோன்றுகின்றது. நான் சத்தியவல்லியென நினைத்து, அப்படி நடந்துகொண்டேனெனக் கூறினால் இவர் நம்பப்போகின்றாரா? அல்லது பின் நடந்தவற்றைக்கூறினால் தன் மனைவியை விடுத்து, என்னை நம்பப்போகின்றாரா? இரண்டும் நடவாததே. இவரிடம் நான் வேறெதைக் கூறுவேன்? எதை இவர் நம்புவார்?

விர: சுகுமாரா! என்ன ஆலோசிக்கின்றாய்? ஏதாவது பொய்யுரைக்கவோ? மௌனம் சாதித்தால் ஒன்று மறியாதவனென நினைப்பேனெனக்கருதியோ?

சுகு: (தனக்குள்) இவ்வளவுதூரம் என் மரியாதை குறைந்தது குறைந்துவிட்டது. சமய சந்தர்ப்பம் ஒத்த குற்றமும் இவர் காதுக்கு எட்டிவிட்டபின்பு, நான் எதைக் கூறினும், கேட்கக்கூடாத நிலைமைக்கு வந்தபின், நான் உயிர் வைத்திருந்துதானென்ன? நான் இப்பொழுது என்ன கூறினும், என்னைத் தப்பித்துக்கொள்ளக் கூறுவதாகவே கருதப்படும். இப்பொழுதாவது நான் குற்றஞ்செய்தவன் என்னும் ஒரு குற்றத்தோடு போய்விடும். இல்லையேல் தன் மனைவிமீதும் அபாண்டம் சொன்னேனெனத் தூறுவார்த்தையின்றியேனும் இறப்பது நலம். வேறென்னசெய்ய இருக்கின்றது.

விர: சுகுமாரா இன்னும் என்ன ஆலோசித்துக் கொண்டு இருக்கின்றாய். மௌனம் சாதிப்பதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? குற்றத்தை ஒப்புக்கொண்டதாகத் தானே?

சுகு: நான் வேறென்ன கூறுவது?

வீர: அப்படியாயின் நீ உன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகின்றாய்.

சுகு: அந்தமாதிரிதான். சமய சந்தர்ப்பம் அப்படி நம்பும்படிக்கும், நான் அதை ஒப்புக்கொள்ளும்படிக்குமிருக்கிறது. இப்பொழுது நான் என்ன கூறினும் பிரயோஜனமில்லை. அப்படிப்பட்ட சந்தர்ப்பம் நேர்ந்திருப்பதைப்பற்றி நான் ஒப்புக்கொள்ளவேண்டியதே.

வீர: சுகுமாரா! நீ ஒப்புக்கொள்ளுகிறதாகக் கூறுகின்றாய்! நீ குற்றவாளி என்பதை நீயே நிரூபிக்கின்றாயல்லவா?

சுகு: ஆம்! நான் இப்பொழுது குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதைக்காட்டிலும் சிறந்த வழி வேறொன்றுமில்லை.

வீர: ஆம்! உண்மைதான்! குற்றம் செய்தவனுக்கு வழி வேறென்ன இருக்கிறது? மனைவியின் குணத்தைப் போன்றே நடந்தவன் உன்னொருவனையன்றி வேறெவனையும் நான் கண்டதில்லை. இக்குற்றத்தை நீயே ஒப்புக்கொள்ளுகின்றபடியால் அக்குற்றத்திற்கு "இன்று மாலையே சூரிய அஸ்தமனகாலத்திற்குள் உன் சிரம், உன் மனைவியின் தண்டனையொப்பத் துண்டிக்கப்படும்." அவ்வளவே. ஏதாவது உனக்கு விருப்பமிருப்பின் இப்பொழுதே அதைச் சொல்லிக் கொள்.

சுகு: விருப்பமா? அரசே! எனக்கு விருப்பமுள்ள பொருள் இவ்வுலகில் ஏதுமில்லை. ஆனால், உண்மை உயிர் காக்குமென ஒரு வசனம் சொல்லுவார்கள். என் அநுபவத்

தில் அது சரியானதாகத் தோற்றவில்லை....அவ்வுண்மையை நான் கூறினுலன்றோ உயிர் காக்கப்போகின்றது. அதைக் கூறச் சமயமும் சந்தர்ப்பமும் ஒத்துவந்தாலன்றோ? எனக்கு விருப்பமானது ஆச்சரிக்கத்தக்க ஒரு வார்த்தையேயாகும். அதாவது து நிருஷ்டவானன சுகுமாரன் என்னும் ஒரு அரசன், மாமன் மகளை மணக்கவெண்ணி, மணந்து விதியின் வயத்தால், மதியின்றி மாண்டான் என்பதைமாத்திரம் எனது நண்பர்கள் மறவார்கள். அந்த உண்மைமுழுவதும் எனது நண்பனுக்கன்றோ தெரியும். அரசே! நான் தங்களுக்கு ஒன்றுமாத்திரம் கூறுகின்றேன். நான் குற்றவாளியல்ல. நிரபராதி! நான் இன்று இதற்காக இறக்கத்தகுந்தவனல்ல. சமய சந்தர்ப்பத்தைப்பொறுத்து, ஒரு நற்குணமுள்ள அரசன் மௌனம் சாதித்து இறந்தான் என்பதை மாத்திரம் தாங்கள் நினைத்துக்கொள்ளுங்கள். தாங்கள் என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பினும் அதை மன்னித்து விடுங்கள். இதுவே நான் விரும்புவது. (திரும்பிச் சேவகருடன் செல்லல்)

11-வது சீன்.

இடம். சந்திரகிரியில் ஓர் வீதி.

[சுகுமாரன் துக்கித்தவண்ணம் இரண்டு சேவகர்களுடன் வருதல்.]

சுகு: (தனக்குள்) முடிந்ததென் விதி! அந்தோ! நியாயமான முறையில் என் விதி முடிந்திருப்பினும், வருந்தியிருக்கமாட்டேன். அநியாயம்! அபாண்டம்!........ஆம்! மணந்த மாதம் மூன்றிற்குள் அபவாதமாக மரணதண்டனை

யும் அடைவேனெனச் சத்தியசீலன் கூறினன். சத்தியசீலா! நீயே எனது நண்பன். உண்மையுள்ளவன். சத்திய-சீலன் நீயே. அந்தோ! ஆனல், என்னிடம் நீ, சத்தியவல்லி இறந்தபின்னரும் "அரசே! தங்கள் உயிருக்கு அபாயம் நேராது" எனக்கூறிய வார்த்தை பொய்யாகிவிடும்போலிருக்கிறதே. சத்தியசீலா! நான் இறக்குமுன் உன்னைக் காண அவகாசங்கிடைக்கின்றதோ இல்லையோ! சத்தியசீலா! நான் உன்னைப் பிரிகின்றேன். அந்தோ! கொடுமை உலகமே! என்செய்வேன் அக்காமவல்லியால் வந்த வினை. நான் வருந்தி என்ன பயன்? விதியின் வயத்தளவே நடக்கின்றது. முன்னமே எதிர்பார்த்தபடி நடக்கின்றது. சத்தியசீலன் கூறியதும் அப்படியே. வீணில் வருந்தி என்ன பயன்........சேவகர்களே! நடவுங்கள்! செல்லலாம். நான் இறந்தபின்...........நீங்கள் சத்தியசீலனைக் கண்டால் அநியாயமாக முன் எதிர்பார்த்தபடியே குற்றமின்றி மாண்டேனெனத் தெரிவியுங்கள்.

சேவ: அரசே! வருந்தாதீர்! நாங்கள் ஒரு உபகாரம் மாத்திரம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனல் நாங்கள் தங்களிடம் வேறொதுவும் பேசக்கூடாது. சத்தியசீலனை நாங்கள் காணுமுன் தங்கள் தண்டனையை முடிக்கமாட்டோம். தாங்களிறக்குமுன் சத்தியசீலனை ஒருமுறை காணலாம். (கவிராயர் பிரவேசித்தல்)

கவி: அவசரப்படேல்!...........

சகு: கவிராயரே! இன்னுமா அதைக் கூறுகின்றீர்?

கவி: அவசரப்படேல்! சத்தியமே ஜயம்!

சுகு: கவிராயரே! நான் உம்மைப் பிரியும் காலம் வந்துவிட்டது.

கவி: அவசரப்படேல்!

சுகு: ஏன்? காரணமின்றித் தாம் அவ்வார்த்தையை உபயோகிப்பது இல்லையாதே. நானோ, இறக்கப்போவதும் நிச்சயமாகிவிட்டதே. இன்னும் ஏன் அதை வீணாக உரைக்கின்றீர்............சத்தியசீலனைக் கண்டீரா?

கவி: அவசரப்படேல்! சத்தியசீலர் தங்கள் விஷயத்தைக் கேள்வியுற்று, விரைவாக வந்துகொண்டிருக்கிறார். இன்னும் தங்கள் உயிருக்கு ஆபத்தில்லையென்றே நினைக்கிறேன். சந்தேகமிருந்தால், அதோ வந்துவிட்டார் சத்தியசீலர். அவரிடம் கேட்டுக்கொள்ளும்.

[சத்தியசீலன் பிரவேசித்தல்.]

சுகு: ஆ! சத்தியசீலா!

(ஒருவரையொருவர் தழுவுதல்)

சத்: அந்தோ! அரசே!

சுகு: சத்தியசீலா! வந்துவிட்டது நீ கூறிய வினை. முடிந்தது என் வாழ்க்கை. சத்தியசீலா! நான் உன்னை விட்டுப் பிரிகிறேன். குற்றமற்ற நண்பன் கா்லவித்தியாசத்தால் இறந்தான் என்பதை உன் உயிருள்ளளவும் நம்புவாயா? சத்தியசீலா! நான் உண்மையை உரைக்கின்றேன். என்னை நம்புகின்றேனென ஒரு வார்த்தை கூறிவிடு. நான் நிம்மதியடைவேன்.

சத்: அரசே! தங்களை என் மனப்பூர்வமாக நம்பு கிறேன். அண்ணலே! தங்களுக்குத் திடீரென இக்கதி வரக் காரணமென்ன?..........அரசருக்கு தங்கள்மீது இப்படித்தண்டனை விதிக்க என்ன சந்தர்ப்பம் வாய்த்தது ஒன்றும் விளங்கவில்லையே. சற்று விளக்க உரையும்.

சுகு: சத்தியசிலா! அந்தோ! வெட்கம்!! நான் முன்னொருநாள் கூறிய சம்பவம்போல நிகழ்ந்தது. அக் காமவல்லி என்னறைக்குள் வந்தாள். என்னைத் தனக்கிணங்கப் பலாத்காரம் செய்தாள். நான் அதற்கு முன்கூறிய மறுமொழியையே கூறினேன். பலசொல்லியென்ன? அளவுகடந்தவிதம் என்னைத் தொந்தரித்தாள். நான் வெறுத்து அவளைக் கீழேதள்ளினேன். அவள் "சுகுமாரா! சொல்லுகின்றேனிதற்குவழி, உன்னை உயிருள்ளவரைவிடேன், நானே உனக்கு நமன்" என்று கூறிச்சென்றாள். சிறிது நேரமே சென்றிருக்கும், நடந்தவற்றை உன்னிடம் கூறலாமென வெளியே புறப்பட்டேன். இக்காவலர் என்னை அரசன் அழைக்கிறாரெனக்கூப்பிட்டனர், சென்றேன். காமவல்லியையும் அரசனையும் ஒருங்கே கண்டேன். சத்தியசிலா! அப்பொழுதே என்னுயிர் நமனுலகம் சென்று திரும்பியது. அரசர் மிகவும் மறியாதைக் குறைவாகவே என்னை விசாரித்தார். நான் மதிமயங்கினேன். பிறன் மனைவியை பெண்டாள நினைத்தவன் என்பதே என் செவியிற்பட்டது. பதிலென்ன கூறுவேன். சமய சந்தர்ப்பத்தைப் பொறுத்து, நான் அதை ஒப்புக்கொள்ளவேண்டியதே என, என்னை இருமுறை வினவியதன் பின் என்னறிவு திடப்பெற்றுப் பதிற் கூறினேன். அதற்குள்ள இத்தண்டனையை அடைந்தேன். சத்தியசிலா! உலகம் எப்படிப்பட்டது என்று பார். பொய்

மெய்யும், பொய் பொய்யுமாயிருக்கிறது! விதி, ஒருவன்மேல் வலியக் குற்றத்தைச் சுமத்திவிடுகின்றது! கடவுள் நியாய பக்கேட யிருக்கின்றார்! உண்மை உயிர்கொல்லுகின்றது! சத்தியசீலா! இதுவரை, உண்மையுள்ளவன் சத்தியவான் எனக் கருதப்பட்ட சுகுமாரன் இன்று, அசத்தியம் நிறைந்தவன், காமமிகுந்தவன், பரதாரகமனன், என்னும் பல பட்டப் பெயர்தரித்து மாண்டானென நம்நாட்டினர் கூறுவர் திரும்பிய உடன் உன் செவியிற்படும்வண்ணம் உரைப்பதைக் கேட்கப்போகின்றாய்.........ஆனால், எவர் எதைக்கூறினும் நீ, என்னை நம்பு. இது ஒன்றையே நான் உன்னிடம் வேண்டிக்கொள்ளுகிறேன்..............சத்தியசீலா! பலவிதத்தும் என்னுடன் எப்பொழுதும் இருந்து உதவிபுரிந்த உனக்கு நான், இப்பொழுது அதுவும் இந்நிலையில் என்னசெய்ய முடியும். சத்தியசீலா! சென்றுவருகிறேன். எனக்கு விடை கொடு.

கவி: அவசரப்படேல்!..........

சத்: அரசே! போயொருக்கால் திரும்புபவருக்கன்றோ விடை கொடுக்கலாம். அரசே! தங்கள்விதி இன்றுடன் முடிந்துவிடப்போகிறதெனத் தாங்கள் நிச்சயமாகக் கருதுகின்றீரா? அண்ணலே! கடவுள் என்பவர் ஒருவர் உலகிலில்லையா? உண்மை உயிர்தராதா? சத்தியம் வெல்லாதா? அண்ணலே! தாம் அப்படி எண்ணவேண்டாம். சத்தியமேஜெயம் என்பதை நம்பும். ஏதோ எனக்கு, தங்கள்விதி முடியுங்காலம் நெருங்கவில்லையென்று தோன்றுகின்றது. அரசே! வீணில் வருந்தாதீர். அநாதைக்குத் தெய்வமே துணையென்பார். அண்டசராசரமெல்லாம்

படைத்தழிக்கும் கடவுளுக்கு நின்பாரமோ ஓர் பாரம். அரசே! வேண்டாம்! இன்னும் ஒன்றும் முடிந்துபோக வில்லை. இறந்துவிடுவோமெனத் தாமே நிச்சயிக்கவேண் டாம். இச்சமயத்தில் கவிராயர் கூறும் வார்த்தை எனக் குத் தெய்வீகமாகவே தோற்றுகின்றது.

அரு: சத்தியசீலா! உன் வார்த்தைக்கு நான் நகைக் கத்தான்வேண்டும். வேறென்ன செய்வது. எனது பிறி வாற்ருது ஏதோ நீ பிதற்றுகின்ருயென்றே எண்ணுகிறேன். அன்று நான் கண்ணூரக்கண்ட காக்ஷியில் நீ சத்தியவல்லி பரிசுத்தமானவளாகவிருக்கலாமெனக் கூறிஞய். அப்படி யிருந்தால் தெய்வம் ஏன் அப்பொழுது அவளுக்குச் சாக்ஷி சொல்லிக் காப்பாற்ருமல்போயிற்று? இன்று இப்பொழுது என் விதி முடியவில்லையெனக் கருதுவதாகக் கூறுகின்ருய். அரசனே என் விதியை மாலையோடு முடித்துவிட்டார். அரசனது வார்த்தையுமோ இன்னும் மாற்றப்படுமென்று நினைக்கிருய்.

சத்: அரசே! வீணில் கடவுளை நிந்திப்பானேன். மானிடர் என்னும் நிலைமையில் ஒருவன் விதியின் வயத்தால் கஷ்டமனுபவிப்பாஞயின் அப்பொழுது வெறுப்பால் கடவுளை நிந்திப்பது இயற்கையே. அதுதான் உலக வியற் கை. தாங்களும் உலகவியற்கைப்படியே நடந்துகொள்ளு கிறீர். ஆனல் அரசே! இப்பொழுதும் இன்னும் சொல்லு கின்றேன். நான் தங்கள்மனச் சமாதானத்திற்காகக் கூற வில்லை. ஏதோ என் மனத்துள் தாங்கள் இறக்கமாட்டீர்கள் என்பதை ஏதோ ஒன்று வற்புறுத்திக் கூறுகின்றது. விதியின்கூற்றுக்கு மாறாக எதுவும் நடக்கப்போவதில்லை.

கடவுளை துதிப்பதை மாத்திரம் மறந்துவிடவேண்டாம். எல்லாம் கடவுள் செயலே. அவரை நம்பிநடவும். நான் அதற்குள் காமவல்லி தங்களை எவ்வாறு இவ்விதிக்குட்படுத்தினள் என்பதை அறிந்துவருகிறேன். சேவகர்களே! நான் முன்கூறியது ஞாபகமிருக்கட்டும். நான் வரும்வரை எக்காரணத்தையிட்டும் அரசனை ஒன்றும் செய்துவிடவேண்டாம். (சத்தியசீலனும் கவிராயரும் செல்லல்.) (சேவகர்களும் சுகுமாரனும் மற்றொருபுறம் செல்லல்.)

12-வது சீன்.

இடம். காமவல்லியின் அந்தப்புரம்.

காலம். மாலை.

[வீரவர்மன் ஆலோசித்தவண்ணம் உட்கார்ந்திருத்தல்.]

வீர: (தனக்குள்) என்ன தைரியம்? அவன் ஒரு சிற்றரசன். நாம் அவனுக்கு நமது அத்தை மகனே என்னும் விசுவாசத்தால் எனது தங்கையைக்கொடுத்தும், தன் கௌரவத்தை நினைத்தானில்லை. அந்தோ! என்னிடத்துமா? எனக்குமா? அவன் துரோகசிந்தனையை காண்பிக்கவேண்டும்?

[காமவல்லி மெதுவாகப் பின்புறமாகவந்து
வீரவர்மன் கண்களை மூடுதல்].

வீர: காமவல்லி! இப்படிவா!

காம: பிராணநாதா! (வருதல்)

வீர : காமவல்லி! இவ்வளவு நேரம் சுகுமாரனைக் கொலை செய்திருப்பார்களல்லவா?

காம : ஆம்! பாபம். உயிரிழக்கப்போகின்றார்.

வீர : காமவல்லி! என்ன கூறுகின்றாய்? உனக்குத் தீங்கிழைத்த பாபிக்கோபாபமென்றிரங்குகிறாய்? அவன் இறப்பது நியாயமல்லவா?

காம : எனக்குத் தீங்கிழைத்தது உண்மையாயினும், இவ்வளவு சீக்கிரத்தில் அவரதுவிதி முடிந்துவிடுமென நான் எண்ணவில்லை.

வீர : உம்!............என்! இத்தகைய பாபிகள் நெடுங் காலம் வாழ்ந்திருந்தால் நன்மையென்பதுதான் உனது நோக்கமா? அவன் இறக்கவேண்டியது நியாயமே யென நான் கூறுகின்றேன்.

காம : ஏன்? தாங்கள் அவரை மன்னித்திருந்தால்?

வீர : மன்னித்திருந்தால்! இன்னும் எத்தனை பேபருக்கு அத்தகைய கெடுதி விளையலாம்?

காம : பிராணநாதா! என்ன தாங்கள் இவ்வாறு கூறுகின்றீர் அதற்குப் பெண்மக்களும் அத்தகையவராக விருந்து சம்மதிக்காவிடில்?............

வீர : அப்படிச் சம்மதிக்காது நீ இருந்ததனாலன்றோ நான் அவனைத் தண்டிக்கும்படி அவன் குற்றம் வெளியாயிற்று! இப்பொழுது அவனை நான் மன்னித்துவிட்டிருந்தால் மற்றோரிடத்திலும் இதையே செய்வதாக வைத்துக்

கொன்வோம். அங்கும் சம்மதமின்றி இவன் குற்றம் வெளிப்பட்டால், அவனுக்கு இதே தண்டனைதானே அங்கும் கிடைக்கும்! தவிர நம்போன்ற அரசர்வீட்டில் நடந்தால்தானே அதுவும். தன் அந்தஸ்திலும் குறைந்த ஒருவனிடம் இப்படி நடந்துகொண்டால், அவர்கள் இவனை ஒன்றும் செய்யமுடியாதல்லவா? அப்பொழுது வாயில்லாப் பூச்சி போன்ற ஒன்றும்செய்யச் சக்தியில்லாத இவனினும் எளியவரான எத்தனை குடும்பங்கள் கற்பழிக்கப்படும்? நாம் இப்பொழுது தண்டித்துவிட்டால் அத்தகைய இன்னல் மற்றவருக்கேனும் விளையாதிருக்கலாமல்லவா?

காம: பிராணநாதா! தாங்கள் கூறுவது ஒருவகையில் உண்மைதான் என்றாலும் உலகத்தில் உறவின்முறையுள்ள நாமே அவரைக்கொல்லக் காரணமாகிறது பற்றிப் பழியாரா நம்மை?

வீர: காமவல்லி! நன்றாகக்கூறினாய்? புலிக்குத் தன் காடென்றும் பிறகாடென்றும் கிடையாது. தன் வயிற்றை நிரப்பிக்கொள்ளவெண்ணி எங்கேனும் எது அகப்படினும் தன் வேலையை முடித்துவிடும். அதைப்போல அரசனென்பவன் நியாயமென்னும் முறைமையில் நமமவர் என்றும் பிறன் என்றும் ஒருமுறை நியமித்தல் நியாயமோ? எல்லோருக்கும் ஒரே நியாயமன்றோ வழங்கவேண்டும்?..........நாம் இவனைத் தண்டிப்பதால் நமக்கு அபவாதம் வருமேயெனப் பயந்து நியாய விரோதமாக நடப்பதா? இதில் நாம் உலகோர் வார்த்தையை எவ்விதத்திலும் எதிர்பார்த்தல் கூடாது.

காம: தங்கள் சித்தம், நான் இப்பொழுது அவரை விடுவித்துவிடத்தான்வேண்டுமென்று கூறவில்லை. ஆயினும்

விதிக்குமாராக எதுவும் நடவாது என்பது தங்களுக்கே தெரியும். அதைப்போல நாம் இப்பொழுது இவரைக் கொன்றுவிட்டால் உலகில் இம்மாதிரி அநியாயமே நடவாது என்று சொல்லுவதற்கில்லை. தவிர அவரவர்களுக்கு அப்படி விதித்திருந்தால்தானே கெடுதிசெய்பவருக்கும் அப்படி நடந்துகொள்ளத்தோன்றும். அதனாலேயே நான் குறுக்கே பேசினேன்.

வீர: காமவல்லீ! நீ பெண்பாலாகையால் இரக்கச் சித்தத்துடன்பேசுகிறாய். தவிர நீயே விதியென்று ஒன்றுண்டென ஒப்புக்கொள்ளுகிறாய். அரசர் என்னும் நிலைமையில் நியாயம் தீர்க்கவேண்டுமென்பதும் அவ்விதியைச் சார்ந்ததேயாகும். நானும் அப்படியே செய்தேன். ஏன்! நீ கூறுவதுபோல அவனுக்கும் அவனது விதி வலிதாயிருந்தால், அவன் இறவாது பிழைத்துக்கொள்ளட்டுமே. நீ குறுக்கே பரிந்து பேசுவதற்காக அவன் விதியை மாற்றிவிட நம்மால் முடியுமா!

[தாதி பிரவேசித்து மெதுவாகக் காமவல்லியைச்
சைகை காண்பித்து அழைத்தல்]

காம: (தனக்குள்) இப்பொழுது எங்கே வருகிறாள் தாதி! (வெளிப்படையாய்) அரசே! இதோ வருகிறேன். தாதி எதோ சமாசாரம் கொண்டுவந்திருக்கிறாள் போலிருக்கிறது. (தாதியிட மணுகுதல்).

தாதி: அம்மணி! மிகவும் இரகசியம். அவசரம். சுகுமாரரோ இறக்கப்போவது திண்ணம். இந்நிலையில் கடைசியாகத் தங்களை அவர் காணவேண்டுமாம்.

காம: சேடி! என்ன கூறுகின்றாய்? என்னைக் காண வேண்டுமா?............நான் இப்பொழுது அவரைச் சந்திப்பது கூடாதகாரியம். குற்றவாளியென நிரூபிக்கப்பட்ட ஒருவருடன் நான் எப்படிச் சம்பாஷிப்பது?

தாதி: அம்மணி! அதெல்லாம் எனக்குத்தெரியாது. அவர் கூறியது அவ்வளவுதான். அவசியம் என்றுமாத்திரம் கூறினார் தங்களுக்கிஷ்டமிருந்தால் சந்திக்கவேண்டிய ஏற்பாட்டைச் செய்யுங்கள். இல்லையேல் தங்கள் உசிதம். நான் சென்றுவருகிறேன். (செல்லுதல்).

காம: (தனக்குள்) இதுயார். புதியவளாகவன்றோ விருக்கிறாள். இவளுக்கு இதுவிஷயமொன்றும் தெரிந்திராதே. இவளைச் சந்தித்து சுகுமாரர் கூறியிருப்பது உண்மையாகத்தானிருக்கவேண்டும். ஒருவேளை சுகுமாரனுக்கு உயிர்மீது ஆசையேற்பட்டு நம் கோரிக்கைக்குச் சம்மதிக்கலாம். இன்னும்தானென்ன முழுகிப்போய்விட்டது. அவர் எனக்கிணங்கச் சம்மதித்தால் எப்படியாவது பாசாங்குசெய்து சுகுமாரரைப்பற்றி அரசரிடம் பரிந்துபேசி உயிர்மீட்டி விடுகிறேன். பின்பாவது நான் சிறிது சுகத்தையடையலாம். எதற்கும் அரசரிடம் ஒரு பொய்கூறிச் செல்லுகிறேன். (அரசனையணுகி)

காம: (வெளிப்படையாய்) பிராணநாதா! ஏதோ அவசரமாகத் தாதி என்னையழைக்கிறாள். இதோ நான் சிறிதுநேரத்தில் திரும்பிவிடுகிறேன். (செல்லல்).

வீர: (இதென்ன ஆச்சரியம். ஒருநாளாயினும் காமவல்லி என்னை இப்படி விட்டுச்சென்றது கிடையாதே.

அவ்வளவு அவசரமானதாக எனக்கும் தெரியக்கூடாத ஒன்று என்ன நடந்திருக்கப்போகிறது. (ஆலோசித்தல்)

[தாதி பிரவேசித்தல்]

தாதி : (தனக்குள்) இதுதான் சமயம் ஆதிமுதல் அந்தம்வரை நடப்பதை இவ்வரசரே கண்டுகளிக்கட்டும். இன்னும் அவள் அங்குபோய்ச் சேர்ந்திருக்கமாட்டாள். உண்மையை அரசரிடமும் கூறிவிடுகிறேன். (வெளிப்படையாய்) அரசே! காமவல்லியம்மாள் எங்குபோகிறார்கள் என்பது தங்களுக்குத் தெரியுமா?

வீர : எங்கு போகிறாள் !..........

தாதி : அரசே! குற்றமென நிரூபிக்கப்பட்ட ஒரு குற்றவாளி! அதுவும் இன்னும் சிறிது நேரத்திற்குள் இறக்கப்போகும் ஒரு அன்னியனுடன் சம்பாஷிக்கப்போகிறாள்.

வீர : ஏ! சேடிப்பெண்ணே! நீ கூறுவது உண்மையா? அவள் ஒரு சக்கிரவர்த்தினி என்னும் ஞாபகத்தோடே நீ பேசுகின்றாயா?

தாதி : அரசே! நான் கூறுவது உண்மைதான். சக்கிரவர்த்தினியே அங்கு செல்லுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

வீர : நீ இப்பொழுது கூறுவது பொய்யாயிருந்தால்?....

தாதி : அரசே! அப்படியாயின் நான் எங்கு தப்பிவிடப்போகிறேன்! நானும் கூடவே வேண்டுமாயின் வருகிறேன்.

வீர: ஓ! நீ உண்மை உரைப்பவளாயின் என் அப்பொழுதே காமவல்லியினிடம் கூறுமுன் என்னிடமே கூறியிருக்கக்கூடாது!

தாதி: அரசே! எப்பொழுதும் நான் உண்மையுரைப்பதே வழக்கம். எனக்குச்சொல்லும்படி கட்டளையிடப்பட்டதை அவர்களிடம் கூறவேண்டியதே நியாயம், அதை அப்படியே கூறினேன். இதை இப்பொழுது உம்மிடம் கூறவேண்டியதே நியாயம். நான் இதை இப்படிக்கூறினேன். எதற்கும் நாம் தாமதித்தால் பொய்கூறியவளென என்னைக் கருத இடமுண்டாகிவிடும். இப்பொழுதே புறப்படும் விரைவில். ஒரு சிறிதும் தாமதிக்கக்கூடாது.

வீர: சரி! புறப்படுவோம். என்னுடன் கூடவே வா?

(இருவரும் செல்லல்).

13-வது சீன்.

இடம். சந்திரகிரியில் கொலைக்களம்.

காலம். மாலை.

[சுகுமாரன் தூக்கு மேடையின்மீது நின்றுகொண்டிருக்க இரண்டு சேவகர்கள் பக்கத்தில் நின்றுகொண்டிருத்தல்]

மூ சே: (மற்றொருவனைப் பார்த்து) அடே! இன்னும் சத்தியசீலனைக் காணோமே.

இ சே: நான் சொல்லுவதைக்கேள். அவரை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தால் நடவாது ஒருவேளை அரசரோ முடிந்துவிட்டதாவென அறிய முயற்சித்தாராயின் நம்மீது சந்தேகங்கொள்வார். நாமென்ன செய்யலாம் நம் வேலையை முடித்துவிடவேண்டியதுதான்.

மூ சே: ஏதோ நாம் முன்பே ஒப்புக்கொண்டிருக்கிறோமே அவரும் வந்துவிடுவார் சிறிது தாமதிக்கலாமென நினைத்தேன். அவர் வந்தாலுந்தானென்ன? அரசன் விதித்த விதியை அவர் வார்த்தைக்காக நிறுத்திவிடப் போகிறோமா என்ன. சரி!............அரசே! நேரமாகிவிட்டது. இனியும் தாமதிப்பது எங்களுக்கு ஆபத்தாக முடியும்போலிருக்கிறது.

சுகு: அந்தோ! ஈசனே! நான் இன்று இவ்வுலகினின்றும் மறைகிறேன். பாபியாகிய என் முகத்தைக்காண வெட்கிச் சூரியனும் மேற்கடலில் மறைகிறான். நான் சென்றபிறகே நாளை மீளுவோமென அவன் எண்ணுவது

போலத் தோற்றுகின்றது. ஈசனே! நான் முழுவதும் பாபியே. நான் படைக்கப்பட்டதன் கடனை முடித்துக்கொள்ளவில்லை. நான் எனது இக்குறுகிய ஆயுளுள் தம்மை எனக்குக் கஷ்டமேற்பட்டகாலத்திலெல்லாம், அவை என் விதியின் வயத்தனவே நடக்கிறதென நானறியாது நிந்தித்தேன். ஈசனே! அந்தோ! நான் இவ்வுலகில் எவருக்கும் எத்தகைய விஷயமுங்கூற அவகாசமில்லை. அந்தோ! அப்படி நடப்பினும் நான் எவருக்கு எதைக்கூறுவேன், என்னசெய்வேன். என்னுடைய இளமையான வாழ்நாட்களில் கடவுள் வேறு நான் வேறு உலகிலுள்ளோர் ஒவ்வொருவரும் வெவ்வேறென எண்ணினேன். ஈசனே! என்னுயிர் போய்விடுமென முன்னரே இப்பொழுதேனும் நான் உம்மையறிகிறேன் நீயும் நானும் மற்றோரும் எல்லோரும் ஒன்றே என்பதையறிந்தேன். உலகில் செய்வதும், செய்யப்படுவதும், வருவதும், போவதும், ஒன்றுமில்லை. எல்லாம் தோற்றமென்றறிந்தேன். ஈசனே! உயிரிழக்கத்தக்க ஒரு நிலைமையை அடையப்போகும் இச்சமயத்திற்கு ஒரு சிறிது முன்னரே இதை நானறிந்திருந்தால், அதன் ஆனந்தத்தையேனும் அறிந்து சமாதானத்துடன் உயிரிழப்பேன். ஈசனே! உலகில் படைக்கப்பட்ட சகல ஜீவராசிகளுக்கும் ஆசையென்பதை சரீரத்தில் உயிரிருக்கும்வரை மறவாதிருக்கச் செய்திருக்கின்றாய். அந்தோ ஒரு குழந்தைக்கு விளையாட்டுக் கருவிகள்மீதும், இளைஞருக்குச் சரீரத்தின்மீதும், வயோதிகருக்கு உயிரின்மீதும், உலகத்தை வெறுத்த ஞானி எனக் கூறும் ஒருவனுக்கு மோக்ஷத்தின்மீதும் ஆசையென்பதை மாத்திரம் கட்டை கீழே விழும்வரை மறவாவழி செய்திருக்கிறாய். தெய்வமே! அந்தோ! என்ன பயன்,

படைத்தழிக்கும் ஒரு ஆசையின்றியோ செய்கின்றாய். ஈசனே! அதைப்போன்று அல்லகையில் யானும் ஒரு ஆசையுள்ளவனாகவே இருக்கின்றேன். அது உனக்கு ஒரு கஷ்டமல்ல. நான் உண்மையில் குற்றம் செய்யாது அபவாதத்திற்குள்ளாகி இறக்கிறேனென்பதை மாத்திரம் உலகோர் அறிந்துகொள்ளவேண்டுமென்னும் ஆசையே அது. ஈசனே! இப்பொழுது இவ்வபசனது கைக்குள் அகப்பட்டு எனது விஷயத்தை உரைத்தாலும் கேட்டுக் கொள்ளக்கூடாது. அப்படி அகப்பட்டுக்கொண்டிருக்கின்றேனே. அப்படியே அபவாதமும் அயோக்கியர்களும் நிறைந்த இவ்வுலகின் கைக்குள் நான் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். நான் வீணில் எவ்வளவுநேரம் தூக்கித்தென்ன பயன் எல்லாம் உன்பாரம். ஈசனே! நான் செய்த குற்றம் முழுமையும் மன்னித்துவிடும். சேவகர்களே! நடவுங்கள்! உங்கள் வேலையை முடித்துவிடுங்கள். (தூக்குமேடையருகில் நெருங்கல். தூக்கின் கயறு கழுத்தில் மாட்டப்பட்டது.)

சுகு: ஈசனே! இதுவரை எத்தனை பிறப்பெடுத்தேனென்பதும் இனி எத்தனை பிறவி எடுப்பேன் என்பதும் எனக்குத்தெரியாது. எல்லாம் அறிந்தவன் நீ. மறு ஜன்மத்திலேனும் இத்தகைய அபாண்டமான விதிக்குள் என்னை நுழையாதிருப்பீராக.

[கைகூப்பி மௌனம் சாதித்தல். காமவல்லி சுகுமாரனிடம் நெருங்குதல். வீரவர்மனும் தாதியும் மறைவாகப் பின்னால் வருதல்.]

வீர: (தனக்குள்) ஆம்! தாதி கூறியவை முழுமையும் உண்மையே. இங்கு என்ன நடக்கிறதென மறைந்திருந்து பார்க்கிறேன். (தாதியுடன் மறைதல்.)

காம: சுகுமாரரே !............

சுகு: (கண்ணை விழித்து) யார் அது ?.......அம்மணி! எங்கு வந்தீர்கள் ?...........

காம: (சேவகர்களை நோக்கி) சேவகர்களே ! சற்று விலகி நில்லுங்கள், (சேவகர்கள் மறைதல்.) அரசே! எங்கு வந்தீர்களா ?..........தாங்கள்தானே என் தாதியிடம் கூறியனுப்பினீர்கள்.

சுகு: அம்மணி! இவ்வுலகில் தேவையானதும், வேண்டியவர்களென்றும், ஒருவருடன் ஒன்றைப்பற்றிச் சம்பாஷிக்கவேண்டுமென்பதும் இனி எனக்குக் கிடையாது. நான் தங்களை எப்பொழுதும் எக்காலத்தும் எதிர்பார்க்கவில்லை. தவிர தாங்கள் இங்கு வருவது நியாயமல்ல. சென்று வாருங்கள். நான்தான் அபவாதத்திற்குள்ளாகி உயிரிழக்கப்போகின்றேன். இங்கு வந்திருப்பது அரசருக்குத் தெரியுமானால் தங்களுக்கும் ஆபத்தாக முடியும். வேண்டாம் தாங்கள் இங்கு வந்தது எவருக்கும் தெரியுமுன் விரைவிற் சென்றுவிடும்.

காம: சுகுமாரரே! இன்னுமா பிடிவாதம். இனி நீர் இறந்துவிடுவீர் என்பதும் உமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. நீர் என்னை அழைக்கவில்லையென்று கூறுவதை வேண்டுமானாலும் உமக்காக ஒப்புக்கொள்ளலாம். ஆனால் அப்படி என் தாதி என்னை அழைத்தது உண்மையே. அதைப்பற்றிப் பாதகமில்லை. இப்பொழுதாவது என்ன கூறுகின்றீர்.

சுகு: இப்பொழுது என்ன கூறவேண்டும் காண்.

காம : நான் என்ன கேட்கப்போகின்றேன். இப்பொழுதாவது கூறிவிடும். நான் உம்மைக் காப்பாற்றி விடுகிறேன்.

சுகு : என்னைக் காப்பாற்றுவதிருக்கட்டும். என்னை என்ன கூறச்சொல்லுகின்றீர்.

காம : எனக்கிணங்கிவிடும். உயிரிழப்பதைநக்காட்டிலும் அது அவ்வளவு கஷ்டமானதல்லவென்று நினைக்கிறேன்.

சுகு : அம்மணி! வேண்டாம்! என்னைத் தொந்தரை செய்யாதீர். நான் எனதளவில் நியாயவழியில் நடக்க முயன்றதற்கே இத்தகைய தண்டனையைக் கடவுள் எனக்குக் கொடுத்திருக்கிறார். அல்லகையில் அது அவ்வளவு கஷ்டமானதுதான்.

காம : (சமீபித்து) அரசே! வேண்டாம். நேரமாகிறது நான் அரசரைத் தனியே வைத்து ஓடிவந்திருக்கிறேன். தயைசெய்யும். அளவுகடந்த மதிப்புடைய உயிரை அற்பக்காரியத்திற்காக விட்டுவிடத் துணியவேண்டாம். நான் சொல்லுவதைக் கேளும்.

சுகு : அம்மணி! எனக்கு உயிரினும் சத்தியமே அளவுகடந்தது. தாங்கள் கூறுவதோ அசத்தியமான காரியம்.

காம : அரசே! சத்தியத்தின்படி நடந்த தமக்கு இப்பொழுதென்ன கிடைத்திருக்கிறது பார்த்தீரா?

சுகு : ஆம். சத்தியத்திற்கே இவ்வளவு கிடைத்தால் அசத்தியத்திற்கெவ்வளவு கிடைக்கலாம்? அம்மணி! வேண்டாம். இனி அரைக்கணமும் நீர் இங்கு தாமதிக்கக் கூடாது. ஒரு வார்த்தையும் இனித் தாங்கள் என்னுடன் பேசக்கூடாது. உயிரினும் சிறந்ததொன்று மில்லையென் பதை நானறிவேன். அத்தகைய உயிரினும் தாங்கள் ஒரு சிறந்த பொருளல்ல. உயிரை வெறுத்த எனக்கு இனி மானம் மரியாதை முதலியன தேவையில்லை. இனியொரு முறை பேசினால் உம்மை அவமதிப்பதுடன் நில்லாது அதற்குத்தகுந்த பரிகாரமும் பெறவேண்டியிருக்கும். எனக்கு அதற்காக வேறு தண்டனை கிடைக்கப்போவதில்லை என்பது தங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்.

காம : (முழங்கால்படியிட்டு) அரசே! வேண்டாம். கோபியாதீர். தாங்கள் எப்படிக்கூறினும் அப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். வீணில் இறக்கவேண்டாம். ஆகட்டுமென ஒரு வார்த்தை கூறிவிடும். (கையைப்பிடித்தல்)

[சுகுமாரன் காமவல்லியைக் காலாலுதைத்துக் கீழேதள்ளல்]

சுகு: சீ! வெறிபிடித்த பிசாசே! உன்னாலேயே உயிர்துறக்குமென்னை யேன் மீண்டும் தொந்தரிக்கிறாய். உயிர்தான் போகிறது. நரகத்திற்குமா என்னை அனுப்ப வேண்டும்?

[வீரவர்மனும் தாதியும் பிரவேசித்தல். காமவல்லி திடுக்கிட்டெழுந்திருத்தல்]

காம : அந்தோ! அரசரும்வந்துவிட்டார். இனி நான் எப்படித்தப்புவேன். (ஓடி மறைதல்)

[வீரவர்மன் சுகுமாரனைத் தழுவல், கவிராயர் பிரவேசித்தல்.]

கவி : அவசரப்படேல்!...........

வீர : சேவகர்காள் பிடியுங்கள் அவளை! சுகுமாரரே! நானே பாபி! நீரல்ல. அந்தோ! அநியாயமாக உம்மைக் கொல்லவிருந்தேன். என்னை மன்னியும் சுகுமாரரே! உமது பொறுமை மிகவும் வியக்கத்தக்கது. அந்தோ! சமய சந்தர்ப்பத்தைப் பொறுத்து நான் குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. நான் நிரபராதி என்று கூறும் பொழுது எனக்கு உம்மீது நம்பிக்கை தோற்றவில்லை. அந்தோ! அச்சண்டாளியால், உம்மைக்கொல்ல நினைத்தேன். ஐயோ! அவள் பெயருக்கேற்பக் காமவல்லியாயிருந்திருக்கிறாள் என்றறியாமற்போனேன். சுகுமாரரே! என் மீதிருக்கும் வருத்தத்தையொழித்து என்னை மன்னியும்.

சுகு : அரசே! நான் தங்களை மன்னிக்க அருகனல்ல. அவரவர் விதிப்படி அவரவர் அனுபவிக்கவேண்டியதே. என் விதியை நான் அனுபவித்துத்தானே தீரவேண்டும். அதை வேறெவரேனும் அனுபவிக்க முடியுமா? அதற்காகத் தாங்கள் வருந்துவானேன்.

வீர : சுகுமாரரே! அந்தோ! நான் இனி உலகத்தையும் நம்பமுடியாது. நான் கண்கூடாகக் கண்ட நினைவெல்லாம் என் விஷயத்தில் கனவாக மாறிவிட்டது. எனக்குப் பெருத்த ஆச்சர்யமாகவே இருக்கிறது. அந்தோ! சுகுமாரரே!...........அன்று அச்சண்டாளியின் அரையில் கைக்குட்டையைக் கண்டதும் அவள்மீது சந்தேகித்தேன். பத்தினிபோலப் பாசாங்கு செய்தாள். நானும் அப்பொழுது

உம்மீது சந்தேகிக்காமலில்லை. பின்னர் நடந்த சத்தியவல்லியின் விஷயத்தால் அவனது பொய்யுரை வெளிப்படாது போயிற்று. தங்கள் விஷயத்தில்தான் மிகவும் பொறுமை காட்டியதாகவே என்னிடம் கூறினன். நானும் உண்மையென நம்பினேன். அந்தோ! ஆனால் நிரபராதியாகிய உம்மை நான் கொடுமைக்குள்ளாக்கிவிட்டேன்......................... சுகுமாரரே! இச்சமயம் தாங்களே என்னிலும் உயர்ந்தவர், நானல்ல. தயைசெய்து என்னை மன்னித்தேனென ஒரு வார்த்தை கூறிவிடும்.

சுகு: அரசே! வேண்டாம்! நான் அதற்கருகனல்ல. ஒருவரைத் தண்டிப்பது, மன்னிப்பது எல்லாம் கடவுள் செயல். தாங்கள் அதை எனக்குச் செய்ததாகக் கருதவில்லை. எல்லாம் கடவுளே அனுபவிக்கிறார் என்பதே எனது துணிபு. அரசே! கடவுளன்றோ தங்களை மன்னிப்பவர். நான் ஒன்றும் அப்படித் தங்கள்மீது நினைத்திருக்கவில்லை. விதியின் வயத்தனவே நடந்ததற்காக நான் ஏன் வருந்தவேண்டும்.

வீர: ஆ! சுகுமாரரே! நான் என்ன சொல்லவிருக்கின்றது? நான் உம்முடன் நியாயமான முறைக்குப் பேசவும் அருகனல்லன். தாம் இவ்விதிக்கு எவ்வாறு உள்ளானீர் என்பதைச் சற்று கூறும்.

சுகு: அரசே! நடந்தது நடந்துவிட்டது. அப்பொழுது என்னை நம்பவில்லை. தாங்கள் இப்பொழுது என்னை நம்புகிறீர். நம்பாதபொழுதே கூறவேண்டிய ஒன்றை நான் இப்பொழுது கூறி ஏற்கனவே வருந்தும் தமது மனத்தை இன்னும் வருத்துவானேன்.

வீர: பெருமையின் பூஷணமே! நான் கூறினும் நம்பாத நிலைமையில் எதைக் கூறுவேன் என என்னிடம் அப்பொழுதே கூறினீர். இப்பொழுது நான் தங்களை நம்புகிறேனெனக் கூறுகிறேன்.' அதை இப்பொழுது சொல்லி விடும். என் மனம் பதறுகின்றது. நடந்த உண்மைதான் என்னவென அறிய ஆவலுடையவனாகவிருக்கிறேன். உமது கைக்குட்டை, அச்சண்டாளியின் அறையில் எப்படி வந்த தென்று கூறும்!

சுகு: அரசே! இன்னும் காமவல்லியம்மாளின் வார்த்தைக்குச் செவிசாய்ப்பவர் எவரேனுமிருப்பின் என் வார்த்தையை நம்பார். தாங்கள் வருந்திக் கேட்பதாற் சொல்லுகிறேன். சந்தர்ப்பம் அப்படியிருந்தது. காம வல்லியம்மாளும் இதையே தங்களிடம் கூறியிருப்பார்க ளென்று கருதுகிறேன். கைகுட்டை அகப்பட்ட அன்று மாலை நான் வழக்கமாகச் சத்தியவல்லியைச் சந்தித்து விநோதமாகப்பேசிக் காலங்கழிக்குமிடத்திற்குச் சென்றிருந் தேன். வழக்கம்போலவே சத்தியவல்லி என் படத்தைப் பார்த்தவண்ணம் சந்திக்குமிடத்தில் நின்றுகொண்டிருந் தாள். நான் சத்தியவல்லி என்றே எண்ணி ஆலிங்கனம் செய்துகொண்டேன். அது என்மீது பெருந்தவறு. நான் கவனித்தபொழுது காமவல்லியம்மாளாகவிருந்ததைக் கண் டேன். என் கை கால்களெல்லாம் பதறியது. உடல் வியர்த்தது. அந்த அவர்கள் அதுவும் என் படத்துடன் எப்படி நின்றிருக்க நேர்ந்தது என்பதையும் நினைக்க நேர மின்றித் துன்புற்றேன். ராணியார் மௌனமாக அந்தப் புரம் நோக்கிச் சென்றுவிட்டார்கள். நான் செய்த தவறு தலுக்காக மன்னிப்புக் கேட்கலாமெனவும், மாலைசெய்த

குற்றத்திற்கேயிருக்க தண்டனை இன்று கிடைத்ததுபோலக் கிடைக்கலாமாயினும், அதைக்காட்டினும் வேறொன்று கிடைக்கப்போவதில்லையென்ற தைரியத்தினாலும் அந்தப்புரம் சென்றேன். மன்னிப்புக்கேட்டு நான்செய்த தவறுதலைத் தங்களிடம் உரைத்துவிடாதிருக்கக்கேட்டேன். அந்தோ! இனிக் கூறப்போவதுதான் விந்தை!.......தான் வேண்டுமென்றே ஏற்கனவே எதிர்பார்த்துத்தான் அப்படி நடந்துகொண்டதாகவும் அது என்மீது குற்றமில்லையென்றும், நான் மன்னிப்புக்கேட்க வருவேன் என்று அறிந்தே தன் வேலையாட்களை வெளியே அனுப்பிவிட்டுச் சித்தமாகக் காத்திருப்பதாகவும், தன்னோடிணங்கும்படிக்கும் என்னை வற்புறுத்தினார்கள். நான் பிடிவாதஞ்செய்து, உயிரிழக்க வேணும் சித்தமாகவிருப்பதாகக் கூறினேன். கடைசியாய் என்னை அப்பொழுது விட்டுவிட்டார்கள். நான் வெளியே செல்லும் அவசரத்தில் கைக்குட்டையைத் தவரவிட்டுச் சென்றிருக்கலாமென நினைத்தேன். மறுமுறை சத்தியவல்லி இறந்ததும் ஒருமுறை என்னரைக்குத் தானே வந்து பலவந்தம் செய்தார்கள். அப்பொழுதும் முன் கூறியதையே கூறினேன். சிறிது நேரத்திற்கெல்லாம் தங்களிடம் ஏதோ உரைக்கப்பட்டு என்னைப் பிடித்துவந்தனர். நான் அப்பொழுது என்ன கூறுவது. தாங்கள்தான் எதை நம்புவீர்கள்? எக்குற்றமாயினும் சரியென விசாரியாமலே ஒப்புக்கொண்டேன். இப்பொழுது தாங்கள் கண்டது மூன்றாமுறை.

வீர: ஆ! அப்படியா செய்தாள் அப்பாதகி! சுகுமாரரே! இவ்வளவையும் என்னிடம் கூறாது இருந்து விட்டீர்...........ஆம் கூறினும் சமயசந்தர்ப்பத்தால் நான்

ஒப்புக்கொண்டிருக்க மாட்டேனென்றும் கூறினீர். அது வும் ஒருவகையில் உண்மைதான். எத்தனை தந்திரம். என் னிடம் பத்தினியைப் போல நடித்தாள் அப்பாதகத்தை! ஐயோ! நான் அப்பொழுதே அறிந்து அரியாது விடுத் தேன். அவள் சிரத்தை!............... சுகுமாரரே! தங் களது நண்பர் சத்தியசீலரெங்கே?

தாதி: அரசே! சுகுமாரர் இதுவரை கூறியது முழு மையும் உண்மைதான். இதற்குப்பின் நடந்தவை வேறி ருக்கிறது. அதை அரசி ஒருவர்தான் அறிவார்கள். ஆனால் அதில் பெரும்பான்மை நான் அறிந்திருக்கிறேன். ஆனால் அவற்றை இப்பொழுது என்னாற் கூற அவகாசமில்லை. எல்லாம் நாளை சபாமண்டபத்தில் கூறுகின்றேன். எனக் கும், சுகுமாரருக்கும் களைப்பாயிருக்கிறது...............நான் தான் அச் சத்தியசீலன்.

[தன் தாதியுடையை மாற்றி நிற்கிறான்.]

வீர: ஆ! சத்தியசீலரே இதென்ன ஆச்சரியம். நீர்தானா எனது அரண்மனை தாதிபோல் வேடமணிந்து இவ்வுண்மையை எனக்கு விளங்கவைத்து உமது நண்பர் சுகுமாரரையும் என்னால் அநியாயமாய் விதிக்கப்பட்ட கொடிய தண்டனையையும் மாற்றியவர். உமது அளவுகடந்த சாமர்த்தியத்தையும் உதவியையும் என்னால் என்றும் மறக்க முடியாது. நான் உமக்கு என்ன கைமாறு செய்யக்கூடும்? நீர் நான் செய்த குற்றத்தை மன்னித்துவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சத்: அரசே! தாங்கள், நான் செய்த இச்சிறுகாரி

யத்திற்காக வென்ன சொல்லுகிறீர்கள். எல்லாம் இறைவன் செயல். நேரமாகிறது நாம் செல்வோம் ராஜ சபா மண்டபத்தில் எல்லாவற்றையும் பேசிக்கொள்வோம்.

வீர: (தனக்குள் துக்கித்துக்கொண்டு) கருணாகரரே தயவுசெய்து நம்முடன் அரண்மனைக்கு வாரும். (சேவகர்களைப்பார்த்து) நீங்கள் இப்பாதகியை சிறையிலிட்டு நாளை சபாமண்டபத்திற்கு கொண்டு வாருங்கள். (எல்லோரும் அவரவர் இருப்பிடம் செல்லல்.)

[காமவல்லி சிறையிலடைபட்டுத் துக்கித்தல்.]

காம: ஆ ஈசனே! நான் பாழும் காமவல்லியிற் கிக்குண்டல்லவா என்ன செய்கிறேறு மென்றும் நினையாமல் மனம்போனவாறு செய்து மூன்று மறியா சந்திரவல்லியையும், கொலைசெய்யவேண்டிய வேற்பாடுகளைச் செய்தும், நிரபராதியான நளினனையும் ஏமாற்றி அவனது மனத்தையும் திருப்பி கொலைக் காளாக்கினேன், இவையனைத்தும் என்னால் அரப்சுகத்திற்காகவன்றோ நடந்தது. என்றாலும் இச்சத்தியசீலன் இவ்வாறு நம்மை யேமாற்றி ஆசையை யேவிடச்செய்து அரசனுக்கும் சாட்டிக்கொடுத்தான். இவனாலன்றோ நமதிரகசியங்கள் யாவும் வெளிப்பட்டு நானும் கொலைக்காளாக நேர்ந்திருக்கிறது. "உண்மை உயிர்காக்கு" மென்றபடி சுகுமாரர் கடைசிவரையும் உண்மையாகவும் சத்தியந் தவராமலு மிருந்ததாலன்றோ உயிர்பிழைத்தார். ஆனால் நானோ சக்கிரவர்த்தினி யென்ற செருக்கினால் நம்மால் எல்லாம் செய்யமுடியுமென்று பலவிதமாக அச்சத்தியவந்தனை சுகுமாரரை கெடுக்கத்தூண்டிய குற்றத்திற்காகவும் நிரபராதிகளின் மேல் அநியாயமாக குற்றஞ் சுமத்தியதற்காகவும்

"பலநாள் திருடன் ஒருநாள் பிடிபடுவா" னென்றபடி இன்று பிடிபட்டு உலகோர் நகைத்து இழிவாகப்பேசி கொலைக்காளாக நேர்ந்துவிட்டது. நான்செய்த இக்கொடிய காரியங்களுக்கு கடவுள் மன்னிப்பது யெங்ஙனம். நான் குற்றமற்றவள் யென்று சொல்லவு மிடமில்லாமல் அரசனே நேரில்பார்த்து விட்டாரே இனிமேல் என்னசெய்ய முடியும், காலைச்சூரிய அஸ்தமனத்திற்குள் நம்தலை துண்டிக்கப்படுவது நிச்சயம். ஆ தெய்வமே! (என்று மூர்ச்சித்துக் கீழே விழுதல்.)

14-வது சீன்.

இடம். அரண்மனை.

காலம். காலை.

[சபா மண்டபத்தில் வீரவர்மனும், சுகுமாரனும் சத்தியசீலனும் ஆசனத்தமர்ந்திருந்தல்.]

வீர: சத்தியசீலரே! நான் சுகுமாரரைப் பார்க்குந்தோறும் என்னால் துக்கஞ் சகிக்க முடியவில்லை. நீர் இன்னுஞ் சில விபரங்களை இன்று சொல்வதாய் சொன்னதை சொல்லக்கேட்டுக் கொள்கிறேன். (2 சேவுகர்கள் காமவல்லியை அரசன் முன் கொண்டுவந்து நிறுத்துதல்.) வீரவர்மன் சேவுகர்களை நோக்கி இச்சண்டாளியை என் முன் நிறுத்தாதீர்கள். இவளை கொலை செய்யாமலா இன்னும் வைத்திருக்கிறீர்கள்? (கவிராயர் பிரவேசித்தல்.)

கவி: அவசரப்படேல்!

சுகு: கவிராயரே வாருங்கள். எங்கிருந்து வருகின்றீர்கள்.

கவி: இன்று நீங்களிருப்பீர்களென்று வந்து சேர்ந்தேன். (வீரவர்மனைப்பார்த்து வணங்கி) அரசே! தாங்கள் அவசரப்படவேண்டாம். எல்லாவற்றையும் நேர்விசாரித்து முடிவு செய்யலாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வீர: சத்தியசீலரே! நல்லவேளையின் பயனாக மேது கவிராயரும் வந்து விட்டார். நீர் விபரங்களைச் சுணங்காமல் சொல்லும்.

சத்: அரசே! சுகுமாரருக்கு நேர்ந்த கஷ்டங்களையும் ஆபத்துக்களையும் விபரமாக சொல்லக்கேட்டீம், நீவிரும் தெரிந்துகொண்டீர்கள். ஆனால் இன்னும் தங்கள் தங்கள் தங்கையும் அனுபவித்த கஷ்டங்களையும், ஆபத்துக்களையும் விபரமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய தவசியமென நினைக்கிறேன்.

வீர: ஆ! என் தங்கையா அச்சண்டாளியைப் பற்றியா? இதோ நிற்கும் இப்பாதகத்தை சம்பந்தப்பட்டதா.

சத்: ஆம் அரசே. (காமவல்லியைச் சுண்டிக்காண்பித்து) இவர்கள் செய்தசூழ்ச்சியே அவ்விருவருக்கும் நேர்ந்த ஆபத்து ஆனால் அவர்களும் நிரபராதிகள்.

வீர: அப்படியா? என்னைப்போல் மடையனுண்டோ இச்சதிகாரியின் வார்த்தையை நம்பி சூழ்ச்சியறியாதன்றோ எனதருமை தங்கையை கொலைசெய்தேன், ஆ! கடவுளே என் மதிகெட்டதே. செங்கோல் விழ்ந்ததே. ஈசா! என்ன செய்வேன். (ஏங்கி சோர்வுற்று கீழே விழுதல், சுகுமாரர். சத்தியசீலர் முதலானோர் பிடித்து ஆசனத்திலிருத்தி மன தெளிவித்தல்.)

சத்: அரசே! தாங்களது களைப்பை ஆற்றுங்கள்.

கருணையினால் எல்லாம் நன்மையாக முடியும். (கவிராயர் வெளியே செல்லுதல்.)

வீர: சத்தியசீலரே! எல்லாம் விதியின் பயன்போ லும்!! நீர் நடந்தவைகளைச் சொல்லும்.

சத்: அரசே! தங்கள் தங்கை சத்தியவல்லியும், நளினனும் கள்ளங் கபடமற்றவர்கள். இந்த காமவல்லி அம் மாவின் சூழ்ச்சியில் சிக்குண்டு தங்கள் ஆக்கினைக்காளானார் கள். அதாவது நம் அரண்மனை தாதி சாந்தா, சேவகனை களினனை காதலிக்கிறாள் என்ற விஷயம் காமவல்லி அம்மா ளுக்குத் தெரிய, அவர்கள் சாந்தாவை கூப்பிட்டு நளினனை விவாகஞ் செய்து வைப்பதாகவும் தன் சொற்படி இருவ ரும் நடக்க வேண்டுமென்றும் அவ்விதம் நடந்தால் தான் வேண்டிய பொருள் கொடுப்பதாகவும் கூறி சம்மதிக்க வைத்து மறுநாள் அதாவது தாங்கள் சத்தியவல்லியைத் தண்டித்த அன்று விவாகமும் செய்துவைத்து தாங்களும் சுகுமாரரும் வேட்டையாடிவருஞ் சமயம் பார்த்து, நளினனை பள்ளியறை மஞ்சத்தில் படுக்கவைத்து அவனிடம் சாந்தா வை அனுப்புவதாகக் கூறி, அவன் தூங்கியபின் சத்திய வல்லி அம்மாளுக்கு தாதி மூலம் சுகுமாரர் வேட்டையி னின்று திரும்பி பள்ளியறையில் சயனித்திருப்பதாய் செய்தியனுப்ப, அவர்களும் அங்குவந்து கள்ளங் கபட மற்ற எண்ணத்தோடு படுத்திருப்பது சுகுமாரர் என்றும் அவரை நித்திரை பங்கஞ் செய்யலாகாது யென்று எண்ணி, அருகில் சயனித்துக் கண்ணயர்ந்தார்கள். அதே சமயத்தில் சுகுமாரரும் உட்பிரவேசித்துப் பார்க்க இருவரும் சயனித் திருப்பதை கண்டு தன் கோபத்தையடக்கி தங்களிடம் தெரி விக்க, தாங்களும் கண்டு மனஞ்சகியாது, நிகழ்ந்தது உண்

மையென் றெண்ணி தண்டனை விதித்தீர்கள்.

வீர: ஆ தெய்வமே! இச்சதிகாரச் சண்டாளியினாலன்றோ என்னுடன் பிறந்த தங்கையையுங் கொன்றேன். (சத்தியசீலரைப் பார்த்து) என்னால் இருக்க முடியவில்லை. இனிமேல் நான் வாழ்வதிற் பயனில்லை. உண்மை யென்னவென்றறியாமற் தண்டித்ததற்கும், ஒரு குற்றமும் அறியாத எனதருமைத் தங்கையை பொருக்கேற்ப சதிவழியில் நடப்பவளையும் சிரச்சேதஞ் செய்யக் கட்டளையிட்டதற்கும், இச்சண்டாள மாயப்பிசாசு காமவல்லி யென்ற பெயருக்கேற்ப காமப்பேய் பிடித்த அநேகியின் மேல் நம்பிக்கை வைத்தன்றோ சந்தேகமேற்பட்டும் அதை மாற்றி இப்பாதகியை உத்தமி யென்றெண்ணி நடந்தேன், செங்கோலை நழுவவிட்டேன்; உடன் பிறந்தாளைக் கொன்ற பாதகன் நான் இனி ஏன் இவ்வுலகில் வாழவேண்டும். அந்தோ!............ ஜெகதீசா!..................

(மூர்ச்சித்தல், களைதெளிவித்த பின்) சத்தியசீலரே இனிமேல் நான் வாழ முடியாது. (சேவர்களைப்பார்த்து) சேவுகர்களே இதோ என்முன் நிற்கும் இவ்வெறிபிடித்த பிசாசை உச்சிப்பொழுதுக்கு முன் சிரச்சேதம் செய்யுங்கள்.

கவி: அவசரப்படேல்!

[சுந்தரவல்லியும், காராயனும், நளனும் பிரவேசித்தல்.]

வீர: ஆ! என் தங்காய் நீ உயிருடனேயே யிருக்கிறாயா? இப்பாதகனை சகோதரனை பார்க்கவும் வந்தாயோ? நீ என்னை மன்னிப்பாயா? (விம்மியழுதல்)

சத்தியவல்லி: அண்ணா ஏன் இவ்வாறு பேசுகின்றீர்கள், அழுகிறீர்கள், என்ன நடந்துவிட்டது. நான் கண்ணால் பார்த்து நீதி விளங்கியபின் அவைகளெல்லாம்

தவரென்று யார் சொல்லமுடியும். யெல்லாம் விதிப்படி நடக்கிறது. தயவுசெய்து வருத்தப்பட வேண்டாம்.

வீர: கவிராயரே எங்கிருந்து இவர்களைக் கூட்டி வந்தீர்?

கவி: அரசே எல்லா விபரமும் சத்தியசீலர் தெரிவிப்பார்.

சத்: அரசே! உண்மையையும், நியாயத்தையும் நிலை நிறுத்தும் பொருட்டு நானும், எனது நண்பர்கள் சிலரும் பொய் சொல்லியும் திருட்டுத்தனமான வேலைகள் சில செய்யவும் நேரிட்டது; சமூகத்திலிருந்து அவைகளை மன்னிப்பதாக வாக்குக் கிடைத்ததும் சில ரகசியங்களை சொல்லி விடுகிறேன்.

வீர: அப்படியே மன்னித்தேன், நடந்தவைகளைத் தாராளமாகச் சொல்லாம்.

சத்: நான், காமவல்லி மஹாராணியாருக்கும், சுகுமாரருக்கும் நடந்த விஷயங்களை நன்ருய் கவனித்து வந்தேன். தாங்கள் நளினியையும், சத்தியவல்லியையும் தண்டித்ததை பார்த்தலும் அரசர் நடந்த சூதுகளை கவனியாதிருக்கிருரென்று நினைத்து சமயம் வாய்க்கும் போது விளக்கிச் சொல்வோமென்று அன்றிரவே சிறைச்சாலைக்குள் புகுந்து, இருவரையும் அப்புறப்படுத்திவிட்டு பின் காவலாளிகளுக்கு தெரியும்வண்ணம் கதவுகளை உறக்க மூடி ஓடிவிட்டேன். அவர்கள் கைதிகள் தப்பியோடி விட்டதாகவும் தங்கள் தலைகள் நாளை பூமியில் உருண்டுவிடுமே என்றும் கவலைப்படும் சமயம் நான் சென்று தேறுதற் கூறி; கொலைசெய்து விட்டதாக பொய்சொல்லி மறைக்கும்படியும் நான் சாக்ஷியாக யிருப்பதாகவும் சொன்னதின் மேல் மறுநாள் அவ்வறே

செய்தார்கள். அவ்விதம் அவர்கள் பிழைத்தபடியால் ஒப்பந்தப் பேச்சுப்பிரகாரம் நான் அவர்களை உதவிக்கு நாடினுல் உயிரைக்கொடுத்தேனும் நிறைவேற்ற வேண்டுமாகையால் சுகுமாரரைத் தூக்கிலிடப்போகும் சமயம் நான் சொல்லும் வரை நிறுத்தச்சொல்லிவிட்டு தங்களிடம் தாதி மாதிரி பின்னர் நடந்த விஷயங்களை நேரில் விளக்கியதும் தெரிந்த விஷயமே. நளினியையும், சத்தியவல்லியையும் கவிராயரிடம் ஒப்புவித்து தலைமறவாய் இருக்கும்படி யேற்பாடு செய்திருந்தேன். இப்போது திருவருள் உங்கள் யெல்லோரையும் கூட்டிவைத்திருக்கிறது. இதுவே தங்களுக்கு நான் சொல்லவேண்டியது.

காம: பிராணநாதா என்னை மன்னியுங்கள். (கீழே விழுதல், காவலாளிகள் தூக்க பிணமாயிருத்தல்.)

விர: காவலாளர்களே இப்பிணத்தை அப்புறப்படுத்துங்கள் (என்று கட்டளையிட்டு சுகுமாரனையும் சத்தியவல்லியையும், பார்த்து) மைத்துனரே, என்னை மன்னித்து; சத்தியவல்லியை ஒப்புக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

சுகு: திருவருள் கூட்டிவைத்த பின்னும், தாங்கள் கட்டளையிட்ட பின்னும் நான் மறுக்கக்கூடியவனல்ல. அப்படியே செய்கிறேன்.

கவி: அரசே! எல்லாம் நன்மையாகவே முடிந்து வருகிறது. பிரிந்து ஒருமித்த காதலர்களும் தாங்களுடைய அரசும் நீடித்திருக்குமாறு கடவுளை பிரார்திக்கிறேன். எல்லோரும் அந்தப்புரம் சென்று ஆனந்தமாயிருத்தல்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

75

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

"சூப்பர்பைன் காப்பி"

சூப்பர்பைன் காப்பியை உபயோகியுங்கள்! அது என்?

இது பில்லைகளாகச் செய்யப்பட்டது சேதமுமில்லை, சிரமமுமில்லை, அதிகச் செலவுமில்லை. ஸத்துள்ள பொடி எப்பொழுதும் ரெடி. அசதியைப்போக்கி ஆரோக்கியத்தைத் தரும் அமிர்த பானம். சிக்கன முறையைத் தழுவிய சிறந்தபானம். பணம் ஒரு மடங்கு, குணம் பலமடங்கு.

தயாரிக்கும் முறை

மூன்று கோப்பை காப்பி பானத்திற்கு ஒருபில்லை போதும். ஒரு பில்லையை யெடுத்துக் கோப்பையில் போட்டு கொதிக்கும் வெந்நீரை ஊற்றி வேண்டிய அளவு பால், சீனி சேர்த்துச்சாப்பிடலாம். கடுங்காப்பி வேண்டுமாயின், வெந்நீரை குறைவாக உபயோகிக்க வேண்டும். அதும், கைகளினால் தொடப்படாதது மாயிருப்பது குறித்தே, இதற்கு "சூப்பர்பைன் காப்பி" என வழங்கப்பட்டு வருகிறது.

காலணாவுக்கு மூன்று கோப்பை
நேர்த்தியான காப்பி

எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

ஏஜண்டு இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை.

அ. ல. கோ. அருணாசல நாடார்,
மானேஜிங் புரொபரைட்டர்,
அய்யனார் & கம்பெனி, தூத்துக்குடி.